சுதாமர் சரிதை

S. லக்ஷ்மணன்

சுதாமர் சரிதை

இது

மாணுக்கர்கள் உபயோகத்துக்காக

ஸ்ரீமான்

S. லக்ஷ்மணன்

எழுதியது

Approved by the Text-Book Committee, Madras

உ

[விலை அணு ௧0

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1929

58-2

நூன்முகம்

எல்லாம்வல்ல இறைவன்பால் ஒருவனுக்குத் தோன்றும் பக்திக்கேற்பவே அவரது அருளும் அவன்பால் அமையும் என்கிற உண்மையை இந்தச் சரிதம் வலியுறுத்தும்.

வியாச முனிவருடைய குமாரரும், பிறந்தபொழுதே துறந்த பெருமை வாய்ந்தவரும், சாந்தகுண சீலருமாகிய சுகர் என்பவர், சந்திரகுலத்தில் உதித்தவரும், நிரம்ப ஜீவகாருண்யத்துடன் குடியோம்பிச் செங்கோல் புரிந்து வந்தவருமாகிய பரீக்ஷித்து மகாராஜனுக்கு எடுத்துக்கூறிய ஸ்ரீமத் பாகவத புராணத்தில் பக்தியின் மேன்மையைச் செவ்வனே விளக்கும் அநேகம் சரித்திரங்களுள் சுதாமர் என்ற முனிபுங்கவருடைய இச்சரிதையும் ஒன்றாகும். இம்முனிபுங்கவர் கிழிந்த ஆடையையே திருப்தியாக அணிந்துகொண்டிருந்தவராகையால், இவர் 'குசேலர்' என்ற நாமத்தாலும் கூறப்பெறுவர்.

இச்சரிதத்தில் கூறியுள்ள நிகழ்ச்சிகளையும் பிற விசேஷங்களையும் உலகோர் கண்டறிந்து களிக்கும்படி இக்காலத்தில் இந்தக் கதை ஸினிமா படங்கள் மூலமாகவும் காட்டப்பெற்று வருவதை யாவரும் அறிந்திருக்கலாம்.

இத்தகைய உத்தமர் சரிதத்தை மாணவர்கள் படித்தறிந்து இன்புறுமாறு இது செவ்விய தமிழ் நடையில் எழுதலாயிற்று. சரிதத்தின் இடையே பூத்துள்ள குணவிசேஷங்களின் நறுமணத்தையே மதித்து, இதனைப் பெரியோர் பாராட்டுவார்களெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்தச் சரிதத்துட் காணும் விஷயங்களை மாணவர்கள் எளிய நடையில் எழுதிப் பயில்வதற்குச் சாதனமாக இந்நூலின் அநுபந்தத்தில் சில வியாசக் குறிப்புகளும் சேர்க்கப்பெற்றுள்ளன.

பொருளடக்கம்

சுதாமர் சரிதை

அத்தியாயம்—1

அவந்திமாநகரம்

கங்கையைப்போன்ற புனித நதிகள் பல தன்னிட மிருந்து தோன்றப் பெற்றதும், தேவர்கள் விரும்பிவந்து உறைவதற்கு இருப்பிடமாக வுள்ளதுமான, ஹேமாத்ரியை வடவெல்லையாக வுடைய இப் பரதகண்டத்தைப் புண்ணிய பூமி என்று கூறுவார்கள். இதற்குப் பூஷணமாக விளங்கு வன ஏழு நகரங்கள். அவற்றுள்ளும், நிலமகளுக்கோர் திலகம்போல விளங்காநின்றதும், மிகப் பொலிவுபெற்று அழகு நிரம்பிய மாடமாளிகைகள் அமையப்பெற்றதுமான அவந்திமா நகர் என்று ஒரு பெரிய பட்டண முண்டு. நீர்வளம், நிலவளம், குடிவளம் முதலியன நிரம்பிய அந்த ஊரிலுள்ளோர் எப்போதும் பட்டு பீதாம்பரங்களையும், ரத்ன ஆபரணங்களையும் தரித்தவர்களாய் விளங்கினர்கள். அதனால் உண்டாகும் அழகையும் காந்தியையும் நோக்கி, அதுவே சுவர்க்கலோகம் என்று மதிக்கும்படி இருந்தது.

மாதம் மும்மாரி பொழியும் அவ்வூரில், முற்றிப் பருமனுகவுள்ள நெற்பயிர் ஓங்கி உயர்ந்து பசுமையாக நிற்பது கண்களுக்கு நிரம்ப ஆனந்தத்தைக் கொடுக்கும். வயல்களுக்

குப் பாய்ச்சப்பெற்ற தண்ணீர் இங்கு மங்கும் தேங்கி நிற்கும் நிலைகள் வயல்களின் இடையே எங்கும் காணப்படும். செழித்தோங்கிய நெற்கதிரிலுள்ள தானியங்களின் பிரதி பிம்பத்தை வயலில் நிறைந்திருக்கும் நீரில் பார்க்க, மனதுக்கு மிக்க இன்பத்தைத் தரும்.

தேனைச் சொரியும் தாமரைப்புஷ்பங்கள் நெருக்கமாக இருக்கும் தடாகங்களும், நறுமணம் வீசும் புஷ்ப தருக்கள் நிரம்பிய பூஞ்சோலைகளும், நெற்பயிருள்ள வயல்களும் எங்கும் நிறைந்திருந்தன.

இவையன்றி, மரவகையில் உயர்ந்து ஓங்கி வளரும் வாழைமரங்களும், கமுகுமரங்களும், கரும்பும் நகரத்தில் மாளிகைகள்தோறும் வெளிப்புறத்தில் நாட்டப்பெற்று எப்போதும் மங்களகரமான தோற்றத்தை உண்டுபண்ணின. இவ்வாறு வாழை, கமுகு முதலியவற்ருல் அவ்வூரிலுள்ள தனவந்தர்கள் தத்தம் வீடுகளின் முன்பக்கத்தையும், சூழ்ந்த பாகத்தையும் அலங்காரம் செய்துகொண்டு, செல்வச் சிறப்போடு களிப்புற்று வாழ்ந்திருந்தனர். நகரத்துக்குப் புறம்பே நின்ற சோலைகள் ஓங்கி உயர்ந்து வளர்ந்து விண்ணுலகத்திலுள்ள கற்பக விருக்ஷத்தையே எட்டிப் பிடிப்பனபோலிருந்தன. அவற்றில் குளிர்ச்சியைத் தரும் பச்சிலைகள் நிரம்பிய மரங்களும், இனிய மகரந்தத்தையுடையனவும் பலவகை வர்ணங்களோடு புஷ்பிப்பனவுமான புஷ்ப மரங்களும் நிரம்பியிருந்தன. புஷ்பங்களில் உண்டாகும் மதுரமான தேனையும், தேன்போன்ற இன்சுவை பொருந்திய பலவகைக் கனிவர்க்கங்களையும், இன்னும் வேறு காய்கள் முதலியவற்றையும், குளிர்ச்சியைத் தரவல்ல இளநீரையும், சுவர்க்கலோகத்தில் உள்ளவரும் அங்கிருந்துகொண்டே உண்ணும்படி, அமைந்த

னவோ என்றெண்ணும்படி அவ்வளவு உயரம், அவந்தி நகரின் சோலைகள் நாடோறும் உயர்ந்து ஓங்கி வளர்ந்தன.

இவ்வளவு சிறப்புற்றோங்கிய அந்த நகரத்தைச் சுற்றி நீராரணும் நிலவரணும், நகரத்தின் பெருமைக்கேற்ப விளங்கின. அந் நகரத்தைச்சுற்றிலும் பரந்து நிமிர்ந்த மதில் இருந்தது. அது வானையளாவி நிமிர்ந்துநின்ற தோற்றம், கடல்நீரும் ஊருக்குள் பிரவேசியாமல் இருக்கும்பொருட்டு, ஆக்கப்பட்டதோர் தடையோ என மதிக்கும்படி இருந்தது. அந்த மதிலைச் சுற்றியுள்ள அகழின்கண்ணுள்ள நீரில், தேன் பொருந்திய நீர்ப்பூக்கள் பலதிறப்பட்டன நிறைந்திருந்தன.

நகரத்து வாழும் மாந்தர்களின் சிறுவர்கள் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்களும்; பெண்பிள்ளைகள் ஆடவும் பாடவும் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பெற்ற கட்டிடங்களும், முப்பற்றையும் ஒழித்து, உலகத்தைத் துறந்து, கடவுளடியை எப்போதும் தியானம் செய்பவர்க்குரிய மடாலயங்களும் ஆங்காங்கு இருந்தன.

மாடமாளிகைகளில் வாழும் ஸ்திரீகள், கிளிகளோடு பேசுவதையும், அவற்றுக்கு இனிய பாலடிசிலைக் கொடுப்பதையும் ஒருவகைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். அவற்றின் சிறகுகளின் வர்ண அலங்காரத்தாலும், ஜனங்கள் சொல்லும் வார்த்தைகளை யாதொரு பயமுமின்றி அவைகளும் திருப்தியாகக் கற்று அவற்றைத் திருப்பிக் கூறும் அழகினாலும், ஜனங்கள் கிளிகளை மிகுதியும் பாராட்டி வளர்த்துவந்தார்கள். அந்நகரிலுள்ள மாதர்கள் தாங்கள் வளர்க்கும் அருமையான கிளிகளை, பொன்னாலும் மணியாலும் ஆக்கப்பட்ட அழகுவாய்ந்த கூடுகளில்விட்டு, அவற்

ருடன் கொஞ்சிக்கொண்டு காலம் கழித்தனர். தருமம் தழைத்தோங்கும்படி செங்கோல் செலுத்திவரும் அரசர்கள் நல்லோரைக் காப்பாற்றி, துஷ்டர்களை அடக்குவார்கள் அன்றோ? குற்றம் செய்தோரைத் தண்டித்துச் சிறையி லடைத்து வைத்தாலும் அவர்களுக்குப் போதிய நல்லுண வையே கொடுப்பார்கள். அதுபோலவே, மேற்கூறியபடி கிளிகளைக் கூட்டில் அடைத்துவைத்திருந்தபோதிலும், அவற் றிற்கு வேண்டிய உருசியுள்ள ஆகாரத்தையும், நற்கனிகளை யும் அம்மாதர்கள் தினந்தோறும் அவற்றிற்குக் காலந் தவறா மல் உதவிவந்தனர். அந்தக் கிளிகள் மிக்க இனிமை தரும் மொழிகளால் அம்மாதர்களுடன் மனம் உருகப்பேசுவது, சிறைபட்டிருப்பினும் தம்மை அந்தச் சிறையினின்றும் மீட் டலே நல்ல தருமமென்று கூறுவதுபோலிருந்தது. இப்படி அவை பேசக்கேட்ட அம்மாதர்களும் மனத்தைக் கவரும் அவற்றின் மதுரமயமான மொழிகளுக்கு மனமிரங்கினவர்க ளாய், உடனே அவற்றைக் கூடுகளினின்றும் வெளிப்படுத் தித் தங்கள் கைகளின் மணிக்கட்டில் தாங்கிக்கொள்வார்கள்.

இன்னும் அவ்வூரில் அநேகம் கடைகளும், அங்கே பல வகைத்தான உணவுப்பொருள்களும், இவை நிரம்பிய அங்கா டித் தெருக்களும் இருந்தன. பலவேறு தேசத்துப் பொருள் களை அரிதிற்றேடிக் கொணர்ந்து, தருமமான இலாபத்தை வைத்து விற்று ஒன்றை அநேகமாகப் பெருக்கவல்ல புத்தி கூர்மை மிகுந்த வணிகர்கள் வசிக்கும் தெருக்களும் அநேக மிருந்தன. மற்ற வருணத்தினர்களும் தத்தம் தெருக்களில் புகழுடன் கூடி இனிது வாழ்ந்து வந்தனர்.

அரண்மனையுள்ள தெருவானது அந்நகரத்தின் ஒரு பக் கத்திலிருந்தது. வேந்தர் வாழ்மறுகில், அரசவம்சத்தினர் மிக்க புகழ்பெற்றவர்களும், செல்வவகையில் மிக உயர்ந்தவர்

களும், யுத்தத்தில் புலியையொத்த பராக்கிரமம் உடையவர்களுமாக வாழ்ந்திருந்தனர். அவர்கள் கொடையில் மேகத்தை ஒத்திருந்தனர். எப்படி மேகம் மழையைப் பொழிந்து, தன்ஞல் ஜனங்கள் அடையும் நன்மைக்குப் பிரதியுபகாரமாக அவர்களிடமிருந்து ஒன்றையும் எதிர்பார்க்காமல் இருக்கிறதோ, அதைப்போலவே, மேற்கூறிய அரசர் மறுகில் உள்ளவர்கள் எல்லாரும் பிரதிபலனை யோசியாமல் தாம் நல்வழியிற் பெற்ற பொருளைத் தக்கவர்களுக்கு வேண்டிய வண்ணமே தானதருமங்களில் வழங்கிவந்தனர்.

அவர்கள் குணச்சிறப்பு இவ்வாறிருக்க, அவர்கள் வாழ்ந்திருந்த வீதிகளில் தேரோடுவதனுலுண்டான ஓசையும், யானைகளின் ஆரவாரமும், குதிரைகள் கனைக்கும் தொனியும், வீரக்கழல்களை அணிந்த வீரர்கள் தங்களை எதிர்ப்பாருக்குத் தமது உடல்வன்மையையும், மனேபலத்தையும், அஞ்சாத நெஞ்சுடைய கடைப்பிடியையும் நன்குணர்த்தவேண்டித் தத்தம் தோள்களைக் கைகளால் தட்டிக்கொடுப்பதனுல் உண்டான பேரோசையும், பாதச்சிலம்புகளை அணிந்துள்ள மாதர்கள் நடப்பதனுலுண்டாகும் சிலம்போசையும், வாத்தியங்களுள் முதன்மையாகக் கருதப்படுவதும், வெண்டாமரையாள் விரும்பி வாசிப்பதுமான வீணை வாத்தியத்தை, ஆங்குள்ளார் சுருதிகூட்டி வாசிப்பதால் எழுந்த இனிய நாதமும் கூடி, பலவகைத்தான ஒலிகளும் திரண்டு, கடலோசையையும் அடக்கத் தக்கனவாக ஆரவாரம் மிக்கோங்கியது.

அந்த நாட்டிலுள்ளோர், அளகாபுரிக்கு அதிபதியாகிய குபேரனைப் போன்றவர்கள் பூமியிற் பிறந்தா ரென்னும்படி, செல்வத்தில் மேம்பட்டும், ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷ

னைப்போலவே கல்வி கேள்விகளிற் சிறந்துவிளங்கியவர்களாகவும், அழகில் குமரக் கடவுளைப்போன்றும் விளங்கினர்.

அவ்வூரிலுள்ள வீரர்களுள் வயது முதிர்ந்தவர்கள், தமது பொழுதுபோக்குக்காக, வெண்மை நிறமுள்ள வலிய தந்தங்களையுடைய யானைகளைச் சண்டை செய்யவிட்டுப் பந்தயம் வைத்து ஆடுவார்கள். மற்ற இளையவர்கள், பலமுள்ள வளைந்த கொம்புகளையுடைய ஆடுகளை முட்டவிட்டும், செவந்த கொண்டையுள்ளதும் கால்களில் முட்களை யுடையதுமான சேவலைச் சண்டைக்குவிட்டும், விநோதமாகப் பந்தயம் கெலிப்பார்கள். அவ்வீரர்களுள் சிறுவயதுள்ள பிள்ளைகள், காடையைப் பந்தயம் விடுவார்கள்.

இவ்வாறு பலவேறு வீதிகள்கொண்ட அகன்ற ஊரின் இயற்கையழகும் பெரிதும் மனதைக் கவரக்கூடிய பொலிவு உள்ளதாகவே இருந்தது. மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், பாரிஜாதம், மனோரஞ்சிதம், ரோஜா, செவ்வந்தி முதலிய பலவகைப்பட்ட நறுமணம் வீசும், மலர்ந்த புஷ்பங்கள் நிறைந்த நந்தனவனங்களும், தண்ணீர் நிரம்பி, தாமரை, நீலோற்பலம் பூத்த இனிய காட்சியை யுடைத்தானதாயும், அழகாகவும் வரிசையாகவும் படிகள் நிறைந்துள்ளதுமான தடாகங்கள் எங்கு மிருந்தன. இவ்வாறு கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்ற நான்குவகைப் புஷ்பங்கள் எங்கும் மலர்ந்து நறுமணம் வீசாநின்றன.

ஊருக்கு நாற்புறமும் பிரகாசமான உயர்ந்த கோபுரங்கள் இருந்தன. ஆலயங்களில் கிரமப்படி அபிஷேகம், பூசை, நைவேத்தியம் முதலியன தவறாமல் நடக்கும். அவை நடைபெறுங் காலையில், கோயில்மணியின் ஓசையும், இனிய கானங்களின் ஓசையும், கடவுளைத் தொழுவார்

பாடுமிடத்து ஓசையும், மனத்தை உயர்த்தி உள்ளத்துக்கு அமைதியைத் தரும்.

அவ்வூரிலுள்ளோர் ஒழுக்கங்களாற் சிறந்திருந்தார்கள். தினந்தோறும் அதிகாலையில் துயிலொழிந்து, வெண்மை நிறமுடையதும் பரிசுத்தமான நீருள்ளதுமான தடாகங்களில் நீராடியபிறகு, நந்தனவனங்களை அடைந்து, அங்குள்ள நறு மணம் வாய்ந்த புஷ்பங்களைக் கொய்து, திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனை முக்காலங்களிலும் தியானித்து, தமது முழுமனத்தையும் அவர்பாற் செலுத்தி தோத்திரம் செய்துவருவார். இவ்வாறு, 'நறுமாமலர் கொய்து நீரின்மூழ்கி நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தி' என்றிவ்வாறுகப் பெரியோர்களால் போற்றப் பெற்ற ஒழுக்கத்தைக் கைக்கொண்ட அவந்திமாநகர்வாசிகள் யாதொரு குறையுமின்றி இருந்தனர்.

இவ்வாறு பலவகை வளங்களாலும், ஒழுக்கத்தாலும் சிறப்புற்று விளங்கும் அந்நகருக்கருகில் பெரிய காடு ஒன்று உண்டு. சந்தனமரம், காட்டுவாழை, மகிழமரம், வில்வமரம், வெண்கடப்பமரம், வெட்பாலை, நாவல், மா, பலா, கமுகு, அரசமரம், மாதுளை, விளா, தென்னை, மூங்கில், ஆச்சா, தேக்கு முதலிய பலவகை மரங்கள் அக்காட்டில் அடர்ந்தி ருந்தன. அம்மரங்களில் உண்டாகும் புஷ்பங்களினின்றும் பொழியும் தேனும், மரக்கிளைகளின் உச்சியில் தேனீக்கள் கட்டியிருந்த தேன்கூண்டுகளிலுள்ள தேனும், அநேகம் வகைக் கனிவர்க்கங்களிலிருந்து சொட்டிக்கொண்டிருக்கிற தேனும், இடையிலுள்ள ஆற்றுகளின் நீரும் ஆகிய இவை எல்லாம் கூடிய பெருக்கம் ஒரு பெரிய கடல்போலப் பரந் திருந்தது. பழவர்க்கங்களோ தேவர்களும் விரும்பத்தக்கன வையாய், காண்பவர் வாயில் நீர் ஊறும்படியான உருசியுள்ள

னவாய், அழகாகவும் பழுத்தும் இருந்தன. கண்ணுக்கினிய தாய், பரிமளம் வீசும் தாமரைப் புஷ்பத்திலிருப்பவனுகிய நான்முகங்களுடைய பிரமதேவனுக்குப் பிறகும் அந்த வனத்துக்கு அழிவில்லையென்று புகழ்ந்து கூறும்படி, அதில் நறுமணமுள்ள பலவகை மலர்களும், மதுரம் மிக்க கனிகளும், தளிர்களும், அடர்ந்த இலைகளும், காய்களும், பிஞ்சுகளும் நெருங்கி அம்மரங்களில் இருந்தன. இயல்பாகவே வெகு உயரத்தில் தாவிக்குதித்துச் செல்லக்கூடிய குரங்குகளாலுங்கூட உச்சியைக் கண்டுபிடிக்க முடியாதவண்ணம் அநேகம் மரங்கள் அந்த வனத்தில் ஓங்கியிருந்தன.

இத்தகைய வளமை பொருந்திய அவ்வனத்தின் மத்தியில் பெரிய மலை ஒன்று இருந்தது. அந்த மலைச்சாரலில் வில் வித்தையில் தேர்ச்சிபெற்ற வேடச்சிறுவர்களும், புலிக்குட்டிகளும், குட்டியானைகளும் ஒன்றினிடமொன்று யாதொரு அச்சமுமின்றி சிநேகமாகக்கூடி விளையாடுவது வழக்கம். அவ்வேடர்கள் அங்குள்ள மதுரமான பழங்களையும் கிழங்குகளையும் ஆகாரமாகக்கொண்டு, மிருகங்களின் தோலை ஆடையாக உடுத்திக்கொண்டனர். இதனுல், அவர்கள் அக்காட்டில் ரிஷிகளைப்போலிருந்தனர் என்றும் சொல்லலாம். அம்மலையில் கொடிய மிருகங்களாகிய யானை, புலி, சிங்கம், யாளி முதலியன இருந்தன. அவற்றின் ஆரவாரம் பெருத்த முழக்கமானது மலையின் எதிரொலியோடு சேர்ந்து எங்கும் பரவும். யானைக்கொம்பு, மூங்கில் முதலியவற்றினின்று உண்டாகும் முத்துக்கள் எங்கும் கீழே சிதறி விழுந்து கிடந்து, இவ்வுலகின் இருட்டைப் போக்கவல்ல அவ்வளவு வெண்மை நிறமுள்ளனவாயிருந்தன.

இப்படிப்பட்ட உயர்ந்த மலையின் பக்கலில், அந்தணர்கள் கூடிவாழ்வதோர் ஊர் ஒன்று இருந்தது. அவ்விடத்தில்

வேதகோஷமும், யாகங்கள் செய்யும்போது ஓதப்படும் மந்திரங்களின் ஓசையும், தேவர்களைக் கூப்பிட்டு அவர்க்கு அவிர்ப்பாகம் கொடுக்கும் சப்தமும், கடைசியாக ஆசீர்வாதம் செய்யும் வழக்கமும் எப்போதும் இருந்தன. ஆங்குள்ளோரில் தருப்பையைச் சிறுக நறுக்கிக்கொண்டு வருபவர் சிலர்; ஓமத்திற்கு வேண்டிய சமித்தைப் பொறுக்கிச் சேர்ப்பவர் சிலர்; பசுவின் பாலைக் கறப்பவர் மற்றுஞ் சிலர்; அழகான நந்தனவனங்களை அடைந்து, ஆங்குள்ள மணம் பொருந்திய புஷ்பங்களைக் கொய்து வருவர் சிலர். ஆலயங்களுக்குப் போய் தொண்டு புரிதல், யோகத்தில் இருத்தல், மாணுக்கர்களுக்கு அன்போடு கற்பித்தல், வேதம் ஓதுதல் முதலிய பல காரியங்களில் அங்குள்ளவர்கள் தம் மனத்தைச் செலுத்தி வந்தனர்.

அத்தியாயம்—2

சுதாமரும் அவர் குடும்பமும்

இவ்வளவு பெருமை வாய்ந்த அம்மலைப் பிரதேசத்தின்கண் முனிவர் குலத்தில் சுதாமர் என்ற நாமம் பூண்ட ஒரு சாது அவதரித்தார். ஆயினும், இவர் அநேகம் கிழிந்த துண்டுகளை ஒன்றோடொன்றாகப் பொருத்தி நூலால் தைத்து, அந்த வஸ்திரத்தையே நல்ல ஆடையாகத் தரித்துக் கொண்டிருந்த காரணம்பற்றி, 'கிழிந்த ஆடையைத் தரித்துக்கொண்டவர்' என்ற பொருள் கொண்ட 'குசேலர்' என்ற பெயரிட்டே சுதாமரைக் கூப்பிடுவார்கள்.

முன்பு தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில், அதிலிருந்து பூரண சந்திரன் வெகு பிரகாசத்துடன் தோன்றியதை யொப்ப, இவ்வழகு வாய்ந்த குசேலர் என்பவர் முனிவர் குலத்தில் புகழுடன் தோன்றினர். திருப்பாற்கடலில் ஆதிசேஷன்மீது அறிதுயில் புரியும் திருமாலின் திருவடிகளைத் தவிர வேறொன்றையும் இவர் மனத்தில் நினைக்கவுமாட்டார். மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் பஞ்சேந்திரியங்களையும் தம் வசப்படுத்தித் தெய்வ வழிபாட்டிலேயே பொழுதைச் செலுத்தும் இயல்பினர். ஜீவகாருண்யம் நிரம்பியவராய், எப்போதும் நிலையுள்ள வேதங்களை மாணாக்கர்களுக்குக் கற்பித்தலையும், ஜீவகோடிகளுக்கு இனியவை புரிதலையுமே தமது தொழிலாகக்கொண்டிருந்தார். எக்காலத்தும் மறந்தும் தீங்கு செய்ய மனம் சகியார். தவச்சிரேஷ்டர்களுக்கு முக்கியமாக விளங்கும் குண

மாகிய அடக்கம் என்பது குசேலரிடம் இயற்கைக் குணமாகவே அமைந்திருந்தது. மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் தீயன ஒழித்தலையே அடக்கமென்று சொல்வார்கள். மறந்தும் இன்னா செய்தோருக்கும் தீங்கு செய்யாதிருத்தற் குணமாகிய பொறுமையை வகித்தவர். எல்லோரிடத்தும் அன்பு பாராட்டும் சுபாவமுடையவர். மனத்தைப் புலன்கள் வழிச் செல்லவொட்டாமல் கடவுள் பால் நிற்கச் செய்தவர். தம்மைவிட அதிகப்பொருள் படைத்தவரிடம் யாதொரு அழுக்காறும் இல்லாதவர். பிறப்புக்கு ஏதுவாகிய வெகுளி முதலிய குற்றங்களை முற்றிலும் ஒழித்தவர். இவ்வாறு சீலர்களுக்குள்ளே மஹா சீலராக விளங்கா நிற்பவர். நிகரற்ற வேதங்களை யெல்லாம் செவ்வனே ஐயந்திரிபறக் கற்று, தம்மை ஆசிரியராக அடைந்தவர்களுடைய சக்தி வன்மையையும் குணவிசேஷங்களையும் நன்காராய்ந்து, கற்பவை பயன் பெறுமாறு கற்பிக்கும் சாந்தீபன் என்ற நாமம் பூண்ட முனிச்சிரேஷ்டரிடம் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம் ஆகிய வேதங்களைப் பழுதற ஒழுங்காகக் கற்றவர். இந்த முனிபுங்கவரிடம் குசேலர் மாணாக்கராக இருந்த அக்காலத்தில் அவருடன் நீலமேகத் திருமேனியோடு கூடிய ஸ்ரீ கண்ணபிரானும், அந்தத் தவச்சிரேஷ்டரிடம் பல கலைகளிற் பயின்று வந்தார்.

இப்படிக் கற்றுவரும் நாளிலே, உலக வாழ்க்கையிலே வெறுப்புற்று, அரிய பெரிய தவங்களை இயற்றியும், இம்மை மறுமை என்ற இருமையின் பயன்களை யெல்லாம் அறவே யொழித்துக் கடுமையான விரதங்களையும் நோன்புகளையும் அநுஷ்டித்துக் கொண்டும், எப்போதும் அக்கினிக்கெதிரிலிருந்துகொண்டு ஓமங்கள் முதலியவற்றைத் தினந்தோறும் கிரமப்படி செய்தும் வந்தகாரணமாக, குசேலரது சரீரம் மிக

வும் இளைத்து, சோர்ந்து, எலும்பு நரம்புகள் முதலியவை வெளியே தோன்றும்படி அவ்வளவு வாடியிருந்தார்.

'வைகறையாமந் துயில் ஒழிந்து' என்று ஆன்றோர் கூறிய நியதிப்படியே குசேலர், பகலவன் அம்மலையின் உச்சியில் தோன்றுவதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னரே துயிலொழிந்து சுத்த நீரில் கை, கால் முதலியவற்றைச் சுத்தம் செய்துகொண்டு, சாஸ்திர விதிப்படி மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு நல்ல தடாகத்தில் ஸ்நானம் செய்து, கடவுள் வழிபாடு முதலியவற்றை உரிய காலங்களில் நியமந் தவறாமற் செய்துவந்தார்.

இவ்வாறு ஐம்புலன்களாகிய பரிசம், ஊறு, ஒளி, வாசனை, ஓசை என்பவற்றைத் தம் வழிப்பட்டு நிற்கச் செய்தும், மனத்தை அவற்றின் வழியே செலுத்தாது தம் வசம் அடக்கியும் வந்த குசேலர் பெருமானது புகழைக் கொண்டாடாதவர் ஒருவருமேயில்லை. இவர் விசேஷ பொறுமையை மேற்கொண்டு, அரிய தவத்தை விரும்பி, சுகம் துக்கம் என்ற இரண்டனையும் ஒன்றாகவே பாவித்து, உலகத்தின் தத்துவங்களை உள்ளபடி நன்கறிந்து, வீடு காடு முதலியவற்றை யெல்லாம் ஒரே மாதிரியாகவே நினைத்துக் காலங்கழிக்கலாயினார்.

உத்தமநெறியில் காலத்தைக் கடத்தி விளங்கும் குசேலர் பெருந்தகை, தாம் கொண்ட தவநெறிக்கு அநுகூலமாக இருப்பதற்கு, ஓர் அழகிய கன்னிகையைத் தர்மபத்தினியாக மணம்புரிந்து, இல்லறம் நடத்தினார். அவள் கணவன்பால் அன்பு, அவரைப் பாதுகாத்தலில் கருத்து, சாந்தம் முதலிய நற்குணங்களுக்கெல்லாம் பிறப்பிடமாக விளங்கினாள். அவள் பெயர் சுசீலை. நற்குண நற்செய்கைகளாற் சிறந்து விளங்கிய அம்மாது சிரோமணி தனது குண விசேஷத்தால், அவளே

பெண்கள்நாயகம் என்று உலகோர் புகழும்படி குடும்பத்தை நடத்துதற்கு வேண்டிய குணங்கள் எல்லாம் ஓர் உருவமெடுத்துப் பிறந்ததுபோன்றிருந்தாள். மேலும் குற்ற மற்ற குலத்தில் உதித்தவள்; அதிதிகளை இன்புற உபசரிப்பவள்; கணவனுடைய மனம் கோணுமல் குறிப்பறிந்து நடப்பவள்; உண்மையைக் கடைப்பிடித்து ஒழுங்காக நடப்பவள்; கோபமே இல்லாதவள்; பெண்டிர்க்கு அணிகலமாகிய கற்பையே பூஷணமாகக் கொண்டவள்; கடவுளருளால் கிடைத்தவற்றிலேயே திருப்தியடைபவள்.

இவ்வாறு நற்குணம் அமைந்த நற்பத்தினியுடன் இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்திவரும் நாளிலே, அவ்வேதியருக்கு இருபத்தேழு சற்புத்திரர்கள் பிறந்தனர். அதனுல் குடும்பக்கவலை நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. அவருடைய பொருள் அப்பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் போதாமல் குறைந்து, கடைசியாக அவர் வறுமைத்தசையை அடைந்தார்.

'கொடிது கொடிது வறுமை கொடிது' என்றபடி வறுமையினும் கொடிய துன்பம் இல்லையன்றோ? வறுமைப்பிணியால் நலிந்தவர்கள் தினந்தோறும் பிறர் வீடுகளுக்குச் சென்று, வாட்டமுள்ள முகத்துடன் இரக்கும்போது, தங்கள் வாயைத் திறந்து பற்களைத் தெரியக்காட்டி, 'தா' என்று கைகளை நீட்டி, மானம் முதலியவற்றையெல்லாம் இழந்து யாசிப்பர். ஆயினும் அவ்வாறு 'ஈயென இரத்தல்' இழிந்த தொழிலென்பர் அறிவிற்சிறந்த பெரியோர். தண்ணீரில்லாமையால் இறக்கும் ஒரு பசுவுக்கு ஜீவகாருண்ய நிமித்தம் தண்ணீர் கொடுக்கவேண்டி இரப்பினும் அதுவும் இழிவேயாகும். இதனையறிந்த அறிவுடையோர் இரவாதிருத்

தலையே அநுஷ்டிப்பார்கள். ஆகவே, குசேலர் இவ்வளவு கேவலமான தொழிலால் தன் வறுமையைத் தீர்த்துக்கொள்ள மனம் சகியாதவராய், தமது வீட்டின் புறத்தேயிருக்கும் வயல்களுக்குச் சென்று, ஆங்கு விதைக்காமலே விளைந்து கீழே உதிர்ந்து எவரும் விரும்பாமல் கிடக்கிற மிக நுட்பமாகிய நீவாரப்புல்லின் தானியங்களை யெல்லாம் சிறிது சிறிதாகத் திரட்டி, தன் கரங்களாலேயே அவற்றின் நெல்லைக் கிள்ளி நீக்கித் தானியங்களை மாத்திரம் வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோவது வழக்கம். வீட்டில் வரும் அதிதிகளை அந்தப் பெண்மணி உபசரிப்பாள்.

தென்புலத்தார், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார், தான், என்று மேலோர் வகுத்துக்கூறிய ஐந்திடங்களில் செய்யும் அறநெறியை வழுவாமற் காத்தலே இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய தருமமாகும் என்ற உண்மையைக் கடைப்பிடித்த குசேலர், அதிதிகளை உபசரிக்கும் விஷயத்தில் அதனையே மிகச் சிறந்த கடமையாக மேற்கொண்டொழுகுவாராயினர். வயல்களிலிருந்து மேலே கூறியவாறு தாம் சேகரித்துக் கொண்டுவந்த தானியங்களை சுசீலையினிடம் கொடுக்க, அவள் அவற்றைக் குற்றிச் சமைத்து, அதிதிகளுக்கு ஒரு பங்கிட்டு, எஞ்சியதில் தனக்குள்ளதைக் குழந்தைகளுடன் களிப்புற உண்டு, திருமாலின் திருவடித்தாமரைகளை எப்போதும் மனத்துள் கொண்டவளாய் முகமலர்ச்சியுடன் வாழ்ந்திருந்தாள். ஆயினும் அக்குழந்தைகள் அனைவருக்கும் அவர்களுக்கிட்ட பங்கு சிறிதும் போதாமலிருந்தது. அதுபற்றி, அகப்பையினுல் ஒவ்வொரு குழந்தைக்கும் சிறிது சிறிது கொடுத்து, அவர்கள் பசி தணியாமல் அடையும் துன்பத்தைக் கண்டு மனம் புழுங்கி தேகம் மெலிந்து சோர்வடைந்தாள்.

தன்னுடைய வருத்தத்தைச் சிறிதும் வெளியே காட்டிக்கொள்ளாமலும், மனத்தளர்ச்சி இல்லாமலும், ஸ்ரீ நாராயணனுடைய திவ்விய சரணாரவிந்தங்களையே தியானித்துக் கொண்டு, கணவனிடம் மிக்க பக்தியோடும் இல்லறத்தை நடத்திவந்த அந்த உத்தமிக்கு, தன் குழந்தைகள் பசியால் மெலிவதைக் காணும்போது மனம் தளரும். ஏனெனில், ஒரு குழந்தைக்கு அன்ன மிடும்போது வேறொன்று கண்ணைப் பிசைந்துகொண்டழும். ஒரு குழந்தை கைகளை நீட்டும்போது இன்னொன்று அக்கைகளைத்தள்ளித் தன் கைகளை நீட்டும். சில குழந்தைகள் கீழே புரண்டழும். சில உண்ணும்போது, வேறொன்று அவர்களைத் தள்ளும். அப்போது கீழே சிந்திய கஞ்சியைக் குடிக்க, மற்றோர் குழந்தை அவ்விடம் ஓடிவரும். பாவம்! அத்தாயார் என் செய்வாள்! மனம் நொந்து, பசிப்பிணியால் மெலிந்து அழும் குழந்தைகளைத் தனது மடியிலிருத்தி, அவர்களுக்கு விளையாட்டுகளைக் காட்டியும், அவர்களைப் பலவகையாகச் சீராட்டி முத்தமிட்டும், அழுகிற கண்களைத் துடைத்தும், இன்னும் பற்பல முறைகளில் அவர்களுடைய வருத்தத்தை மாற்றி அவர்களை வினோதமாக இருக்கச் செய்ய பெரிதும் முயலுவாள்.

அடுத்த வீட்டில் அறுசுவைகளுடன் உண்ட சிறுவர்கள், ‘உங்கள்வீட்டில் இன்றைக்கு என்ன சமைத்தார்கள்?’ என்று கேட்பார்கள். அப்போது குசேலர் குழந்தைகள் தமது தாயினிடம் சென்று அம்மா திரியே தங்களுக்கும் சமைத்துப் போடவேண்டுமென்று சொல்ல, அவர்களினின்றும் தப்பித்துக்கொள்ளும்படி அவ்வகைச் சமையல் தனக்குத் தெரியாதென்று பதிற் சொல்வாள். சில குழந்தைகள் அயல் வீட்டிலுள்ளவர்கள் தின்னும் தின்பண்டங்களைப்போலத் தங்க

ளுக்கும் செய்து தரவேண்டும் என்று சொல்லும். அந்தச் சிறுவர்களைத் தன் மடியில் வைத்துக்கொண்டு அவர்களைச் சமாதானம் செய்வாள். இன்னும் அயல்வீட்டுச் சிறுவன் அணிந்துள்ள ஆபரணங்களைப்போலவே தனக்கும் செய்விக்க வேண்டுமென்னும் குழந்தைக்கு, 'நாளைக்கு அம்மாதிரியே செய்து தருகிறேன்' என்று இனிய வசனமாகச் சொல்லி, திருப்தி செய்விப்பாள். இவ்வாறு பிள்ளைகள் துயரப்படுவதைப் பார்க்கும் அந்த சாந்த குணபூஷணி எல்லாம் வல்ல திருமாலையே இடைவிடாமல் மனத்தில் துதித்த வண்ணமா யிருந்தாள். குசேலாது குழந்தைகளுக்குப் பாலேமணி என்று சொல்லும் வெண்மணிகளே ஆபரணம். அவர்கள் ஆடைகளோ சிறிதும் போதாத கிழிந்த கந்தையேயாகும். இலைகளே உண்கலமாம். எல்லாக் குழந்தைகளுக்கும் வேண்டியபடி உணவு அளிக்க ஆகாரம் போதாமல் இருந்தது.

இந்தப் பிரகாரம் அரிதிற் பெற்றெடுத்த இன்மழலைப் புதல்வர்கள் பலவாறாக வருந்தும்போதும், குசேலர் மனம் எவ்வித மாறுபாடும் அடையாமல் இருந்தது. அவர் எப்போதும் இருந்தபடியே பொறுமையை வகித்தவராய், இனிய முக காந்தியுள்ளவராய், கடவுளிடம் பக்தியுள்ளவராய்ப் பிரகாசித்தார். அம்மாதுக்குக் கணவனிடமிருந்த அன்பும் குடும்பக் கவலைபற்றிச் சிறிதும் குன்றவில்லை. ஒருவன் மிக்க செல்வம் படைத்திருப்பினும், அவனுக்குக்கூட தனது ஏக புத்திரனை எல்லா விஷயங்களிலும் திருப்தி செய்விக்க இயலாதிருப்பது சாதாரணமாக இருக்கிறது. அப்படியிருக்க, பொருள் என்பதிற் சிறிதுகூட இல்லாத நிலையிலிருக்கும் ஒருவருக்கு இருபத்தேழு குழந்தைகளை அவர்களிஷ்டப்படி திருப்தி செய்வித்தல் எப்படி சாத்தியமாகும்!

நீயமுடியாத பெரியதோர் வறுமைக் கடலில் அகப்பட்டுக் கொண்டிருந்தும், அப்பெருமாட்டி தன் கணவனைச் சிறிதும் நிந்தனை செய்யக் கனவிலும் நினையாள். குழந்தைகளையும் கோபியாள். ஆயினும், இந்தக் கடலைக் கடப்பது எப்படி என்ற எண்ணம் மாத்திரம் அவள் மனத்தை எப்போதும் வாட்டிக்கொண்டிருந்தது.

அத்தியாயம்—3

சுசீலையின் வேண்டுகோள்

இப்படியிருக்கும் நாட்களில், அருந்ததி முதலாகியவரும் புகழ்ந்து பாராட்டுதற்குரிய கற்புக்கரசியான அம்மாது ஒரு நாள் ஏற்ற தருணம் அறிந்து, மனந்துணிந்து மிகுந்த வணக்கத்துடன் வந்து நின்று, கணவனை வணங்கி, அவர் முகத்தைப் பார்த்து, தன் மனத்திலுள்ள எண்ணங்களை வெளியிட்டாள். 'ஒப்புயர்வு அற்ற வெண்டாமரையில் வசிக்கும் ஸரஸ்வதி தேவியின் நாதராகிய பிரமதேவருக்குச் சமானமான பரிசுத்தரே! ஆயிரம் நாமங்களைக் கொண்டவரும் ஸாக்ஷாத் ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனுமாகிய திருமாலின் பாத கமலங்களையே மனத்தில் நினைத்துத் துதிப்பவரே! தேவரீர், அடியேன் சில மொழிகளைச் சொல்வதற்குக் கொஞ்சம் இடந்தரவேண்டும். தாங்கள் பிறரிடத்தில் ' ஈ ' என்று இரத்தல் மிகவும் இழிந்த காரியம் என்று அவ்வாறு சென்று ஒன்றை வாங்குதலை நீக்கிவிட்டிருப்பதை நான் அறிந்துள்ளேன். ஆயினும், மனைவி மக்களிடத்தில் கருணையும் அன்பும் வைத்து அவர்களை வறுமை வருத்தாத வண்ணம் பாதுகாத்தளிப்பது தங்களுடைய கடமை யன்றோ? சுவாமி! நாம் இதுகாறும் பொறுத்திருந்தபடியே இனிமேலும் பொறுமையையே வகித்து இருப்போம் என்றாலும், நாளடைவில் சிறிய குழந்தைகள் உறுகின்ற பெருந்துயரத்தைக் கண்ணுற்றும் என் மனம் கசியாமல் இருக்குமோ? அப்படி துன்பப்பட்ட மனத்தினால், தங்களை நாடி, இப்

போது நான் சொல்லப்போகிற சங்கதியைத் தாங்கள் விருப்பத்துடன் கேட்குமாறு பிரார்த்திக்கிறேன்' என்று சொல்லி, அந்த சாந்த குணசீல உத்தமி சொல்லத் தொடங்கினள். "தவத்தில் குற்றமில்லாதவரே! தேனினு மினிமையான மழலைச் சொற்களைப் பேசும் அச்சிறுவர்பால் மனமிரங்கி, அவர்கள்பால் அன்புபாராட்ட வேண்டியது பெற்றோருடைய கடமையாகுமன்றோ? இந்தப் பரந்த உலகத்தின்கண் வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் பாவிகளேயாவார். அவ்வாறின்றி, பொருளைப் பெற்றவர் புண்ணியரேயாவார். முற்பிறப்பில் அவரவர் செய்த புண்ணியத்தால், இப்பிறப்பில் செல்வமும், பாவத்தால் வறுமையும் வந்தடைகின்றன. பழைய வினையின் காரணமாகவே வறுமை யுண்டாகிறது என்பது தெரிகிறது. மிகக் கொடிய வறுமையினும் இன்னாதது ஒன்றும் இல்லை. அது தேக அழகைக் கெடுக்கின்றது. உடம்பில் அதிக சோம்பலைக் கொடுத்து, முயற்சி செய்யவொட்டாமல் தடுக்கின்றது. உலோப குணத்தைத் தலையெடுக்கச் செய்கிறது. கணவனையும் மனைவியையும் மனக்கலப்பில்லாதபடியும் செய்து விடுகின்றது. பழி, அவமானம், உண்மையை மறைத்துப் பொய் சொல்லல், பேராசை முதலிய தீக்குணங்களை உண்டாக்கும். வறுமையாற் பீடிக்கப்படுபவன் இவ்வாறு பாவங்களைப் பின்னும் செய்து பின்னும் வறுமையையே அடைகிறான். துக்கத்தை உண்டாக்கி பற்பல எண்ணங்களை மனத்தில் உற்பவித்து, சீலத்தை ஒழித்து பல துன்பங்களையும் உண்டுபண்ணுகின்றது. சந்தோஷத்துக்கே ஒரு பெருந் தடையாய் நிற்கின்றது. ஆசாரங்களைக் குறைக்கின்றது. ஆகையால் கொடுமையானவற்றுளெல்லாம் கொடுமையான இப்படிப்பட்ட வறுமையை நீக்குவதற்குரிய உபாயத்தைத் தேட வேண்டியதே நன்மையாகும். அதனை அறவே ஒழித்

திடல் வேண்டும். இதற்கு ஏற்றதோர் உபாயம் இருக்கிற தென்று என் மனத்தில் உதித்த எண்ணத்தைத் தேவரீருக் குத் தெரிவிக்க விரும்புகிறேன். தாங்கள் அறியாதனவற்றை நான் எடுத்துக்கூற முன்வந்ததாக எண்ணுமல், இல்லாள் கூறுவதை அன்புடன் ஏற்கவேண்டும். சந்திர வம்சத்தைச் சார்ந்த, யது குலத்திற் பிறந்த ராஜாதி ராஜனுகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் தாங்கள் இளமைப் பருவத்தில் ஒன்றுசேர்ந்து பல நூல்களைப் படித்திருப்பதாகச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலால், தங்களிடம் அவர் விசுவாசம் வைத்திருப்பார். அந்த அழகிய பீதாம்பரதாரியாகிய வள்ளலைத் தாங்கள் அணுகி, நமது வறுமையை ஒழிக்கத்தக்க நிதியைப் பெற்று, மக்கள் படும் துயரத்தை ஆற்றுவித்தல் சாத்தியமே என்று எனக்குத் தோற்றுகிறது. அவ்வளவு பெருமை வாய்ந்த ஸ்ரீ கண்ணபிரானை நட்பினராகப் பெற்றிருத்தலே ஒரு பெருஞ் செல்வமல்லவோ? ஆதிமுதல் நண்பராகிய தங்களைப் பார்த்தவளவில் அவர் மனமகிழ்ந்து போதிய செல்வத்தைத் தந்திடுவர் என்று எண்ணுகிறேன். கம்ஸன் முதலிய தீயோரைக் கொன்று நற்குண நற்செய்கைகளுடையவர்களை ஆதரித்து வரும் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தமது சிநேகிதருடைய நிலைமையைக் கண்டு, வேண்டிய பொருளைக் கொடுத்தருளினும் அமையும். அன்றேல், இப்பிறவித் துன்பத்தை நீக்கவல்ல மோக்ஷத்துக் கேதுவாகிய அவரது பொற் பாத கமலங்களின் திவ்விய தரிசனம் கிடைப்பினும், போதும்,” என்று மொழிந்து, பணிவுடன் எதிரில் நின்று கொண்டிருந்த மனைவியை நோக்கிக் குசேலர் சிலவற்றை இயம்புவாராயினர்.

இவ்வாறு கூறிய தன் மனைவியைப் பார்த்து குசேலர் அவள் மனத்தைத் தேற்றும்படியான சில வாசகங்களைச் சொல்லலானார். "சிறுவர்களின் சங்கடங்களைப் பார்த்து மனம் வெம்பி முகவாட்டத்தோடும் இருக்கும் பெண்ணே! நான் சொல்வதைக் கேள். முற்பிறப்பிற் செய்த தீமைக் கேற்றவாறு துன்பமும், நன்மைக் கேற்றவாறு இன்பமும் திருமாலின் கருணையால் அமையும் என்பது வேத சாஸ்திரங் களைக் கற்றறிந்த பெரியோர் துணிபு. அவ்வாறிருக்க, ஒரு வன் தன்னை வந்தடைந்த துன்பத்தைப்பற்றி வருந்துதல் மடமையாகும். இவ்வுலகத்தில் பிறந்த மானிடர்களில் எவர்தாம் வளம்பட வேண்டாதவர்கள்? யாருமில்லை. ஆனால் எல்லோரும் எண்ணுவதெல்லாம் எண்ணியவாறே எவ்வாறு கைகூடும்? அப்படி கைகூடுமாயின், கீழோர், மேலோர் என்ற இரண்டு திறத்தார் எப்படி தனித்தனி உண்டாதல் கூடும்? எல்லாம் வல்ல இறைவன் ஒருவருக்கே எண்ணிய தெல்லாம் எண்ணியவாறே முடிக்கவல்ல சக்தியுண்டு. ஏனை யோருக்கு அவ்வாறு முடித்தல் அசாத்தியமாகும். இந்தக் குவலயத்தில் ஒருவர்க்கு முன்னமே விதிக்கப்பட்ட சுகமே கிடைக்குமே யல்லாமல், ஒருவர்க்கு மற்றொருவர்க் கென் றிட்ட சுகம் கிடைத்தல் அரிது. ஆகையால் இதைப்பற்றிச் சிந்தை செய்வதை விட்டுவிடு." இவ்வாறு குசேலர் சொல்ல வும், பெருமூச் செறிந்து கவலையுடன் வாடி நின்ற சுசீலையைப் பார்த்து முனிவர் பின்னும் சில சொல்லத் தொடங்கினர். "அன்றியும், பேதாய்! நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு யோசித்துப்பார். ஆகாயத்தில் பறக்கும் பறவை களும் காட்டில் வாழும் மிருகங்களும் தமது ஜீவனத்துக்கு என்று சேகரித்து வைத்த பொருள் ஏதொன்றேனும் உண்

டோ? அப்படி ஒன்றும் இன்றியும், அவை பலவிடங்களுக்கும் சென்று யாசியாமல், காலங்கழித்து, 'நாளைய தினம் ஆகாரத்துக்கு நாம் என் செய்வோம்?' என்ற கவலையும் இல்லாதிருக்க, நாம் யாசித்தாவது பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறியதன் நியாயம் என்ன? கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கருப்பத்தில் உள்ள உயிருக்கும் அவ்வவற்றின் பிரயாசை இல்லாதபடி அவற்றுக்கு வேண்டிய உணவைக் கொடுத்துக் காப்பாற்றும் கடவுள் இந்தக் குழந்தைகள் துயரப்படும்படி விடார். இது உண்மையே. ஆதலின் நீ துயரத்தை விட்டிடு. மேலும் ஒருவன் செய்த நன்மை தீமைகளே அவனை நிழல் போலவே பின் தொடர்ந்தே செல்லும். அநேகம் பசுக்கள் நிறைந்துள்ள மந்தையின் இடையே விடப்பட்ட சிறு கன்றானது எப்படி தனது தாய்ப் பசுவை நாடிக்கொள்ளுகின்றதோ அப்படியே ஒருவன் செய்த பழவினையும் அவனைப் பின்றொடர்ந்து விடாது பற்றிக்கொள்ளும். அவரவர்களுடைய நல்வினை தீவினைகளுக்கேற்ப, சுக துக்கங்களை வகுக்கும் கடவுள் வகுத்துள்ளபடியேயல்லாது, இன்ப துன்பங்கள் வரமாட்டா. ஆதலின், உலகத்தில் பிறந்தவர்கள் தங்கள் ஆயுள் பரியந்தம் அவர்கள் முற்பிறப்பின் பயனாகவே நன்மை, தீமை, உண்டி, சௌக்கியம் முதலியவற்றைப் பெறுவார்கள் என்று மனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

"அன்றியும், இவை நிலையுள்ளவை, இவை நிலையற்றவை என்று நன்றாகப் பகுத்துணரும் சக்தி பெறாதவர்கள் இவ்வுலகின்கண்ணுள்ள பொருள்களாகிய செல்வம், இளமை, அழகு முதலியவற்றில் தங்கள் மனத்தைச் செலுத்தி அவற்றில் ஆசை வைப்பார்கள். உண்மையை அறிந்த முதியோர்

களோ அவ்வாறின்றி மேற்கூறிய நிலையற்ற செல்வம் முத லியவற்றில் மனத்தைச் செலுத்தி வருந்தார். இதுதவிர, பொருளைப் பெறவேண்டி, சிலர் எவ்வளவோ பாவச் செயல் களை அஞ்சாத நெஞ்சுடன் செய்கின்றனர். ஒருவனுடைய ஜீவனோபாயத்தைக் கெடுத்தல், நெடுங்காலம் நமக்கு நண்பனு யிருந்தவனை மோசம் செய்தல், பெரியோர்களை அசட்டை செய்து பேசுதல், உண்மை ஒருபுறமிருக்க பொய்ச் சான்று கூறுதல் முதலிய பாவத் தொழில்களை யெல்லாம் பொரு ளீட்டும் நிமித்தமே செய்கின்றனர். எல்லாவித துன்பங் களுக்கும் ஏதுவாகிய இப்பொருளை நல்வழியிற் செலவிடாது பூமிக்குள் புதைத்துவைத்து அக்குவியல்களைப் பேய்கள் போல் தங்கள் ஆயுட்காலம் வரையில் பாதுகாத்துக் கொண் டிருப்பதும் மானிடர் இயற்கையாக இருக்கிறது. இத்தகைய மூடர்கள் சிறிதளவேனும் தருமம் புரியார். 'கற்பக விரு க்ஷத்தைப் போன்ற கொடையை யுடையவனே' என்று துதித்தாலும் யாசிப்பவர்களுக்கு ஈயார். ஜீவகாருண்யம் கொஞ்சமும் இல்லாதவராகி, தாமிருக்கும் ஊரினின்றே யாசிப்பவரைத் துரத்திவிட எத்தனிப்பார்கள். பெருஞ் செல்வம் பெற்ற அவர்களுக்கு அச்செல்வத்தால் யாதொரு பிரயோசனமும் இல்லாமற் போகின்றது. இவ்வாறு ஒருவித பலனையும் தரவல்லதல்லாத அப்பொருளைப் படைத்து இருப்பதினும் இல்லாமையே மேலாகும். மிகுந்த செல்வம் பெற்றவர்கள் பொருளைக் கவரும் திருடர்களுக்கும், சாம்ப ராக்கும் தீயினுக்கும், தம்முடைய சொந்த பங்காளிகள் பிற்காலத்தில் தங்களுக்கே அப்பொருள் வந்துவிட வேண்டு மென்று பொய் வழக்கு கூறி நியாயஸ்தலத்துக்குப் போவார் களோவென்ற அவர்களுடைய தீயவெண்ணத்துக்கும் எப்

போதும் பயந்துகொண்டேயிருப்பார்கள். அவ்வாறு அச்சம் நிரம்பிய உலோபிகளுடைய பொருள் ஒருவனுக்கு வந்தால், அவன் அவர்களிடமிருந்து அச்சப்படும் குணத்தைப் பெற்றுனேயன்றி, வேறு பொருளைப் பெறவில்லை என்று அறிய வேண்டும்.

"இன்னும் பொருள் ஒருவனிடம் வந்து சேர்ந்தால், முன்னே நல்லொழுக்க முடையவனுயிருந்தவனும் சில சமயம் தீயனுக ஆகிவிடுகிருன். பழமையை மறந்து, உறவினர், சிநேகிதர் முதலியவர்களுக்கும் விரோதியாகிருன். ஒருவன் தனக்குக் கிடைத்த பொருளைத் தன் ஆயுட்காலம் வரையில் வைத்துக் கொள்ளலாமேயன்றி, ஆயுள் அளவுக்குமேல் ஒரு நொடிப் பொழுதேனும் ஆயுளை நீடிக்கும்படி செய்ய அப்பொருளுக்கு இயலாது. ஆதலால் எவ்வளவு பொருள் படைத்திருப்பினும் பயனில்லை. இன்னும் பொருளால் உண்டாகும் வேறு பலன்களை ஆராய்வோமானுல், அது கடவுள் வழிபாட்டை நீக்கும்; இரவில் கள்வர் எவராயினும் தம்முடைய பொருளைக் கவர்ந்துகொண்டு போய் விடுவார்களோ என்ற அச்சத்தை உண்டுபண்ணி, நித்திரையை ஒழிக்கும். பொருளுள்ளவன் இவ்வுலகிலுள்ள இன்பங்களை நுகர்தலால், அதுபற்றி அவன் பல துன்பங்களையும் அடைவதன்றி, பிறவித்துன்பத்தையும் மேன்மேலும் அடைகிருன். இவ்வளவு துன்பங்களுக்கும் ஏதுவாகிய செல்வத்தின் உண்மைத் தன்மையை அறிந்த பெரியோர்கள், அது விரும்பத்தகாதது என்ற பொருள்படும்படியே, செல்வத்தை 'வெறுக்கை' என்பார். ஒருவன் எந்தப் பொருளை வேண்டாமென்று நீக்குகிருனே அதைப்பற்றிய கவலையையும் நீக்கி இன்புற்றிருக்கிருன். இத்தகைய குணங்கள் அமைந்த செல்

வத்தைக் கீழோரே மதிப்பர். அவர்கள் அச்செல்வத்தைப் பெற்றவுடனே, அதனை அடைந்துள்ள கர்வத்தால், பிறரு டன் வாய் திறந்து பேசாமல் தங்கள் தலையையும் கைகளை யுமே அசைத்து ஒருவாறு தம் எண்ணத்தைத் தெரிவிப்பார். ஆதலால் அவர்கள் ஊமைகளையே நிகர்ப்பர். பொன் ஆபரணங்களைப் பூண்ட அவர் காதுகளும் பிறர் சொல்லு வதைக் கேளா. நன்ருகப் பார்க்கவல்ல கண்களும் நன்ருகப் பாரா. வெகுகாலமாகப் பழக்கமுள்ளவர்களைப் பார்த்தபோ தும் அவர்கள், 'இவர் யாரோ, தெரியவில்லை,' என்று கூறு வர். இப்படி, செவிடரையும் குருடரையும் ஒருவாறு நிகர்ப் பர். 'யாம் செல்லுவோம்,' என்று முன்னமேயே தெரிவிப் பதுபோல, 'பொருள்' என்ற பதத்துக்கு 'செல்வம்' என்ற சொல் பொருத்தமாயிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஒருகால் பெறினும் அது நிலையாதது என்பது இதனுலேயே அறியக்கிடக்கின்றது. ஒளி வீசும் முகலாவண்யத்தை யுடைய திருமகள் தமது தாமரைக் கரங்களால் மெத்தென் று வருடுவதாய், அடியார்கள் உள்ளன்போடு நினைத்தவுடனே அவர்கள் மனத்திலே போய் நிற்கும் திருமாலின் திருவடி களைப் பெறுதலே பெறுதற்குரிய பெருஞ் செல்வம்.

"பொருள் பெற்றிருப்போன் செய்யவேண்டியது என்ன வெனின், கோயில் கட்டவேண்டும்; புராண நூல்களின் உண் மைகளையும் நுணுக்கங்களையும் அன்புடனே கேட்டு, அவற் றைக் கூறுவோருக்குப் பொருள் உதவவேண்டும்; ஏற்றவர்க் குக் கொடுத்து குளம், மடம், சத்திரம் முதலிய தான தரு மங்கள் இயற்றுதலாகிய நற்சாரியங்களைப் பிரதிபலன் எதிர் பாராது செய்யவேண்டும். ஒருவன் அப்படிச் செய்வானுயின்

அவன் யமதண்டனைக்கும் தப்பி ஆனந்த ரூபியாகிய கடவுளின் பாத சேவையை அடையலாம்."

"மேலும், குழந்தைகளைப் பெறுங் காலத்தும், அவற்றிற்கு உணவை ஊட்டுங் காலத்தும், அவர்கள் பிணி முதலியவற்றால் பீடிக்கப்படுங் காலத்தும், அந்நோய் தீர ஔஷதங்கள் கொடுக்குங் காலத்தும், இளமையில் தீய வழிகளில் செல்லாது அவர்களைப் பாதுகாக்குங் காலத்தும், எப்போதும் அளவற்ற துன்பமே தவிர, புதல்வர்களால் இன்பம் அணுவளவும் இல்லை. பெற்றோரால் தண்டிக்கப் பெற்றாலும் புதல்வர்கள் அவர்களை விட்டு நீங்கார். ஆனால், வாலிபப் பருவம் நீங்கியவுடன் அவர்கள் தங்களுடைய பெற்றோர் மீதே சீற்றங்கொள்ளினும் கொள்வர். மனம்போன போக்கெல்லாம் செல்வார். தவிர, கணவன், மனைவி, மக்கள் என்னும் மூவர்க்கு முள்ளதாகிய பிணிப்பு எவ்வகைத்தானதென்றும் யோசித்துப் பார். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது 'நீ' யென்றும் 'நான்' என்றும் சொல்லுவது மதியீனம். அவர்களையும் இதரர்கள் எல்லோரையும் காப்பாற்றும் ஆற்றலுடையவர் திருமாலே என்று நினைந்திரு" என்று பின்னும் வற்புறுத்தினர். "மக்கள் எல்லாரும் தாம் தாம் முன்னே செய்த வினைகளைத் தாமே அநுபவிப்பாராதலால், முன்வினைப் பயனாகவே இன்ப துன்பங்களை இவ்வுலகத்தில் அடைவார்கள். இந்த உண்மையை அறியாத புல்லறிவாளர் பொருள் முதலியவற்றைத் தமது முயற்சியால்தான் பெற்றதாகச் சொல்வார்கள். அவ்வாறு ஒருவன் தனது முயற்சியாலேயே செல்வத்தைப் பெற்றுள்ளதாக நினைப்பது மூடத்தனமாகும். நல்லறத்தை முற்பிறப்பிற் செய்தவனே தேவாமிருதம் முதலிய சகல போகங்களையும் வேறு பல்வகைச்

சம்பத்துக்களையும் அநுபவித்து சுகித்து வாழ்வான். நற் கருமம் இயற்றினோர் சுவர்க்க லோகத்தையும் தீவினைகளைப் புரிந்தோர் நரகத்தையும் அடைவது திண்ணம். அறிவுடையோர் இவ்வுலகத்தின் இன்ப துன்பங்களை அடைய விரும் பார். அவர்கள் கடவுள்பால் தமது முழு மனத்தையும் செலுத்தி அவரையே வழிபட்டு அருச்சித்து, சிறந்த தருமங்களைச் செய்து இறுதியில் தேவருலகை அடைந்து ஆனந்தமாக வாழ்வார்கள்.. உலகப்பற்று அற்றபோதுதான் வீடு உற்றது என்பர்.

"யாக்கையின் இளமையில் பற்று வைப்போர் பின்வரும் முதுமைப் பருவத்தின் துன்பங்களை அறிந்திலர் போலும். அப்போது அவர்கள் பற்கள் போய், மனமும் சரீரமும் தளர்ந்து வாடி மெலிவார்கள். நிலையற்ற இச்சரீரத்தை நிலையுள்ளதென்று நினைத்து அதனைப்பற்றிக் கவலை கொள்ளல் அற்ப புத்தியுடையோரது செய்கையாகும். நமக்குத் தரித்திரம் இருக்கிறது என்று சொல்லுகிறாய். எதனைத் தரித்திரம் என்று நினைக்கிறாய்? பொருள் உள்ளவனும் திருப்தியற்றிருப்பானாயின் தரித்திரனேயாவான். பெற்றதைக்கொண்டு மனமுவந்து மனத்தைத் திருப்தியாகச் செய்து கொள்வோருக்குத் தரித்திரம் ஏது?

"திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் ஸ்ரீ கண்ணனிடம் சென்றும், நான் இம்மைத் துன்பங்களுக்கெல்லாம் ஏதுவாகிய செல்வத்தையா பெற விரும்புவது? பிறப்பில் தேவகதி, மக்கட்கதி, விலங்குகதி, நரககதி என்ற நால்வகைக் கதிகளையும் நீங்கி, மோக்ஷத்தைத் தரவல்ல செல்வத்தையே அவர்பால் அடைய விரும்புவேன். மேலும் இவ்வுடம்போ அநித்தியம். வீடுகள்தோறும் சென்று யாசித்தாவது நீரில்

எழுதிய எழுத்தைப் போலவே தோன்றி மறையுங் குண முள்ள இத்தேகத்தைப் போற்றுவானேன்? அது மேலும் பிறவிகளுக்கு ஆதாரமாக விருந்து தீச்செயல்களைச் செய்யத் தூண்டும். முதலில் சுகமாகக் காட்டிப் பின்பு துன்பத்தை விளைவிக்குங் குணமுடையது இக்குடும்ப வாழ்க்கை. 'ஸம் ஸார ஸாகரம்' என்ற வாக்கியத்திற்கேற்ப நிற்கும் இந்தக் குடும்பமாகிய கடலினின்றும் விடுவித்துக்கொண்டு, பெரும் பேறுகிய மோக்ஷத்தைப் பெறுதற்குரிய காரியங்களை மாத் திரந்தான் செய்யவேண்டியது. அதுவே சிறந்தது" என்று தவச்சிரேஷ்டராகிய குசேலர் பகர்ந்தார்.

இவ்வாறு குசேலர் கூறிவந்த பல நியாயங்களையும், நீதி வாக்கியங்களையும், உலக வியற்கைகளையும் பொறுமையாக நின்று கேட்ட சுசீலை, அவற்றின் உண்மைகளை யெல்லாம் நன்றாக உணர்ந்தவளாயினும், தான் பெற்ற குழந்தைகளி னிடத்துள்ள அன்பால் கட்டுப்பட்டு, அவரது பாதங்களைப் பின்னும் வணங்கி இன்னும் சில மாற்றங்களைச் சொல்லலா யினள்.

"'முயற்சி திருவினை யாக்கும்,' முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்,' என்ற ஆன்றோர் வாக்குகளின்படி, இப் பரந்த உலகத்தின்கண் நன்முயற்சி செய்பவருக்கே பொருள் கிடைக்கும். நிலத்தைப் பண்படுத்தி உழாமலிருப்போர்க்கு அந்நிலம் என்ன பயனைத்தரும்? 'முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' அன்றோ? பொருளொன்றை விரும்புவோன் அதற்கேற்ற முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும். அப் போது கருணைக்கடலாகிய கடவுளும் மனமியைந்து அவனு டைய முயற்சியைப் பலன்படுத்துவர். எனது குடும்பத்தை உயரச் செய்யக்கடவேன் என்று மனத்தில் உறுதி செய்து

கொண்டு, அதற்கேற்ற காரியங்களில் கவனத்தைச் செலுத்துவோருக்கு, தெய்வம் வந்து உதவி செய்யும் என்ற விஷயம் தாங்கள் அறியாததன்றே. ஆனால், அத்தகைய முயற்சி செய்யாதவனுக்கு, கடவுளுடைய கருணை இல்லாததால், வறுமைப் பிணி வந்தெய்துமென்று பெரியோர் கூறுவர். முன்வினைப் பயனாக ஒருவன் இப்புவியில் வேண்டியவற்றையெல்லாம் பெறுவான் என்பது யாவரும் ஒப்புக்கொண்டதே. எனினும், நல்ல தானியம் விசேஷமாக இருந்தபோதிலும், அதனைச் சிறிது முயற்சி கொண்டாவது பாகுபதம் செய்யாமலிருந்தால் அது நல்ல உணவாகாது. இன்னும் கலத்திலிட்ட அன்னத்தை உட்கொள்வதற்கும் கையால் எடுத்துக் கொள்ளலாகிய சிறிது முயற்சி வேண்டும். ஆகவே எப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கும் முயற்சி வேண்டியது அவசியமென்று தெரிகிறது. யாதொரு முயற்சியுமில்லாமல் சும்மாவிருந்துகொண்டே எல்லாவற்றையும் கடவுளே கொடுப்பார் என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஒன்றையும் அடைய முடியாது. முன்பு கஜேந்திரனும் பிரகலாதனும் திருமாலைத் திரிகரணங்களாலும் முயன்று துதித்தே அவரது அருளைப் பெற்றனர். யானைகளுட் சிறந்த கஜேந்திரன் தன்னால் இயன்றமட்டில் முதலையோடு நெடுநாட்கள் சண்டை செய்தது. அப்போது கடவுள் அங்கே செல்லவில்லை. பிறகு தனது வலி குன்றும் சமயத்தில், 'ஆதிமூலமே' என்று அழைத்தவுடனே நாராயணமூர்த்தி அந்த கூக்குரலைக் கேட்டு அருள்பாலித்தார். ஆதலால் ஒரு சிறிதும் முயற்சியின்றியிருப்பின் தெய்வம் எங்ஙனம் சகாயம் செய்யும்? முயற்சி செய்வோருக்குக் கடவுள் உதவுவார். ஆதலின் நாமும் முயற்சி செய்தே இவ்வறுமையை நீக்கிக்கொள்ள வேண்டும்.

"வேதங்களையும் சாத்திர நூல்களையும் கற்று, 'யான்' 'என்னுடையது' என்ற பற்றுகள் உண்டாவதற்குக் காரணமாகிய முக்குற்றங்களையும் வேறுடன் போக்கிய மகா தவச்சிரேஷ்டராகிய குசேலர் பெருமானுக்கும், யாதொரு சிறு முயற்சியுமில்லாமல் முத்தியைத் திருமால் எவ்வாறு தந்தருளுவர்? மனத்தால் மாத்திரம் இது வேண்டுமென்று குசேலர் சிறிது நினைப்பாராளுல், அது திருமாவின் அருளால் உடனே கிடைக்கும்," என்று சொல்லிப் பின்னும், குழந்தைகளின் நிமித்தம், அவரைப் பொருளீட்டும் முயற்சியைச் செய்யுமாறு வேண்டிக்கொண்டாள். "முன் காலத்தில் முனிவர்கள் பலர் அநேகம் அரியபெரிய தவங்களைச்செய்து பெறுதற்கரிய பலன்களைத் திருப்பாற்கடல் நாதனிடம் பெற்றிருக்கின்றனர். செல்வத்தை அவருடைய கருணை மூலமாகப் பெறுவதில் யாதொரு குறைவாவது இழிவாவது இல்லை. ஒருவன் வேறொரு மனிதனிடமிருந்து ஒரு பொருளைப் பெற்றால் மாத்திரம் அது இழிவாகக் கருதப்படுமேயன்றி, தெய்வீகமாக உண்டாகப்பெறும் பொருளுக்கு யாதொரு தோஷமும் சொல்ல முடியாது. தேவருலகுக்கு அதிபதியாகிய தேவேந்திரன் முதலியோரால் தொழுதேத்தப்படும் அத்திருமால் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் துவாரகாபுரியை அடைந்து, க்ஷீராப்தி நாதனைத் தரிசித்து, அருள்பாலிக்கவேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்தலில் யாதொரு குற்றமுமில்லை. கற்புவாய்ந்த பெண்ணுக்குக் கணவனே தெய்வம். குலமகட்குத் தெய்வம் கொழுநனே யாவர். அத்தகைய கற்பினைக் காப்பது கொழுநனது கடமையாகும். அறியாமையையுடைய பேதையேன் இதுகாறும் சொல்லிவந்தமையைத் தாங்கள் திருவுள்ளத்தில் ஏற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன். மூவுலகங்களிலு

முள்ள ஜீவகோடிகளே யெல்லாம் திருமாலே காப்பாற்றி வருகின்ருரென்ருலும் என்னுடைய தெய்வமும், என்னுடைய தலேவரும், என்னுடைய தவமும், எல்லாம் தேவரீரே யாகையின், தேவர்களும் புகழ்தற்குரிய பெருமையையுடையவரே! அருமையாகப் பெற்றெடுத்த இந்தப் புதல்வர்களேயும் என்னேயும் காப்பாற்றவேண்டியது தங்களுடைய பொறுப்பு" என்று சொல்லி முடித்தாள்.

அத்தியாயம்—4

வேண்டுகோளுக்கு சுதாமர் (குசேலர்) இசைதல்

வறுமையினால் சரீரம் மெலிந்து, மிக்க வணக்கத்துடன் அந்தத் தேன்மொழி எடுத்தியம்பிய இனிய சொற்களைச் செவிசாற்றிய குசேல முனிவர் அவற்றை அங்கீகரித்து, மனைவிக்கும் மக்களுக்கும் உற்ற துயரத்தைப் போக்க முயற்சி செய்வதற்கு மனம் இசைந்தனர். 'திருத்துழாய் மாலையை யணிந்த கண்ணபிரானைத் தரிசிப்பேன்' என்று மனத்தில் எண்ணினார். 'கண்ணனைத் தரிசிப்போமாயின் புகழும் மோக்ஷமும் நிச்சயமாகக் கிடைக்கும். குழந்தைகள் நிமித்தம் துன்புறும் சுசீலையின் எண்ணமும் நிறைவேறும்,' என்று இவ்வாறு தனது மனத்துள் எண்ணி ஆராய்ந்தார். 'ஆயினும் கடவுள், அரசன், குரு முதலியோர்களுடைய சந்நிதிக்குப் போய் அவர்களுடைய கிருபையைப் பெறவேண்டி ஒருவன் அவர்களைத் தரிசிக்கப் போகுங்கால், தம் கையில் கிடைத்த ஏதாயினுமொன்றை எடுத்துக்கொண்டே போகவேண்டும். வெறுங்கையுடன் போகலாகாது. இப்பொழுது கண்ணனைப் பார்க்க வேண்டுமென்று புறப்படுவோமாயின், அவருக்குக் கையுறையாக எதை எடுத்துக்கொண்டு போகலாம்' என்று குசேலர் யோசிக்கலானார்.

'அன்றியும், ஏழைகள் தனவந்தர்களிடம் சென்று யாசிப்பாராயின், இரப்போர்களை அவர்கள் முதலில் மதிக்க மாட்டார்கள். ஒரு சமயம் அவமதித்தும் நடத்துவர். அப்படி நடத்துவது பொருளை விரும்பிக் கேட்போனுடைய பெரு

மைக்கும் மானத்துக்கும் குறைவு. இதற்கு அவர் அஞ்சி, மனம் சகியாதவராய், உயிரையும் துறப்பர். ஆதலின் அப்படிப்பட்ட ஜனங்களிடம் சென்று கேட்குமுன் பல முறை யோசிக்க வேண்டும். சில சமயம் இவற்றைச் சகித்துக் கொண்டு போயும் போன காரியம் பயனற்றதாகவும் முடியும். அருள் இல்லாதவர்களுக்கு மேலுலகம் கிடையாது. அது போலவே கையிற் பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகமில்லை. ஆதலின் பொருள் இல்லாதவனை இவ்வுலகம் மதியாது. பொருளுள்ளவனையே எவரும் சிறப்பு செய்ய முந்துவர். அதொன்று மாத்திரமின்றி மற்ற எல்லாவித குணங்களும் ஒருவனிடம் இருப்பினும், அவனை எல்லோரும் இகழ்வர். குணமே யில்லாதவனுயினும், பொருள் மாத்திரம் இருப்பின், அவனை எல்லோரும் உயர்வாகப் பேசுவர். இப்படி, பொருளில்லாதவரை உலகத்தார்தான் மதிக்கமாட்டார்கள் என்றும் எண்ணவேண்டியதில்லை. அவனுடைய பந்துவர்க்கங்களும் கூட அவனை அசட்டை செய்வார்கள். ஒருவன் படியாதவனுயிருப்பினும், அவனுக்குப் பொருள் மாத்திரம் இருந்தால், உலகத்திலுள்ள எல்லோரும் அவனை மதித்துப் பெருமைப்படுத்துவர். பொருளில்லாதவனையோ, அவன் மனைவியும், அவனைப் பெற்ற தாயும் கூட வெறுப்பார்கள். அவன் சொல்லுக்கும் மதிப்பு வைக்கமாட்டார். இப்படி உறவினர்களும் பொருளில்லாதவனை வெறுப்பாராயின், சார்ந்த அன்பு இல்லாத ஏனையோர் அவனை எப்படிக் கண்ணியமாக நடத்துவார்கள்?

'மேலும் பலனென்றையுமே யோசியாமலே, ஒரு ஏழை பொருளுள்ளவனிடம் சென்றாலுங் கூட அவன் இன்சொல்லொன்றுங் கூறாது, ஏன் இங்கு இப்போது வந்தோம் என்று

இரப்போன் மனம் கசியுமாறு கடுஞ்சொற்களையே கூறுவான். ஆதலால் போன காரியம் முடியாமற் போவதோடும், இழிவுச் சொற்கும் பாத்திரமாக ஆகிவிடுவான். இதனால் ஜனங்களின் இயற்கையைத் தெரிவித்ததே தவிர, தாமரைக் கண்ணனிடத்தில் செல்வது கூடாதது என்று நான் கூறவில்லை. ஆயினும் துளபத்தாமனிடம் போகும்போது முன் கூறியதுபோல வெறுங்கையுடன் போகலாகாது. கடலானது ஒரு துளி நீரின் சேர்க்கையினாலே பெருகாது. அதுபோலவே, கருணைக்கடலாகிய தாமோதரனுக்குக் கொண்டுபோகும் கையுறை ஒரு பொருளாக மாட்டாது' எனினும், 'மலையளவு தெய்வத்துக்குக் கடுகளவு கற்பூரம்' என்ற பழமொழிக்கேற்பவும், பெண்கள் நல்ல மணவாளனைப் பெற தங்கள் ஆடையின் தலைப்பினின்று சில இழைகளை எடுத்துச் சந்திரனைத் தொழுதல் போலவும், சிறிதளவேயாவது ஏதாயினும் ஓர் கையுறை எடுத்துச் செல்லவேண்டும். அதுவே என் கருத்துக்கிசைந்தது' என்று குசேலர் சுசீலையை நோக்கிக் கூறினார்.

இவ்வாறு உரைத்த குசேல முனிவரது மொழிகளைக் கேட்டு அவற்றால் மிக்க மனமுவந்தவளான சுசீலை, கண்ணனுக்கு இன்ன கையுறை எடுத்துப்போகலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்கலானாள். தனது கணவன் தினந்தோறும் காட்டிலிருந்து கொணர்கிற மூங்கில் நெல்லில் தனக்குள்ள பாகத்தைத் தனியே எடுத்துவைத்துச் சேர்த்து, அவல் செய்து கொடுத்தனுப்பலாம் என்று தீர்மானித்தாள். இப்படித் தீர்மானித்து, அன்று முதல் தான் விரதமாகவிருந்து தானியத்தைச் சேமித்துக்கொண்டே வந்தாள். பிறகு அது ஒரு குவியலானதைக் கண்டு, அதைத் தண்ணீரிலிட்டு அதன்பின் உலர்த்தி உரலில் போட்டு நன்றாகக் குத்தி உமி

யைப் பண்பாக நீக்கி பச்சை அவல் செய்து, கணவன் அணிந்திருந்த துணியின் ஒரு மூலையில் அதை முடிந்து, "தேவரீர் சுகமாகப் போய் வரவேண்டும்" என்று கூற, அவர் பிரயாணப்பட்டார்.

அத்தியாயம்—5

குசேலர் துவாரகைக்குச் செல்லல்

இதற்கு முன்னே எங்கும் யாத்திரை செய்யாதவராத லால், குசேலர் துவாரகாபுரிக்குப் போகும் வழியை அறிந் திலர். ஆனதால் வழிப்போக்கர்களைக் கேட்டு வழியைத் தெரிந்துகொண்டு போனார். அப்படி நடந்து செல்லுகையில், எங்கேனும் பாதையானது இரண்டு கிளைகளாகப் பிரியும் இடங்களில் எது வழியென்று தெரியாமல் சிறிதுநேரம் திகைத்து நிற்பார். பிறகு தனக்குள்ளே ஆராய்ந்து தெளி வார். நெடுந்தூரம் பிரயாணம் செய்வோர், வழிக்கு ஆகார மாக ஏதாவதொன்றைத் துணியில் முடிந்து அந்த முடிப் பைத் தோளில் தொங்கவிட்டுச் செல்வார்களன்றோ? குசே லரோ தன் பிரயாணத்துக்கு உபயோகமாக அப்படி ஆகாரம் ஒன்றும் எடுத்துக்கொண்டு போகவில்லை. இவ்வாறு அநே கம் காதங்கள் கடந்து சென்றார்.

வழியில் கருமேகங்கள் வந்து படியும்படி அவ்வளவு உயரமாக ஆகாயத்தை அளாவிய மிக உன்னதமான மலைக ளிருந்தன. அவற்றை யெல்லாம் முனிவர் வெகு சிரமத் துடன் கடந்தார். வெப்பம் அதிகரித்த பாலைவனங்களையும், பாலைவனங்களுக் கப்பால் உள்ள மேட்டு நிலங்களையும் கடக் கும்போது அதிகப் பிரயாசைப்பட்டார். ஆங்குக் கீழே கிடந்த சிறு பருக்கைக் கற்கள் கால்களில் தைத்தபோது வரு ந்துவர். திருமாலின் திருவடியை எண்ணி இன்புற்று மனத் தளர்ச்சி நீங்குவர். பிரயாணிகளைத் துன்புறுத்தி அவர்கள் கொண்டுபோகும் பொருளைக் கவர்ந்தும், அவர்கள் உயிரை

மாய்த்தும், எங்கும் சுழன்று திரியும் கள்வர்கள் வாழும் இடங்களையும், கொல்லுந்தன்மையுள்ள சிங்கம், கரடி, புலி, முட்பன்றி, காட்டுப்பசு, காட்டியானை முதலிய கொடிய மிருகங்கள் வாழும் பெருங் காடுகளையும் அறிதிற் கடந்தார்.

காட்டை நீங்கி நாட்டை அடைந்த காலத்தில், இனிய மாம்பழங்கள் மரங்களில் பழுத்துக் கீழே விழுந்து கிடந்த காட்சியையும், புலியின் பாதத்தை யொக்க, வாழைச் சீப்புகள் மரத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த அழகையும், மதுரமான சுவையையுடைய பலாப்பழம் பிளவுபட்டுத் தேனொழுகிக்கொண்டிருக்கும் வளப்பத்தையும் கண்டு ஆனந்தித்தார். கமுகமரத்தின் பழங்கள் கீழே இறைந்து கிடந்தன. தேங்காய்கள் குலைகுலையாகத் தொங்கும் தென்னை மரங்களும் இன்னும் அநேக நீர்நிலைகளுமுள்ள பல நாடுகளையும் குறுநிலமன்னர்கள் ஆளும் நாடுகளையும் மெல்ல மெல்ல நடந்து கடந்தார்.

நறுமணமுள்ள மலர்களையும், வயிரக் கற்களையும், பொன்னையும், யானைத் தந்தங்களையும், வெண்முத்துக்களையும், சந்தனக் கட்டையையும், மயிலின் தோகைகளையும் அடித்துக் கொண்டும், வரும் வழியில் இருமருங்கிலுமுள்ள கரைகளை மோதிப் பெயர்த்துக்கொண்டும் வெள்ள நீர் வந்து பிறகு சமுத்திரத்தில் சங்கமுகத்தில் போய் விழுகின்ற அநேகம் நதிகளையும் கடந்தார்.

ஆகாரக் குறைவினால் உடம்பு மெலிவடைந்து அவ்வளவு தூரம் கடந்த குசேலர் இன்னும் துவாரகைக்கு எவ்வளவு தூரம் இருக்குமோ வென்றெண்ணி மெல்ல மெல்லப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, வெயில் வீசும் வசந்த காலம் கிட்டிற்று. பூமியின் மேற்பாகமும், நீர்நிலைகளும்,காற்

றும், வழி நடப்போர் மனமும் வீட்டுக்குள்ளே நிழலில் இருப்பவர்களது கண், கை, கால் முதலிய அவயவங்களும் கொதிப்படையும்படி வெயிலின் வெப்பம் மிகக் கடுமையாகவிருந்தது. அந்த வெப்பத்தின் கொடுமையைத் தாங்கலாற்ருது வழிப்போக்கர்களுடைய வருத்தத்தைப் போக்குவதற்கு முன் வந்து நிற்கும் சான்ருேர் போல, பாதையின் இரண்டு பக்கங்களிலும் வேரூன்றித் தழைத்தோங்கி நின்ற பெரிய விருக்ஷங்களின் நீழலில் சற்று நின்றும் உட்கார்ந்தும் இளைப்பாறி, மெல்ல மெல்ல நடந்து சென்ருர்.

இன்னும் அவர் நடந்து போகும் வழியில் வெப்பத்தால் பூமியில் அநேகம் நீண்ட பெரிய நிலப்பிளப்புகள் உண்டாயிருந்தன. அவற்றைப் பார்க்கும்போது, சூரியன் தன்னை விழுங்க வரும் கேதுவின் இனங்களாகிய பாம்பு வர்க்கங்கள் கூடியிருக்கும் இடங்களாகிய நிலத்தின்கீழ்ச் செல்லும் பெரிய துவாரங்களைத் தனது உஷ்ணமான கிரணங்களால் தாக்கி வருத்த நினைத்தது போலிருந்தன.

வழியிலே அநேகம் வாவிகள், குளங்கள், கேணிகள், வாய்க்கால்கள், சிற்ருறுகள் முதலியன தண்ணீரின்றி வறண்டிருந்தன. சூரிய வெப்பத்தினுல் அவற்றிலுள்ள நீர் நீராவியாக மாறி வற்றிப்போயிருந்தது. பிறருக்குக் கொடுக்கும் ஆற்றலில்லாத உலோபிகளை வீணே பின்தொடர்ந்து செல்பவர்போல, கலைமான்கள் அநேகம் தாகத்தால் வருந்தி, நீரின்றி அங்குமிங்கும் கானல் நீரை உண்மையான நீர் நிலையென்று எண்ணி ஓடிக்கொண்டிருந்தன. ஒருவன் சுகித்திருக்கும்போது அவனுடன் கூட இருந்து குலாவித் திரியும் உறவினர், அவனுக்கு ஒரு கஷ்டம் வந்தகாலத்தில் அவர்கள் அவனை விட்டுப் பிரிந்து போய்விடுவார்கள். அதுபோலவே,

இக்கொடிய வெப்பத்தால், குளங்கள், ஓடைகள், வாய்க்கால், ஏரி முதலிய நீர் நிலைகள் முற்றிலும் வறண்டுபோக, அவற்றில் நீருள்ளபோது வாழ்ந்துவந்த பறவைகள் முதலிய ஜந்துக்கள் எல்லாம் அங்கிருந்தும் வேறிடங்களுக்கு ஏகின.

கோடையின் வெப்பம் இவ்வாறிருக்க, குசேலர் நெடுநாள் ஆகாரமில்லாது, பசியினால் வருந்தி களைத்து, வழியில் நிழலுள்ள இடங்களைத் தேடி அங்கே சற்றுத் தங்கி, மேற்கொண்டு பிரயாணமானார். தாகத்துக்குக் கூட குளங்களில் நீர் கிடைக்காமல் நீர் வேட்கையினால் களைப்புற்றிருந்தார். அவர் அவ்வாறு நடந்து செல்லுகையில், சூரியன் அஸ்தமனமானவுடன் எங்கேயாவது வீட்டில் இரவைக் கழிக்கலாம் என்றாலும், அன்னியர்களுக்கு இடம் கொடுப்பார்களோ என்று சந்தேகித்தார். வழியிலோ கல், முள் முதலியவை நிறைந்திருந்தன. ஆகையால் தங்குவதற்குரிய இடமும், தனக்குத் தெரிந்தவர்களும் இல்லாமையால், எல்லோருக்கும் பொதுவாகவுள்ள ஆலயங்களில் நித்திரை செய்து, பிரயாணத்துக்குச் சௌகரியமான வேளையாகிய அதிகாலையில் விழித்தெழுந்து, துவாரகைக்குப்போகும் வழியைத் தெரிந்துகொண்டு மீண்டும் பிரயாணமாவார். ஒரு சமயம் வழியில் முள் நிறைந்திருந்தமையால், வேல மரத்தின் முள்ளொன்று அவர் காலில் தைத்துவிட்டது. அதனால் சரியாக நடக்கமுடியாமல் பெரிதும் துன்புற்றார். அம்முள்ளைப் பிடுங்கமுடியாது கஷ்டப்பட்டு மனவருத்தத்துடன் தமக்குள்ளேயே ஆலோசிக்கலாயினார்.

‘இவ்வுலகத்தில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது, அவன் மனத்தில் தானாகவே எவ்வாறு ஆராய்ந்தானோ அவ்வாறே செய்வது மிக்க நலம். அவ்வாறின்

றித் தனது ஞானக் கண்ணைத் திறந்த குருவின் சொல்லுக் கிணங்கி அவர் கூறும் வண்ணம் செய்வது அதனைவிட மிக்க நன்மையைத் தரும். அதன்றி, நம்முடன் ஒருவித சம் பந்தமுமில்லாதவர்கள் சொற்படி செய்வது தீங்கையே உண்டாக்கும். கேவலம் ஒரு ஸ்திரீ தனது பேதை மனத் தால் ஆராய்ந்தறியாது கூறும் சொற்களைக் கேட்டுச் செய் தலைப் போன்று, சிரமத்தைக் கொடுப்பது பிறிதொன்று மில்லை. இப்படி தன் புத்தி, குரு புத்தியென்ற இரண்டினை யும் விட்டு, மனைவி சொன்னவற்றுக் கிரங்கி நாம் பிரயாணத் துக்கு இசைந்தோம். எல்லா நீதிகளையும் நன்கறிந்திருந் தும் சுசீலை சொன்ன வார்த்தையைக் கேட்டு அவள் சொல் லியபடி துவாரகைக்குப் புறப்படச் சம்மதித்ததிலிருந்து பசி, தாகம் முதலியவற்றால் எவ்வளவோ கஷ்டப்பட்டு, சரீ ரம் முன்னிலும் மிக மெலிந்துபோயிற்று. துவாரகை இரு க்கு மிடமோ தெரியவில்லை. இன்னும் செல்லவேண்டிய மார்க்கத்தை கடத்தற்குச் சரீர பலம் இடந்தருமோ என்று சந்தேகம் உண்டாகிறது. அப்படி நெடுந்தூரம் செல்லினும் வழியில் கருங்கடல் இருக்கிறது. அதைத் தாண்டிச் செல்ல வேண்டும். அதையுங் கடந்து அப்புறமுள்ள துவாரகாபுரிக் குச் சென்றால் அங்கே நம்மை மதிப்பாரும் ஒருவரு மிலர். இவற்றை யெல்லாம் முன்னடி யோசித்திருக்கவேண்டும். யாதொரு ஆலோசனையும் ஒரு சிறிதுமின்றி இக்காரியத்தி லே தலையிட்டுக்கொண்டோமே. இனி என் செய்வது' என்று இவ்வாறு எண்ணி அத்தவச்சிரேஷ்டர் வருந்தினார். அப் போது அவர் மனத்தில் இன்னும் சில சங்கைகள் உண்டா யின. 'அரசர்கள் அநேகர் கண்ணனது அரண்மனை வாயிலில் வந்து காத்துக்கொண்டிருப்பார்களே. அங்கே நாம் போ தல் எப்படி முடியும்? அப்படியே உள்ளே சென்றோம் என்

றூலும், இறைவனது தரிசனம் ஏழைக்கு எவ்வாறு கிடைக்கும்? மேன்மை பொருந்திய எல்லாவிதமான பொருள்களையுந் தரவல்ல கற்பக மரத்தினிடம் சென்றும், சாதாரணமாக எங்கும் கிடைக்கக்கூடிய காய் ஒன்றைக் கேட்பதைப்போல மோக்ஷத்தைத் தரவல்ல கண்ணனிடம் சென்றும், அழியும் பொருளாகிய செல்வத்தை நாம் போய்க் கேட்பது மிக்க அறிவீனம்' என்று இத்திறப்பட்ட பல எண்ணங்கள் அவர் மனத்தில் தோன்றவே, அவர்க்குச் சோர்வு உண்டாயிற்று. எனினும், தனது மனத்தைச் சிறிது திடப்படுத்திக்கொண்டு மனைவியினிடம் தான் சொல்லிவந்தபடியே துவாரகைக்குப் போய் வரவேண்டு மென்றும், எவ்வித கஷ்டம் நேரினும் நேரட்டு மென்றும் துணிந்து, சில நாட்கள் பிரயாணம் செய்து கடைசியாக மேற்கடலினருகில் வந்து சேர்ந்தார்.

வஞ்சக நெஞ்சம் படைத்த சகடாசுரனை உதைக்கவும், காளிங்கன் தலையை மிதிக்கவும், இவ்வாறு துஷ்டர்களை அடக்குவதற்காக எடுத்த பாத கமலங்களாலேயே பாண்டவர்க்காகத் தூது சென்ற திருமாலின் திருவடித் தாமரைகளை மனத்தில் இடைவிடாது தியானித்துச் செல்லும் முனிபுங்கவர் கடலோரத்தில் வந்து, அங்கே ஓர் புன்னைமரத்தின் நிழலில் தங்கி, கண்ணன் கமலக்கழல்களைத் தமது இதயகமலத்தில் நிறுத்தி, தியானத்தில் சிறிது நேரம் இருந்தார். சூரியனுக்கு முன் இருள் நில்லாதிருப்பதை யொக்க, அவரது திருவடிகள் முன் தீவினை நிற்குமோ? அடியார்களுடைய வினையை நாசம் செய்யும் அத்திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்து, பிறகு ஆங்குள்ள கடல் வளப்பங்களைக் கண்ணாரக் கண்டார். குளிர்ந்த வாடை வீசியது. அவர்க்குச் சற்று அயர்ச்சி நீங்கியிருந்தது.

கடலில் மீன், ஆமை, நண்டு முதலியன விசேஷமாகக் காணப்பட்டன. கடற்கரை யோரத்தில் புன்னை விருக்ஷங்களும், வேறு நறுமணமுள்ள புஷ்பச் செடிகளும் இருந்தமையால் அந்தப் புஷ்பங்களின் மணம் காற்றினால் வீசப்பட்டது. பல மரப்பலகைகளால் இணைக்கப்பெற்ற படகுகளில் ஏறி கடலில் மீன் பிடிக்கவெண்ணி வலையைச் செம்படவர்கள் கடலில் வேகமாக எறிவதால் பெருத்த ஓசை உண்டாயிற்று. பிடித்த மீன்களைக் கடற்கரையிற் கொண்டு சேர்ப்பிக்கும் போதுள்ள ஓசை, கரையில் வைத்துள்ள மீன்களைக் கொத்தித் தின்னவரும் பக்ஷிகளை ஓட்டும்போதுள்ள ஓசை, பின்னர் மீன்களை விற்கும்போதுள்ள ஓசை, ஆகிய இந்த ஓசைகள் சேர்ந்த ஆரவாரம் மிக்கிருந்தது.

பெருஞ் செல்வம் படைத்திருப்பவர்கள் உலோபிகளாக விருப்பின், அவர்களுடைய செல்வத்தால் பிறர்க்கு யாதொரு பயனும் இல்லாதிருத்தல் போலவே, அக்கடலில் நீர் அதிகமிருப்பினும், அதன் உப்புத் தன்மையால், தாகத்தைத் தணித்துக்கொள்ள பயனற்றதாக விருந்தது. அப்படியின்றி கொஞ்சம் செல்வம் உள்ள மேலோர் பிறர்க்குத் தங்கள் பொருளை வழங்கி அவர்களுக்குப் பயன்படும்படி தங்கள் செல்வத்தை உபகரிப்பது போல, கடற்கரையிலுள்ள வெண்மணலில் இருந்த நீர் ஊற்றுகளில் ஊறும் நீர் சிறிதளவே இருப்பினும், அதன் சுத்தத்தாலும் உருசியாலும் அதனை அருந்துவோர் நீர் வேட்கையைத் தீர்க்கவல்லதாயிருந்தது. இப்படி கடல் பெரிதாயிருப்பினும், அதன் நீர் குளிப்பதற்குக்கூட நன்றாகப் பயன்படாம விருப்பதையும் அதனருகேயுள்ள சிற்றூரால் நீர் குடிப்பதற்கும் உபயோகமாக விருப்பதையுன்னி, செல்வ மிகுதியினும் குணமிகுதியே சிறந்திருத்தலை விளக்கும் இந்த இயற்கை அமைப்பைக் கவனித்தார். இன்னும் அக்கடற்

கரையில் அநேகம் தாழைமரச் சோலைகளிருந்தன. புன்னை மரம் ஓங்கி வளர்ந்து, அதன் புஷ்பங்கள் கீழே இறைந்து கிடந்தன. அந்த மென்மையான புஷ்பங்கள் மெத்தென்று இருந்ததால் அன்னப்பக்ஷிகள் குஞ்சுகளுடனும் அவற்றின் பேடைகளுடனும் அங்கே சௌகரியமாய் வசித்தன.

அன்றியும், தினை, வரகு, நெல் முதலியவற்றைப் பயிர் செய்வோருக்கெல்லாம் மழையானது நன்மையையும் வெயில் கெடுதியையும் உண்டுபண்ணும். அவ்வாறின்றி, இக்கடற் கரை யோரத்தில் கடல்நீரைத் தேங்கியிருக்கும்படி பாத்தி கட்டி, அதினின்றும் உப்பை உற்பத்தி செய்வோருக்கு, மழை கெடுதியையும் வெயில் நன்மையையும் உண்டாக்கும். இப்படிப்பட்ட நீர்வளம் நிலவளமுள்ள அந்நாட்டின் இயற்கை அழகைக் கண்டு மனம் களித்த குசேலர், பிரயாணம் செய்த களைப்பு நீங்க, சற்று இளைப்பாறும்படி ஒரு புன்னைமரத்தி னடியில் வந்து தங்கினர். அப்போது கடல்நீர்த் திவலைகள் அவர் தேகத்தில் பட்டதாலும், மந்தமாருதம் குளிர்ந்து வீசியதாலும், அவர் சற்று களைப்பு நீங்கினர். அவ்விடத்தி னின்றும் படகு மூலமாக அந்தக் கடலைக் கடந்தே துவார கைக்குச் செல்லவேண்டும்.

அப்படி, 'படகில் ஏறித் துவாரகைக்குச் செல்ல படகை ஓட்டுபவனுக்குக் கொடுக்க அற்ப பொருளேனும் கையில் இல்லை. அன்றியும், பொருளில்லாமல் நம்மை மீகாமன் பட கில் ஏற்றிக்கொள்ளத் தக்கவண்ணம் நம்மிடம் ஒருவித சிறப் பும் இல்லை. கண்ணனைப் பார்க்கப்போவதாக உண்மையைக் கூறினல், ஒருவேளை ஒன்றுங் கேளாமல் படகில் ஏற்றிக் கொண்டு போவானேனென்றாலும், நாம் சொல்லுவதை உண் மையென்று நம்பமாட்டான்' என்று இந்தப் பிரகாரம் பலவாறு குசேலர் தனக்குள்ளேயே ஆலோசித்துக்கொண்

டிருந்தார். 'ஆயினும், இனி என்செய்வது? இப்படகோட்டிக்கு இனிய சொற்களைக் கூறி அவனையே கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்' என்று தனக்குள் தீர்மானித்து, அவர் படகோட்டியினிடம் சென்று, அவன் மனமிரங்கும்படி, இனிய பல வார்த்தைகளைச் சொல்லிப் படகில் ஏறினர். வெகு துரிதத்தில் கடலைக் கடந்து துவாரகைப் பட்டினத்தின் துறையில் படகு வந்து நிற்க, பிரயாணிகள் எல்லோரும் படகினின்றும் இறங்கினர்கள். குசேலரும் இறங்கி எதிரேயுள்ள நகரின் அழகையும் நீர் நிலவளச் சிறப்புக்களையும் கண்டு உள்ளம் பூரித்தார்.

அத்தியாயம்—6

கண்ணனது அரண்மனையை அடைதல்

அசுரர்களைக் கொன்று தேவர்களைப் பாதுகாக்க அவதரித்தவரான கண்ணபிரான் வாழும் துவாரகாபுரியின் வளத்தை நோக்கி நின்றார். மநுதர்ம சாஸ்திரம், ராஜ தர்மம் முதலிய தர்மங்களை முற்றுமறிந்து அங்ஙனமே குடிகளும் ஒழுகுமாறு கண்ணன் அரசு செலுத்திவந்த அந்த நகரத்தில் பாவம் ஒழிந்து தருமம் தலையோங்கி, துக்கத்துக்குக் காரணமானவை ஒன்றும் இல்லாமலிருந்தது.

நகரின் நாற்புறத்திலும் மதில்கள் மேகத்தை யளாவிச் செல்லுவதுபோல அவ்வளவு உயரமாக இருந்தன. அகழியோ பாதாளம் வரை ஆழமாக விருந்தது. மதிலின்மேல் அநேகம் பூங்கொடிகள் இருந்தன. அவை பல வர்ணமான புஷ்பங்களைப் புஷ்பித்து விளங்கின. அகலமான அகழியில் நீலோற்பலம், தாமரை முதலிய அநேகம் நறுமணமுள்ள புஷ்பங்கள் இருந்தமையால், எப்போதும் அதில் நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. அதில் மீன்கள் மின்னலையொத்த ஒளியுடன் மேலும் கீழும் குதித்துக்கொண்டிருந்தன. நீர் குடிக்க வரும் பசுக்களின் கால்களை அவ்வகழி நீரிலுள்ள முதலைகள் பிடித்துக்கொள்ளா. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது, இவ்வகழ் சூழ்ந்த நகரம் ஒருவேளை தெய்வலோகத்திலுள்ளதோர் பட்டணமோவென்று காண்போர் பிரமிக்கும்படி விளங்கிற்று. இவ்வளவு அழகுவாய்ந்த நகரைப் பார்த்ததாலும், விரைவில் வசுதேவபுத்திரனைத் தரிசிக்கப்போகிறோம் என்ற ஆர்வம்

அவர் மனத்தில் குதூகலத்தை விளைவித்திருந்ததாலும், குசேலர், பிரயாணத்தாலுண்டான களைப்பு நீங்கி, வேகமாக துவாரகாபுரி முகமாக, எந்த ஜீவனுக்கும் தீங்குறுவண்ணம் முன்னும் பின்னுமாகப் பார்த்துக்கொண்டு நடக்கலாயினர்.

வழியில், காற்ருகப் பறக்கும் குதிரைகள், யானைக் கூட்டங்கள், சிலம்பக்கூடம், உன்னதமான தேர்கள் முதலியவை இருந்தன. நிழலைக் கொடுக்கத் தக்கதானவையும், அநேகம் கிளைகளுடன் விளங்குவனவாயுமுள்ள மரங்கள் இருபக்கங்களிலும் இருந்தன. ஆயினும், குசேலர் அம்மரங்களின் நிழலில் நடந்தால் அந்நிழல் நிமித்தம் அங்கே வந்து தங்கியிருக்கும் உயிர்களுக்குத் தாம் நடந்துபோவதால் ஏதேனும் உயிர்ச்சேதம் உண்டாகுமோவென்று பயந்து, மரங்களின் நிழலில் செல்லாது வெயில் காயும் நடுப்பாதையிலேயே தன் கைகளாலேயே சூரிய கிரணங்கள் மேலே படாதபடி சற்றே தடுத்துக்கொண்டு நடந்தார். கடைசியாக அந்நகரின் அகழியைக் கடந்து மதிலின் வாயிலை அடைந்தார்.

அங்கே அரசர்கள் சிறப்புற்ற குடை, விசிறி, கொடி, மயில் தோகை முதலிய அரசச் சின்னங்களோடும், மாணிக்கம், வயிரம், முத்து முதலியவற்ருல் இழைக்கப்பெற்ற பொற்கிரீடங்களை அணிந்துகொண்டும், ஊர்திகள் மீது முன்னும் பின்னும் எப்போதும்போய்க்கொண்டிருக்க,குசேலரும் தன் கைகளை சிரசின்மேல் உயர்த்தி வைத்துக்கொண்டு அக்கும்பலுட் புகுந்தார். சிறிதேனும் ஒதுங்கியிருக்கவும் இடமில்லாமல் அக்கும்பல் மிகவும் நெருக்கமாக விருந்தது. கையில் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு நின்ற போர் வீரர்களுக்கு இடம் கொடுத்து ஒதுங்கி நின்ருல், வாயு வேகமான குதிரைகளின்மேல் விழும்படி யிருந்தது. அக்குதிரைகளுக்கு இடங் கொடுத்தால், மதயானைக்கூட்டத்தில் நுழையும்படியிருந்தது.

யானைகளுக்கிடங் கொடுப்பின், தேர்களின்மேல் சாயும்படி யிருந்தது. இத்தகைய நெருக்கமான கும்பலுக்குள் சரீரம் மெலிவடைந்த குசேலர் எவ்வாறு தம் வழியைக் கடப்பர்!

வழியிலுள்ள தெருவுகளில் சிறுமிகள் சோறு சமைத்தல் முதலிய விளையாட்டுகள் மூலமாகக் குடும்ப காரியங்களைத் தெரிந்துகொள்வதைக் குசேலர் பார்த்துக்கொண்டே சென்றார். வேதியர்கள் யாகங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். வேத பாடசாலைகளில் குரு சொல்வதைக் கேட்டுச் சொல்லும் சிறுவர்கள் வேதம் பயின்றனர்.

அந்த நகரத்தில் மலையைப் போன்றுயர்ந்த மாடமாளிகைகளின் உச்சியில் கட்டப்பட்டிருந்த கொடிகள் காற்றில் பறந்துகொண்டிருந்தன. வானத்தில் தேவர்கள் ஏறிச் செல்லும் விமானங்கள் ஒருவேளை இவற்றில் சிக்கிக்கொள்ளுமோ வென்று சந்தேகிக்கும்படி அவ்வளவு உயரத்தில் தூக்கிக் கட்டப்பட்டிருந்த மணிகளாலான தோரணங்கள் வீதிகளில் எங்கும் இருப்பதைப் பார்த்தார். பகைவரைக் கொன்று வெற்றி பெறும் அரசர்கள் முன்னே முழங்கப்பெறும் பேரிகையின் ஓசையினால் யானைகள் தறிகளை முறித்துக்கொண்டு ஓடும்.

ஆகாயத்தில் மேகங்கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தது தங்கள் தலைவனாகிய தேவேந்திரன் ஆணையால் உபேந்திரனாகிய கண்ணனுடைய பட்டணத்தைப் பார்க்கவந்தன போலிருந்தது.

கண்ணனைத் தரிசித்துவிட்டுத் திரும்பும் அரசர்களுடைய கிரீடங்கள் ஒன்றன்மேலொன்று வேகமாய் மோத, ரத்னங்கள் சிதறிக் கற்களைப்போல கீழே விழுந்து வீதியில் நடப்பவர்கள் காலில் உறுத்தும்.

வீடுகளின் வாயில்கள் வெண்சுண்ணும்பினல் அழகு பெறத் தீற்றப்பெற்று, வெள்ளி, பொன், பவளம் முதலியவற்றல் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. கமுகு, வாழை, கரும்பு முதலிய மரங்கள் வாயில் முன் நாட்டப் பெற்றிருந்தன. மாளிகையின் வாசற்கால்களில் பல நிலைகளும், ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவகைச் சித்திர வேலைப்பாடும் இருந்தவை உள்ளே வசிப்பவர்களின் செல்வத் தையும் நாகரிகத்தையும் நன்கு விளக்கின. சுவர்களில் பார்ப் போர் கண்களைக் கவரத்தக்க அநேக அழகிய சித்திரவேலை கள் செய்யப்பட்டிருந்தன.

இன்னும் அந்நகர வாசிகள் கம்ஸன், சாலுவன், சிசு பாலன், காலயவநன் முதலிய துஷ்டர்களை ஜயித்துக் கொன்ற ஸ்ரீ கண்ணனுடைய வெற்றிப் புகழ்ச்சிகளை இனிய பாக்களில் அமைத்து ராகத்துடன் பாடிக்கொண்டிருந்தனர்.

உலகப் பிரளய காலத்தில் பூமியைத் தமது வயிற்றுக்குள் அடக்கிப் பிறகு பிரளய மில்லாதபோது வெளியே விடுத் துக் காத்தருளிய ஸ்ரீ கண்ணனது இருப்பிடமாகிய துவாரகா புரியின் அழகை வர்ணித்தல் ஆதிசேஷனுக்கும் இயலாது ; அதன் அழகைப் பார்க்க அநேகம் கண்களையுடைய தேவேந் திரனுக்கும் முடியாது என்று குசேலர் ஆச்சரியங் கொண் டார். சிருஷ்டிக்கப்படும் நகரங்களுக்கெல்லாம் துவாரகையே முதன்மையான பட்டணம் என்றும், அதைப் பார்த்தே மற்ற அழகிய நகரங்களை அமைக்கும்படியாக அவ்வளவு சிறப்புக் களால் அது மேன்மைப்பட்டிருந்தது என்பதையும் கண்டு களித்தார். துவாரகாபுரியின் ஒரு பாகத்தின் நகர்ச்சிறப்பு நீர் நிலவளங்களாலும் அழகாலும் இத்தகைய மேன்மைகள் பொருந்தி யிருத்தலைக் கண் குளிரப் பார்த்த குசேலருக்கு,

தாம் செய்த தூர பிரயாணத்தின் கஷ்டமும், பசியின் வருத்தமும், தேக மெலிவும் நீங்கி, உடம்பும் கொஞ்சம் பக்குவமடைந்தது. கடைசியாக ஸ்ரீ கண்ணனுடைய அழகு வாய்ந்த அரண்மனையின் முன்வாயிலை அடைந்தார்.

அரண்மனை வாயிலை அடைந்ததும், அங்கே சங்கீத வாத்தியங்களின் ஓசையும், அரசர்கள் கால்களில் அணிந்த வீரக்கழல்களின் ஓசையும், குதிரைகள் பாய்ந்தோடுவதாலுண்டாகும் ஓசையும், பாகர் செலுத்தும் யானைகளின் ஆரவாரமும், தேர்கள் இழுக்கப் பெறும்போது அவற்றிற் கட்டிய மணிகளின் சத்தமும் சேர்ந்த பேரோசையைக் கேட்டு குசேலர் பிரமித்து மிக்க உவகை கொண்டார். 'இப்படி அரசர்களும் ஏனையோரும் இடைவிடாமல் அரண்மனைக்குள் போய் வந்துகொண்டிருக்க, நாம் எத்தனை வருஷங்கள் இவ் வாயிலில் காத்திருப்பினும் எப்படி உட்செல்வது?' என்று தனக்குள்ளே யோசித்தார். ஆயினும், புறத்தேயே சிறிது தங்கி நிற்பதற்கும் தனி இடமாகச் சிறிதும் இல்லாமையால் உள்ளே போகாமலே நெடுநேரம் வரையில் வாயிலில் காத்துக்கொண்டிருந்த குசேலர், இனியும் கால தாமதம் செய்வது தகுதியல்லவென்றும், எப்படி யிருப்பினும் தைரியமாகக் கும்பலுக்குள்ளே நுழைய வேண்டியதுதான் என்றும் தீர்மானித்தார். அச்சமயம், வாள் முதலிய ஆயுதங்களைக் கையில் தாங்கியவர்களாய் பிரகாசமான உடுப்புகளைப் போட்டுக்கொண்டிருந்த வாயிற் காப்போரிற் சிலர் அங்குள்ள பெரிய கூட்டத்தை விலக்கி, இடைவெளி பெறுமாறு சிலரை வெளியே இருக்கும்படியும் செய்தார்கள். அதைக்கண்ட குசேலரும் சற்று அச்சமுற்று கும்பலுக்கு இடம் கொடுத்துவிட்டுச் சிறிது தூரத்திற் சென்றார். சற்று நேரமானவுடன், இனி அரண்மனைக்குட் போகலாம் என்று நிச்சயித்துக்

கொண்டு, மற்ளெருரு புறத்தினருகே மெதுவாகச் சென்ருர். அவ்வாறு சென்ற இடத்தில் சிற்றரசர்கள் கண்ணபிரானுக்குத் திறையாகக் கொணர்ந்து செலுத்திய பொற்குவியல்கள் வைக்கப்பட்டிருந்தமையால், அங்கே காவலாளர்கள் வெகு ஜாக்கிரதையாகக் காவல் செய்துகொண்டிருந்தனர். அவ்விஷயம் குசேலருக்குத் தெரியாமல் அங்கே போய் நிற்கப்போனபோது, அங்குள்ள காவலாளர்கள் அவரை அதட்டி அப்புறம் போகச் செய்தனர். மிக்க பயமடைந்து, இனி உயிர் தப்புவதே அரிதென்றெண்ணி, குசேலர் அங்கிருந்து வேருரிடத்துக்கு விரைவாக நடந்து சென்ருர்.

இந்தவிதமாக வெளியே இங்கு மங்கும் நிற்பதற்கு இடம் பெருமல் இருந்துகொண்டிருந்தால் உட்செல்லவே இயலாது என்று மனத்துள் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கையில், ஓர் அரசன் தன் சேனையுடன் உள்ளே சென்ருன். குசேலர் அச்சேனைக்குப் பின்னே நின்றுகொண்டிருந்தமையால், அதனுள் நுழைந்து செல்ல நேர்ந்தது. கும்பலால் மிகவும் நெருக்கப்பட்டு, பல துன்பங்களை அநுபவித்துக் கொண்டு மெல்ல மெல்ல அவர்களுடனே உட்புகுந்தார். கொஞ்சதூரம் அந்தக் கும்பலில் சென்ற பின், ஜன நெருக்கம் பின்னும் அதிகரித்தது. குசேலருடைய உடம்பு அந்த நெருக்கத்தில் மிகக் கசங்கியது. கால்கள் தரையிற் பாவவில்லை. கூட்டத்தின் மத்தியில் அந்த நிலையிலேயே பலரோடு அவரும் உட்சென்ருர். அவருடைய கைகள் கீழே தொங்கவிட முடியாமல் தலையின்மேல் உயர்த்தப்பட்டே யிருந்தன. கும்பலிலுள்ளோர் இவரை முன்னும் பின்னும் தள்ளிஞர்கள். சிற்சில விடங்களில் அவர் உடம்பை வளைத்துக்கொண்டு போகும்படி யிருந்தது. இதனுலுண்டான வேர்வையினுல்

நீராடியவர் போலிருந்தார். இனி இந்த ஜன நெருக்கத்தினின்றும் நீங்கிப்போவதே தாம் புதியதோர் ஜன்மம் எடுத்ததற்குச் சமானமாகும் என்று எண்ணிச் செல்லுகையில், கடைசியாகத் துவாரபாலகர்கள் நின்றுகொண்டிருக்கும் இடத்தைச் சேர்ந்தார். அத்துவாரபாலகர்கள் நெற்றியில் நாமம் இட்டுக்கொண்டு, துளசிமணி மாலையைத் தரித்துக்கொண்டு விளங்கினர். அவர்களைக் கண்டு குசேலர் களிகூர்ந்தார். மக்களுட் சிறந்த தவச் சிரேஷ்டர்களாலும், தேவர்களாலும் கூட எளிதில் அடைய முடியாத கண்ணன் திருத்தொண்டுசெய்யும் பாக்கியத்தைப் பெற்ற அன்னோரைப் பார்த்து மிக்க சந்தோஷமடைந்தார். வைஷ்ணவ ரத்னங்களாகிய இவர்களுக்குச் சமானமானவர் எவருண்டு என்று நினைத்து உவகைபூத்தார்.

அத்தியாயம்—7

துவாரபாலகர்களைச் சந்தித்தல்

மிக்க அற்பப் பொருளாகியதும், அளவிற் சிறியதுமான எள்ளையுங்கூட முடிவதற்கு இடமில்லாததும், எவரும் பார்த்துப் பரிகசிக்கும்படியாயுள்ளதும், பலவிடங்களில் கிழிந்து இணைத்த ஆடையைத் திருப்தியுடன் தரித்துக்கொண்டும், பார்ப்பவருக்கு நன்மதிப்பை உண்டு பண்ணாத மெலிந்த தேகத்துடனும் விளங்கிய குசேலர் அத்துவாரபாலகர்களின் முன்னே சென்று, 'நற்குணம் நிறைந்த வீரர்களே,' என்று அவர்களை ஆசீர்வதித்து, 'யான் கூறுவதைச் சிறிது தயையுடன் கேட்டருளல் வேண்டும்' என்று தொடங்கித் தான் வந்த காரியத்தைச் சுருக்கமாகச் சொன்னார். 'நான் அந்தணர் குலத்தில் உதித்த ஓர் எளியவன்; என் பெயர் சுதாமர் என்பது. துஷ்ட நிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம் செய்து பிரஜைகளைக் காப்பாற்றும்பொருட்டுத் திருவவதாரம் செய்த ஸ்ரீகண்ணபிரானுடன் நானும் இளமையில் ஒரு சாலை மாணக்கனாகவிருந்து சாந்தீப முனிவரிடம் பல கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றேன். பெரிய சமுத்திரத்தை மீகாமனுதவியால் கடந்து கரையைச் சேர்வதுபோல, மிக்க ஜனத்தொகுதியுள்ள இவ்வரண்மனையின் வாசலாகிய கடலைக் கருணை நிரம்பிய உங்களுடைய உதவியினால்தான் நான் கடக்கக்கூடும். தம்மை அடைந்தோர்க்கு இருபிறப்பிலும் இன்பங்களைத் தரவல்ல கண்ணனிடம் செல்ல நினைத்திருக்கிறேன். நான் இங்கு வந்திருப்பதை முன்பு கோவர்த்தனகிரியைக் குடை

யாகப் பிடித்துக் காத்தருளிய கருணாமூர்த்திக்குத் தெரிவித்து, என்னையும் அங்கே அழைத்துச் சென்று உபகாரம் செய்யவேண்டும். பெருமை பெற்ற உங்களிடம் நான் இதனை விரும்புகிறேன்,' என்றார்.

இவ்வாறு கூறியவுடன், அத்துவாரபாலகர்களைச் சுற்றி நின்றுகொண்டிருந்த சிலர் குசேலரைப் பார்த்து மதியீனத்தால் ஏளனம் செய்து இழிவான பல சொற்களையும் சொல்லத் தொடங்கினார்கள். "மிகவும் கிழிந்துபோன கந்தையை அணிந்துகொண்டிருப்பவரே! உலகத்தில் நல்லோரைப் பாதுகாத்துத் தீயோரைத் தண்டித்துவரும் லோகரக்ஷகனான ஸ்ரீ கண்ணனுக்கும் உனக்கும் உள்ள நிலைமையின் வித்தியாசத்தை நீ அறிந்திலைபோலும். வயதில் பெரியோர்கள் நூல்களைப் படிக்காமல் இருப்பினும் உலக ஞானமாயினும் பெற்றிருப்பார்களே. அத்தகைய ஞானங்கூட படித்தவராகிய உன்னிடம் காணப்படவில்லையே! இந்த விஷயத்தை நன்குத் தெரிந்துகொள்ள முடியாத விருத்தாப்பியத்தை அடைந்தாய்போலும். பகை மன்னர்களை வென்று அவர்கள் அணிந்துள்ள கிரீடங்களைத் தமது கால்களால் இடறும் கண்ணனுக்கும் பரம ஏழையாகிய உனக்கும், வலிமை மிகுந்த யானைக்கும் அற்ப ஜந்துவாகிய கொசுவுக்குமுள்ள தாரதம்மியம் இருக்கிறது. பரந்து பூமியின் எல்லையை அளாவி நிற்கும் கடலுக்கும் ஒரு மிருகத்தின் காற்குளம்பு பூமியில் பதிந்த விடத்தில் தேங்கியிருக்கும் நீருக்கும் உள்ள வித்தியாசம் உங்கள் இருவருக்கும் இருக்கின்றதே. இன்னும், கண்ணனுக்கும் உனக்கும் உள்ள தாரதம்மியம் முறையே ஒரு பெரிய மலைக்கும் ஒரு சிறிய மண்கட்டிக்கும், சூரிய ஒளிக்கும் மின்மினிப் பூச்சியின் ஒளிக்கும், கற்பக மரத்துக்கும் ஒரு

அற்பபுல்லுக்கும், ஆதிசேஷனுக்கும் ஒரு சிறு புழுவுக்கு முள்ள தாரதம்மியத்தை நிகர்க்கும்.

"கண்ணனைத் தரிசிக்க வருவோனுக்குச் செல்வத்துக்கு அதிபதி என்ற கீர்த்திவாய்ந்த பெயர் இருத்தல்வேண்டும். அவன் கைகளில் கடகங்களையும், காதுகளில் குண்டலங்களை யும், எல்லா விரல்களிலும் மோதிரங்களையும், மார்பில் பதக்கம் முத்துமாலை முதலியவற்றையும், தேகத்தில் பட்டு வஸ்திரங்களையும் உடையவனு யிருத்தல்வேண்டும். இன்னும், மிக்க செல்வத்தைச் செலவுசெய்ய சொந்தமும் பணிவிடைகளைச்செய்ய கைகூப்பி நிற்கும் ஏவலாளர்களும், குடை பிடிப்போர்களும் தன்னைச் சூழ, அழகிய பல்லக்கில் ஏறி தனது நிலைமைக்கு ஏற்ற கையுறையுடன் வரவேண்டும். இத்தகைய செல்வமுடையவர்களே இன்சொல் முதலியவற்ருல் ராஜ சபைக்கு வரவேற்கப்படுவார்கள். உன்னைப்போன்ற ஏழையை ஒருபுறம் தள்ளியே விடுவார்கள். நேற்று நடந்த விஷயங்களை இன்று மறக்கும்போது, உன்னுடைய பண்டைக்காலத்தின் நட்பையோ இன்னும் கண்ணன் மறவாமல் ஞாபகத்தில் வைத்திருப்பார்! அன்றியும், ஒரு பட்டணத்தை ஆளும் பாக்கியமும் செல்வமும் படைத்தவனிடம் தான் செல்வமுள்ளவனுடைய நட்பு நிலைநிற்கும். ஏழையின் நட்போ அவ்வாறு இராது. ஆதலின், கண்ணனிடத்தில் உன்னுடைய சிநேகத்தன்மை எவ்வாறு நிலைபெற்றிருக்கும்? ஒருவன் பல கலைகளைக் கற்றிருப்பினும், தரித்திரனுயிருந்தால், அவன் அரசனைக் காண அருகனல்லன். ஏனெனின், ஒருவனுக்கு வறுமை வருமாயின் அதனுடன் எல்லாவித குற்றங்களும் தீக்குணமும் அவனை வந்தடையும். அவன் வேதங்கள் கூறும் விதி விலக்குகளை மறந்துவிடுவான். இது

நல்லது இது கெட்டது என்று பிறர் வற்புறுத்திச் சொல்வதையுங்கேளான்.

"கண்ணனுடன் சமமாகக் கற்றகாலத்தில் அவருடைய சிநேகமுண்டு என்றனையே. அச்சிநேகம் உன்பால் அவருக்குண்டோ? உண்டெனின், அவர் உனக்கு இரண்டொரு திருமுகங்கள் அனுப்பியாவது, அல்லது, சிறந்த தூதனை அனுப்பியாவது உன்னைத் தன்னிடம் வருவித்துக்கொண்டிருக்கிறாரா? அவ்வாறு பழக்கமில்லையாயின், அவருடைய சிநேகம் உனக்குப் பயன்படாது. சாந்தீப முனிவரிடம் மாணாக்கராக இருந்து கல்வி பயின்ற அந்த இளமைப் பருவத்தில் ஒருவேளை அப்போதிருந்த வயதுக்கும் நிலைக்குந் தக்கபடி உன்னை கண்ணன் சிநேகிதனாகக் கொண்டிருக்கலாம். இப்போதுள்ள அவர் நிலைக்கு ஏற்ற சிநேகிதனென்று உன்னைச் சொல்லிக்கொண்டு நீ அவரைப் பார்க்கப்போவது பொருந்தாது. சுவர்க்கலோகத்துக்கு அதிபதியாகிய தேவேந்திரனே அவரை அணுக முடியாதென்றால், நீ அவரிடம் செல்வது அசாத்தியமான காரியமாகும். குபேரனும் இன்னும் அவரைப் போன்றவர்களும் கண்ணனுடைய தரிசனத்துக்கு வந்து அவரைப் பார்க்க முடியாமல் காத்துக்கொண்டிருப்பதை நீ அறியவில்லைபோலும். நாம் வார்க்கும் எண்ணெயினாலே பிரகாசமாக எரிகின்ற விளக்கை மிக நெருங்குவோமாயின், அது நம்மைச் சுட்டுவிடுமே யல்லாது இன்புறுத்தாது. அதுபோல பழைய சிநேகத்தைக் கொண்டே காணப் போகலாம் என்று நினைத்துச் சென்றாலோ, அவமான மடைவாய். உன்னுடைய தொழிலை விட்டுவிட்டு உன் தகுதிக்கேற்றபடி உண்டு உடுத்தாமல், பேராசையால் மனத்தில் ஏதோ ஒரு அசாத்தியமான எண்ணத்தை உண்டாக்கிக்

கொண்டு, நெடுநாட் பிரயாணத்தால் தேக பலங்குன்றி மனமுஞ் சோர்ந்து இங்கு வந்தாயே. உன் எண்ணத்தை ஆராய்ந்து பார்த்தால், சந்திரனைப் பிடித்துக்கொடுக்கும்படி மனங்கசிந்து அழுகின்ற கேவலம் ஓர் குழந்தையின் பேதைமையை ஒத்திருக்கிறது.

"இங்கே நம்மெதிரில் நிற்பவர் செல்வத்தில் இந்திரனையொத்த செழிப்புள்ள மகத தேசத்தரசர். இதோ குதிரைக் கருகே நிற்பவர் வாழை, பலா முதலியவற்ருற் சிறப்புற்று விளங்கும் கொங்கண தேசத்து அதிபதி. வாளையேந்தி உனக்கருகே நிற்பவர் குளங்கள் முதலியவைகளால் மேன்மை பெற்ற கூர்ச்சர தேசத்து மன்னர். அதோ அழகு வாய்ந்த தோள்களுடன் நிற்பவர் வாழை, கமுகு, நீர்வளங்கள் முதலியவற்ருற் சிறப்பு வாய்ந்த அங்க தேசாதிபதி. இதோ முத்துக்குடை நிழலில் தங்கியிருப்பவர் விசேஷ மாடமாளிகைகள் அமைக்கப்பெற்ற மிகுந்த செல்வமுள்ள காம்போஜ தேசத்துக்குரியவர். ஒளி வீசும் கிரீடம் தரித்துக்கொண்டிருப்பவர் பல்லவ தேசத்து ராஜன். அவருக்கருகே வயிர குண்டலங்களை அணிந்து பதக்கத்துடன் பிரகாசித்து நிற்பவர் கலிங்க தேசத்து மன்னர். தன்னைச் சுற்றி நாற்புறமும் சேனைகளுடன் இருப்பவர் மணம் மிகுந்த புஷ்பங்கள் நிறையப்பெற்ற வாவிகள் முதலியவற்ருல் பொலிவு பெற்ற கேகய நாட்டரசர். இதோ வீரர்போல நிற்பவர் எப்போதும் மழை பெய்து நீர்நிலவளங்களால் சிறப்புற்ற சிங்கள தேசத்து மன்னர். பெரும்புகழுடனும் சூரியனை யொத்த ஒளியுடனும் பிரகாசிப்பவர் சோனக தேசத்தரசர். அவருக்கெதிரில் யானைகளின் நடுவே சிங்கம்போல் நிற்பவர் வயல்கள், வாய்க்கால்கள், ஓடைகள் முதலியவை நிறையப்பெற்ற

வங்க தேசத்துக்கோன். கவசப்போர்வையுடன் வாலிபராய் நிற்பவர் மராட தேசத்தரசர். அவருக்குச் சமீபத்தில், சூழ்ந்திருக்கும் சேனையின் நடுவில் ஆண் சிங்கம்போல் தோற்றுபவர் கரும்புத் தோட்டங்கள், வயல்கள் முதலிய வளங்கள் பலவற்றையுமுடைய மச்ச தேசத்தரசர். ஒளியுள்ள கிரீடத்தை அணிந்து ஆண் யானையைப்போல் நிற்பவர் எங்கும் மழையில்லாத காலத்தும் விசேஷமாகப் பொழியும் குடக நாட்டு வேந்தர். விசேஷ கையுறையோடு ஸ்ரீ கண்ணனைப் பார்க்க வந்திருப்பவர் செழிப்புள்ள காந்தார தேசத்தரசர். இத்தனை அரசர்களுள்ளே உன்னை யாருக்குச் சமானமானவனென்று சொல்லலாம்? இவருள் எவருக்காயினும் சமானமாக மதிக்கக் கூடாத நிலையிலிருக்கும்போது, நீ கண்ணனுடைய தரிசனத்தைப் பெற முயலுதல் சுலப சாத்தியமாகுமோ? நீ அவரைப் பார்க்க விரும்புவது கை கால் முதலிய அவயவங்களிற் சக்தியில்லாத அங்கஹீனமுள்ள முடவனொருவன் மேகத்தை யளாவி நிற்கும் மரத்தின் உச்சியிலுள்ள தேன் கூண்டைப் பெறவெண்ணுவதை யொக்கும். தேனைப் பெறாத துக்கம் ஒருபுறமிருக்க, அம்முடவன் அசாத்தியமான காரியத்தைச் செய்யத் தொடங்கினான் என்று பிறர் பரிகாசம் செய்வதற்கும் பாத்திரனாக ஆகிவிடுவான். அஃதொன்றே யன்றி, இத்தலைவாயிலில் நிற்பவர்கள் அனைவருக்கும் பொருளும் ஏவலும் உண்டு. ஆதலின் எவ்வளவு காலம் அவர்கள் இங்கே காத்துக்கொண்டிருப்பினும், அவர்களுக்குச் சிரமமாவது தீமையாவது ஒன்றும் உண்டாகமாட்டாது. ஆனால் வறுமை யென்னும் நோயால் வருந்தும் உனக்கு அவ்வாறு நீடித்தகாலம் காத்திருத்தல் கஷ்டமாயிருக்குமே. ஆதலால் நீ இனி வந்தவழியே ஊருக்குத் திரும்பிப் போதலே தகுதியாகும்” என்று குசேலருடைய

மகிமையைச் சிறிதும் உணர்வதற்குப் போதிய அறிவில்லா மூடர்கள் சொன்னார்கள்.

இவ்வாறு அவர்கள் சொல்லிய இகழ்ச்சி மொழிகளை யெல்லாம் சாந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்த அந்தண சிரேஷ்டர் மிக்க மனங்குழம்பி, பின் வருமாறு எண்ணினார். "கண்ணனைத் தரிசிக்க வருவோர் பளபளப்பாயுள்ள பதக்கம், முத்துமாலை, சிறப்புள்ள பீதாம்பரம் முதலியவற்றை அணிந்துகொண்டு பொற்சிவிகைகளின் மீதேறி வரவேண்டுமாமே. இவற்றை யெல்லாம் நாம் பெறுதல் எங்ஙனம்? இப்படிப்பட்ட பொருள்களை எனது பாட்டன் காலத்திலும் நான் கேட்டதில்லையே. இனி இப்போது என் செய்வது? எதையும் முன்னமேயே தீர விசாரியாமல் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவது தீமையையே விளைவிக்கும். இதுவேயன்றி, கந்தைத் துணியில் கட்டி வைத்திருக்கும் நமது கையுறையாகிய அவலைமாத்திரம் அவர்கள் காணுவார்களாயின், நம்மை இன்னும் இகழ்ந்து பேசுவார்கள் என்பது நிச்சயம்" என்று கலக்கமுற்று, மனம் சோர்ந்து துன்புறும் போது, அறிவிற்சிறந்த குணசாலிகளாகிய அவ் வாயிற்காப்போர் இவ்வாறு பேசிய மூடர்களைப் பார்த்து அவர்கள் தவறு செய்தாரெனக் கண்டித்தார்கள்.

"தவச் சிரேஷ்டராகிய இவரை நீங்கள் யாரென மதித்தீர்கள்? இவர் உண்மைக்கு உறைவிடமான உத்தம புருஷர். அநேகம் அரிய பெரிய விரதங்களை மேற்கொண்ட காரணத்தால் சரீர வன்மை குறைந்திருக்கின்றனர். இவர் வேதங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றவரேயன்றிப் பிறர் வீடுகள்தோறும் சென்று யாசிப்பவரல்லர். இனிய மொழிகளையே எப்போதும் கூறும் சுபாவமுள்ள பெரியவர். 'அரிதரிது மானிடராதலரிது' என்றபடி மானிடப் பிறப்பைப் பெற்று, நல்லறத்தை இயற்றி

மோக்ஷத்தைப் பெற விரும்புவோர் சான்ருேர். இங்கு நின்று கொண்டிருப்பவரைச் சாமானியமான மனுஷியரென்று நினைக்கக்கூடாது. இவரோ மகா ஞானியாவார். சிலர் ஞானிகளைப் போலத் தோற்றுவார்கள். இவரோ உண்மையாகவே சிறந்ததும், செய்வதற் கருமையானதுமான தவங்களிலே, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று சொல்லப்பட்ட நான்கு கரணங்களையும் ஒருவழிப்பட்டு நிற்கச்செய்தவராகக் காணப்படுகிருர். உலகப்பற்றை அறவே ஒழித்த இவரைப்போன்ற பெரியோர்களுக்கு அரசர்களாலும், உங்களாலும், எங்களாலும், பொன்னுலும், ரத்னங்களாலும் செய்யக்கூடியது ஒன்றுமேயில்லை. உண்மையான ஞானத்தைப் பெற்றவர்கள், பிரளயகாலத்தில் எழுகின்ற மேகங்கள் ஒன்றுகூடி பேரிடி இடித்து மழையைப் பொழிந்தாலும், வலிய சுழல் காற்று எழுந்து மலைகளை வேருேடு பூமியினின்றும் பிடுங்கி ஒன்றன் மேல் ஒன்று தாக்கும்படி மோதினுலும், ஏழு கடல்களும் தம் நிலை மாறி உலக அமைப்பை மாற்றினுலும், மனோநிலையில் சிறிதும் மாறுபாடு அடையாமல், அவற்றை யெல்லாங் கண்டு யாதொரு பயமுமின்றி கடவுளின் கழலிணைகளையே துணையாகக்கொண்ட நிச்சய புத்தியுடன் அஞ்சாதிருப்பர். இன்னும், அவர்களுக்குப் பரிமளமுள்ள சந்தனத்தைப் பூசி மரியாதைகள் செய்யினும், ஒன்றே; அல்லது அவர்களைச் சாமானிய மனிதரென்று நினைத்து இகழ்ச்சியாகப் பல சொற்களைக் கூறினும், அவர்களுக்கு எல்லாம் ஒன்றே. ஏனெனில், உலகத்தாரைப்போல அவர்களுக்கு உலக விஷயங்களில் விருப்பமுமில்லை, வெறுப்புமில்லை. மலைகளிலுள்ள கிழங்கு வேர் முதலியவற்றையே அமிர்தமான ஆகாரமாகக் கொள்வார். இன்றைக்கு வேண்டுமே என்ற கவலையும் நாளைக்கு வேண்டுமே என்ற கவலையும் சிறிதும் இல்லாதவர்கள்.

பரந்த ஆகாயத்திலே பறந்து செல்லுதல், பிறகு பாதாள லோகத்துக்குப் போதல், மீண்டும் இப் பூலோகத் துக்கே வருதல், வேறொரு சரீரத்திற் போய்ச் சேருதல், வேண்டியவற்றை யெல்லாம் தாங்களிருக்கும் இடத்துக்கே வருவித்துக்கொள்ளுதல் முதலாகிய பலஅருமையான சித்தி களையும் விரும்பார். இவரைப்போன்ற ஞானிகள், தமது மனத்தை ஈசுவர பக்தியிற் செலுத்திய காரணத்தால், சில சம யம் கைகொட்டிப் பாடியாடுவார்; வேறு சமயம் சித்தப்பிரமை பிடித்தவர்போலத் திரிவார்; நகைப்பார்; ஒவ்வொரு தினம் ஒவ்வோரிடத்தில் இருப்பார்; தம்மைச் சுற்றியுள்ளவரோடு இணங்கி யிரார்; கந்தையை யன்றி வேறொன்றை அணிந்து கொள்ள வேண்டுமென்று இச்சை கொள்ளார். இப்பேர்ப்பட் டவர்களே உண்மையான ஞானிகளென்று சொல்லப்படுவார்.

“இப்படியன்றி, சிலர் பொருளில் விருப்பமில்லாத ரிஷி களைப்போல வெளியே மாத்திரம் காட்டிக்கொள்ளுவார்கள். அப்படிப்பட்ட பொய்யர்களை நம்பி அவர்களிடம் உபதேசம் பெறுவோர் மோசம் போவார்கள். ஆற்று நீர்ப்பெருக்கில் அடித்துக்கொண்டு வரப்பட்டதோர் கரடியை ஓரிடையன் ஆடென்று நினைத்து, அதைக் கரையிலேற்றி அதனால் தீங் கெய்திக் கடைசியாக இறந்த அவ்வாட்டிடையனைப்போல இடர்ப்படுவார். இப்போலியர்கள் பிறர் மனம் மயங்கப் பேசி, அவர்களுடைய கையிலுள்ள பொருளை அபகரிக்குந்தொழிலை மேற்கொண்டவர்களே யொழிய, உண்மையில் பரோபகார சிந்தை யென்பது சிறிதும் அற்ற கொடியரேயாவர். ஆனால் உண்மையான ஞானிகளோ சிறந்து விளங்கும் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி, ஆனால் குடும்பப் பற்றின்றி, மனத்திருப் தியுடன் உண்டும் உடுத்துமிருப்பார். எல்லாராலும் மேன்

மையானதென்று புகழப்படும் துறவறத்திலும் இவர்கள் நடத்தும் இல்லறமே மேலானதாகும். இவர்களே தேவர்களுக்குச் சமானமானவர். ஏனெனில், உலகத்தைத் துறந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும், இறந்தவர்களுக்கும் இல்வாழ்வானே துணையாவான். ஆனல், ஞானம் பெறுதவர்கள் இல்லறம் பூண்டிருப்பினும் துறவறம் பூண்டிருப்பினும், அவர்களால் தங்களுக்காவது பிறருக்காவது யாதொரு பயனுமில்லை.

"இங்கெதிரில் நிற்பவர் சிறந்த ஞானியராயினும், இல்வாழ்வான் செய்யவேண்டிய நற்றொழில்களை யெல்லாம் மேம்படச் செய்பவர். யாகம், தவம் முதலியவற்றைச் செய்ததால் இவருடைய தேகம் வாடி மெலிந்திருக்கிறது. மூன்றுலகத்திலும் நூல்களால் சிறப்பித்துக் கூறப்படும் இஞ்ஞானியார் நம்மை ஆசிர்வதிக்க இங்கு எழுந்தருளி யிருக்கிறரென்றே நாம் எண்ணவேண்டும். இளமையில் கண்ணனுடன் இவர் ஒருகலை மாணுக்கனுகவிருந்து அவருடைய சிநேகத்தைப் பெற்றிருப்பது உண்மையாய்த்தானிருக்கும். தன்னுடைய பழைய நண்பரைக் காண அவாக்கொண்டு இவர் இங்கு வந்திருக்கிருரே தவிர, நம்மரசரிடமிருந்து இவர் ஏதாவதொன்றைப் பெறுவதற்கு வந்தவரல்லர். நாம் செய்த தீவினை நம்மைவிட்டு நீங்கியதன் காரணமாகவே இவருடைய தரிசனம் நமக்கு நம்முடைய புண்ணிய பலனுக இன்று கிடைத்தது. இம்முனிவரை நோக்குங் காலத்தில் மனத்தில் ஒருவகைக் களிப்புத் தோன்றுகிறது. தேகத்தில் மயிர்ச்சிலிர்ப்பு உண்டாகிறது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. இவரைத் துதிக்குங்கால் எமது நாக்கு படபடவென்று துடிக்கின்றது. ஆதலின், நாம் இனிமேல் சிறிதும் தாமதமின்றி சீக்கிரமாக ராஜாதிராஜனுகிய கண்ண

னிடம் சென்று அந்தண சிகாமணியாகிய சுதாமருடைய வரவை மிகுந்த பயபக்தியுடன் தெரிவித்தல் வேண்டும்" என்று அத்துவாரபாலகர்கள் முன்னே குசேலரைப் பார்த்துப் பிதற்றிய அறிவில் பலவீனர்களான ஈரமில்லா நெஞ்சத்தார் வாய் மூடும்படி பல சொற்களைக் கூறிக் கண்டித்தார்கள். பிறகு அவர்கள் சுதாமரை நோக்கி, "வேதங்களை யெல்லாம் நன்குணர்ந்து ஜீவன் முத்திக்குப் பெருந்தடையாயிருக்கும் பிறவித்துன்பங்களை யெல்லாம் கடந்து ஞானச் செல்வமடைந்த பெரியோரே! உம்முடைய நல்வரவால் எங்கள் குற்றங்கள் நீங்கி நாங்கள் இன்புற்றோம். அநேகம் சாஸ்திரங்களையும் பல நூல்களையும் ஆராய்ச்சி செய்ததையும், அறிவுடையோரால் பெற விரும்பும் உமது தவச் செல்வத்தின் மகிமையையும், மனத்தின் உண்மையையும், மாசற்ற குணத்தையும், குற்றங் குறைகளால் நிறைந்த இவ்வுலகமா அறியும்? ஒருபோதும் அறியாது. அறிவீனர்களாகிய இச் சிறுவர்கள் நன்கு தெளியாமல் அற்ப புத்தியால் பேசியவற்றை மறந்து அவர்களை மன்னித்தல் வேண்டும். அவர்கள் கூறியவற்றை உங்கள் உள்ளத்தில் வைத்தாலே அவர்கள் மீளாத துன்பக்கடலில் விழுந்தழிவார்கள். சான்றோர்கள், தம்மை இகழ்ந்தவர்களைப் பொறுத்தருளுவதேயன்றி, அவ்வாறு இகழ்ந்தமையால் அவர்களுக்குத் தீங்கொன்றும் வராமலிருக்க வேண்டுமே யென்றும் பரிவர் அன்றோ. ஆதலால், அவர்களுடைய துன்பத்துக்கு நீங்கள் காரணமாக இல்லாதிருக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கை. ஏனெனில், ஒருவர் செய்த நன்றியை மறக்கக்கூடாதே யொழிய, ஒருவர் செய்த தீமையை அன்றே மறத்தல் நன்றாகும் என்ற உண்மையை நாங்கள் தங்களுக்குச் சொல்லப்புகுவது மிகையாகும். சிறியோர் செய்த சிறு பிழைகளைப் பொறுப்பது பெரி

யோர் கடமையாதலால் தங்களை இவர்கள் பொருட்டு வேண்டுகின்றோம். புண்ணிய தீர்த்தங்களாகிய கங்கை முதலிய நதிகளில் ஸ்நானம் செய்வதாலும், அநேக தருமங் களை இயற்றுவதாலும், அருமையான யாகங்கள் முதலிய வற்றை யெல்லாம் செய்வதாலும் ஒருவன் பெறக்கூடிய பெரும்பேறுகள் யாவும் மேன்மையுள்ள உங்கள் தரிசனத் தாலேயே உண்டாகும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் கால மென்னும் முக்காலங்களையும் உணர்ந்த தங்களுக்கு அநேக நமஸ்காரம். தாங்கள் சற்று இங்கே இருந்தால், யாம் அரண்மனைக்குள்ளிருக்கும் ஸ்ரீ பரந்தாமனிடம் விரை விற்சென்று உங்கள் வருகையைத் தெரிவித்து வருகிறோம்" என்று சொல்லி, அவரை நமஸ்கரித்து, பிறகு அரண்மனைக் குட் சென்றார்.

அத்தியாயம்—8

கண்ணன் அரண்மனைக்குப் போதல்

சென்றவர்களாகிய துவாரபாலகர்கள் விலைமதிப்பில்லாத ரத்னங்களால் இழைக்கப்பெற்றதும் பொன்னாலாக்கப் பட்டதுமான எழுபத்திரண்டு திருவாயில்களையும் வெகு வேகமாகக் கடந்து, மன்னர்கள் அநேகர் நெருங்கி நிற்கும் சிறப்புவாய்ந்த கொலுமண்டபத்தை அடைந்தார்கள். அங்கே கண்ணபிரான் இல்லாதது கண்டு, அங்கிருந்தோர் மூலமாக அவர் அந்தப்புரத்திலிருப்பதாகத் தெரிந்து கொண்டு, அந்தப்புரத்துக்குச் சரேலென்று ஒரே ஓட்டமாக ஓடிச்சென்றார்கள்.

பொன் முதலியவற்றை அஸ்திவாரமாகக்கொண்டு கட்டப்பெற்ற அவ்வழகிய அரண்மனையின் மதில்கள்மேல் மின்னல்களோடு கூடிய மேகங்கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. அங்கே நீலமலையின் கற்களால் ஒழுங்காக யாளிமுகம் போல அமைக்கப்பெற்ற படிகள் அநேக மிருந்தன. சுவர்களெல்லாம் சந்திரகாந்தக் கற்களாலும் வெள்ளிக் கற்களாலும் ஆகியவை. வாயில்களும் கதவுகளும் பொன்னாற் செய்யப்பெற்று ரத்னங்களால் இழைக்கப்பெற்றிருந்தன. மாடியின் உச்சியில் பிரகாசமுள்ள ரத்னக் கலசங்கள் அழகு பெற வைத்திருந்த தோற்றம் கண் கவரத்தக்க சிறப்புவாய்ந்ததாயிருந்தது. சந்திரனுடைய நிலவு பரவி நிற்கும்படி அமைக்கப்பெற்ற பெரிய நிலாமுற்றங்களும், கண்ணைக் கவர வல்ல அழகிய சித்திரங்களும் அந்தப்புரத்தினிடத்தே காணப்பட்டன.

இன்னும் மலர் மாலைகள், ரத்ன மாலைகள், சாமரம் முதலியவைகளெல்லாம் நாற்புறமும் வெகு விமரிசையாகத் தொங்கவிடப்பட்டிருந்தன.

வாழை, பலா, தேமா, கமுகு, தென்னை, முருக்கம், நாரத்தை, மாதுளை, முந்திரி முதலிய மரங்கள் செவ்வனே ஓங்கி வளர்ந்திருக்கும் சோலைகளும் பழமரங்களும் அவ் விடத்தைச் சுற்றிலும் இருந்தன. அச் சோலைகளிலிருக்கும் மயில்கள் அங்கே வரும் நீலநிறக் கண்ணனைக் கண்டு, அவரை மேகமென்றெண்ணி, தங்கள் கலாபங்களை விரித்து சந்தோஷ மாக அகவும். மாதர்கள் அச்சோலைகளில் பந்தடித்துக் களிப்புற்றிருந்தனர். நெடுந்தூரம் மணம் வீசும் பூந்தோட்டங்களில் கோங்கு, மாதவி, பாதிரி, குரவம், சுரபுன்னை, புன்னை, சண்பகம், குங்குமம், சந்தனம், செருந்தி, தாழை, மந்தாரம், மாலதி, முல்லை முதலிய நறுமணமுள்ள புஷ்பச் செடிகள் செறிந்திருந்தன. இவையன்றி, விரும்பியவற்றைத் தரவல்ல கற்பகத்தருவும் அங்கிருந்தது.

வெண்ணிறமுள்ள பளிங்குக் கற்களைக் கீழே போட்டு, அவற்றைச்சுற்றி நாற்புறமும் வெள்ளிப்படிகளை அமைத்து, வெண்மணலைக் கொட்டி, அதன்மேல் குளிர்ந்த நீர் நிறைக்கப் பெற்ற அநேகம் குளங்களும் அங்குண்டு. அத் தடாகங்களில் வேண்டியபோது தண்ணீரை அதிகமாக்கிக் கொள்ளவும், வேண்டாதபோது நீரைக் குறைத்துக்கொள்ளவும் ஏற்றதாக மதகுகளும் இருந்தன. இந்தத் தடாகங்களில் செந்தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்திருக்கும். அன்னப்பக்ஷிகளும் அங்கே வந்துசேரும். தடாகங்களின் மத்தியிலுள்ள வெண் மாடங்களின்மீது புஷ்பக்கொடிகள் படர்ந்து பச்சை வர்ண முள்ள இலைகள் மூடப்பட்டிருந்த தோற்றம், வெண்மையான

சரீரத்தின்மேல் நீலநிறமுள்ள ஆடையைத் தரித்த பலராம ருடைய தோற்றத்தை மனத்தில் உண்டுபண்ணும்.

சுகந்த பரிமளம் வீசும் பன்னீர், அகிற்புகை முதலிய திரவியங்களின் நறுமணம் நிறைந்த கூடங்களில், செவந்த நிறமுள்ள பெரிய ரத்னக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. இவ்வளவு சிறப்பான தோற்றத்தோடு கூடிய திவ்விய அந்தப் புர அரண்மனைவாயிலில் நிற்கும் காவல் மாதரிடம் துவார பாலகர்கள் சென்று, தங்களுடைய வரவை வேந்தனுக்குத் தெரிவிக்கும்படி கோர, அவரும் சீக்கிரமாகப்போய்க் கண்ண னுக்கு அவர்கள் வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். உடனே கண்ணன் துவாரபாலகர்களை உள்ளே வரும்படி ஆஞ்ஞா பிக்க, அவர்கள் மிக்க சந்தோஷத்தோடு உட்சென்று அங்கு வீற்றிருக்கும் கண்ணனைத் தரிசித்தார்கள். தங்கள் சிரசின் மேற் கைகளைக் கூப்பிக்கொண்டு கண்ணனை நமஸ்கரித்து, பிறகு மிக்க வணக்கத்துடன் எழுந்து நின்று, தமது வஸ்தி ரங்களை உடம்போடு சேர்த்து ஒடுக்கிக்கொண்டு கைகூப்பி நிற்கும் துவாரபாலகர்களை நோக்கி, 'நீங்கள் இப்போது இங்கு வந்த விஷயம் என்ன?' என்று கண்ணன் கேட்டார். வேதத்தால் புகழப்படுகிறவரும், சந்திரவமிசத்தைச் சிறப் பித்தவரும், இந்திராதி தேவர்களும் எளிதிற் காணமுடியா தவரும், செவந்த தாமரையை நிகர்க்கும் கண்ணையுடைய வரும், துவாரகா நாதருமாகிய கண்ணபிரானுக்கு அத்துவார பாலகர்கள் முதலில் அஞ்சலி செய்து, தாங்கள் வந்த முகாந் தரத்தைச் சொன்னார்கள். 'வெகு வருஷங்களுக்கு முன்னே எங்கள் நாதனோடு பல அரிய நூல்களையும் வேதவேதாங்கங் களையும் கற்றவரும், எங்கள் ராஜாதி ராஜனுடைய நட்பைப் பெரிதும் பாராட்டி விரும்பியவரும், கிழிந்த ஆடையைப் பெருமையாகவே பாவித்து உடுத்திருப்பவரும், வேதியர்

குலத்தவரும், நற்குணம் பொருந்தியவரும், சுதாமர் என்ற நாமத்தை யுடையவருமாகிய ஒருவர் சமுகத்தைத் தரிசிக்க வந்திருக்கிறார். அவருடைய தேகம் மிகவும் இளைத்து வாடி யிருக்கிறது. அவர் சமுகத்தினிடம் வைத்திருக்கும் அன்புக்கு ஓர் எல்லை யில்லை. அவர் இப்போது அரண்மனை வாயிலில் நிற்கிறார். இவ்விஷயம் தெரிவிக்கவே இங்கு வந்தோம்' என்று துவாரபாலகர்கள் பணிந்துரைத்தனர். அவர்கள் உரைத்தவற்றைக் கேட்ட கண்ணன் பெரிதும் மன உவகை அடைந்து அருள் விளங்காநிற்கும் முகத்துடன் அத்துவாரபாலகர்களை நோக்கி, 'நீங்கள் விரைவிற்போய் இவ்வரண்மனை வாயிலில் நிற்கும் அத்தவச்சிரேஷ்டரை உடனே அழைத்து வாருங்கள், உடனே அழைத்து வாருங்கள், உடனே அழைத்து வாருங்கள்' என்று கடாக்ஷித்தார்.

அவ்வாறு திருவாய்மலர்ந்தருளிய உரைகளைக் கேட்ட அக்கணமே துவாரபாலகர்கள் உள்ளம் பூரித்து, அநேகம் வாயில்கள் வழியாக ஓடோடியும் சென்று, தாம் காக்கின்ற வாயிலை அடைந்து, ஆங்கு மனத்தூய்மையுடன் விளங்கும் குசேலரிடம் சென்றார்கள். சென்றதும், அவர்கள் உலகத்தை வெறுத்த அம்முனிபுங்கவரை வணங்கிச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, 'தேவரீர் வருகையைத் தெரிவிக்க நாங்கள் அநேகம் வாயில்களை யெல்லாம் கடந்து கொலுமண்டபத்தை அடைந்தோம். அங்கு கண்ணனைக் காணாது, அவர் அந்தப்புரத்திலிருப்பதாகத் தெரிந்துகொண்டு அங்கு சென்று கண்ணனைத் தரிசித்தோம். தரிசித்து தேவரீர் வருகையைத் தெரிவித்தபோது அவருக்குண்டான ஆனந்தத்துக்கு ஓர் அளவே இல்லாமலிருந்தது. நல்லோருடைய சிநேகத்தினும் இன்பத்தை யுண்டாக்கக்கூடியது ஒன்று மில்லை யன்றோ.

தங்களுடைய வருகையைத் தெரிவித்த அக்கணமே சிலநாட்களாகக் காணாத தாயைக் கண்ட குழந்தைக்கு உண்டாகும் இன்பத்தை கண்ணன் அநுபவித்து, இப்பொழுதே போய் அவரை அழைத்து வாருங்கள் என்று மும்முறை கடாக்ஷித்தருளினார். ஆதலால், தாங்கள் இனி விரைவாகக் கண்ணனிடம் செல்லப் புறப்படவேண்டும். காலதாமதம் செய்யின், கண்ணனே இங்கு வந்துவிடுவார் போலிருக்கிறது' என்று கூறி, அவரைப் பணிந்து நின்றனர்.

அவர்கள் உரையைக் கேட்டவுடனே, குசேலரும் விரைவில் அவ்விடம் விட்டேகினர். முன்பு குசேலரைப் பழித்த புல்லறிவாளர்கள், அவர் கண்ணனைத் தரிசிக்கப்போவதைக் கண்டு அச்சமுற்றார்கள். 'இவரைச் சாமானியமான ஏழை அந்தணரென்று நினைத்து நாம் இதுகாறும் கூறிய தீயவார்த்தைகளை நினைத்தமாத்திரத்திலேயே அவை நம்மைச் சுடுகின்றன. அவ்வாறிருக்க, அவ்வார்த்தைகளை ஸ்ரீ கண்ணன் ஒரு சமயம் அறிவாராயின் பிறகு நமக்கு நேரிடும் தீங்குக்கும் ஓர் அளவுண்டோ ? ஆயினும் இத்தவச்சிரேஷ்டருக்குள்ள இயல்பான தயையாலும், ஜீவர்களிடம் பூண்ட கருணையினாலும் நாம் அறிவீனத்தால் பிதற்றியவற்றை ஒரு பொருட்டாக எண்ணி மனத்தில் வைத்துக் கொள்ளமாட்டார்' என்று தமக்குள்ளேயே நினைந்து நினைந்து ஒருவாறு தேறியிருந்தனர்.

கண்ணனைத் தரிசிக்கப்போகிறோம் என்ற எண்ணம் பின்னே நின்று விரைவாகச் செலுத்த, துவாரபாலகர்கள் அதிவேகமாக முன்னே நடந்து வழி காட்ட, குசேலர் மனப்பூரிப்போடு வேகமாக நடந்து சென்றார். அவ்வாறு நடந்து செல்லுகையில், வழியேயுள்ள சிறப்புக்கள் அனைத்தையும் நோக்கி, உள்ளுவகை பூத்து, இதனைத் தேவலோகம் நிகர்க்

கும் என்றும் மதிக்கலாமோ வென்று ஆச்சரியத்தோடும் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டே சிறப்பு வாய்ந்த வாயில்கள் பலவற்றையும் கடந்து, கிரீடம் தரித்த மன்னர்கள் கண்ணனைக் காணுமாறு வந்து காத்துக்கொண்டிருக்கும் சபாமண்டபத்தையும் நீங்கி, பொன், ரத்னம் முதலியவற்றுல் விளங்கும் அந்தப்புரத்தைச் சடுதியில் அடைந்தார்.

அவ்வந்தப்புரத்தின் அழகைக் கான இவ்விரண்டு கண்களும் போதா. சித்திரம் வரைவதில் மிக வல்லுனர்களால் எழுதப்பெற்ற கண்ணனது உருவப் படத்தையும் இன்னும் அநேகம் அழகுள்ள இயற்கைப் பொருள்களின் சித்திரங்களையும் கண்டார். கண்ணனுடைய சித்திரத்தைக் கண்ட குசேலர், கண்ணன்தான் நிற்கிறுர் என்று நினைத்து அங்கே சற்று தாமதித்து, பின்னும் உற்றுநோக்கிய பிறகு அது சித்திரமெனத் தெளிந்தார். இவ்வாறு ஆங்குள்ள சித்திரங்களைக் குசேலர் பார்த்துக்கொண்டு போகும்போது, சூரியன் வரவை எதிர்பார்த்திருக்கும் தாமரையைப் போலவும், சந்திரனைக் காண விரும்பும் செவந்த ஆம்பலைப் போலவும், மேகங்களைக் கண்டு கலாபத்தை விரித்து ஆனந்தமாக இருக்க மனங்கொண்ட மயிலை நிகர்க்கவும், தாய்ப் பசுவின் வரவை நோக்கி நிற்கும் இளங்கன்றைப் போலவும், நீர் நிலையைப் பார்க்க ஆர்வமிக்க தாகமுள்ளவனையும் ஒத்து, ஸ்ரீ கண்ணன் குசேலர் வருகையை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். குசேலர் அதி சீக்கிரத்தில் வழிகடந்து கண்ணனுடைய அந்தப்புரத்தை அடைந்தார். அடைந்தவுடன், வறுமைப் பிணியாற் பீடிக்கப்பட்டவன் பெரியதோர் நிதியைக் கண்டது போலவும், பசியால் மெலிந்த ஒருவன் தனக்கு நேரே தேவாமிருதத்தைக் கண்டது போலவும், வெயிலில் வருந்தி யலைந்தவன் நினைத்ததைத் தரவல்ல கற்

பகத் தருவைச் சமீபித்ததுபோலவும், உலகப் பற்றுக்களை யொழித்து நல்ல ஆசாரியனை அடைய விருப்பமிகுந்த சிடன் தன்னுடைய குருவைச் சந்தித்தது போலவும் சுதாமர், திரு மகளுக்குச் சிறப்பு வாய்ந்த உறைவிடமாகிய திருமார்பினை யுடையவனும், நீலமேக வர்ணமுடையவனும், சங்கு சக்கரத் தைத் தமது இடது வலது கரங்களில் ஏந்தியவரும், உல கத்தை ரக்ஷிப்பவரும், வசுதேவருடைய புத்திரரும், மண முள்ள துளசி மாலையை அணிந்தவருமாகிய ஸ்ரீ கண்ணனைச் சற்றுத் தூரத்தில் கண்டார்.

அத்தியாயம்—9

கண்ணனைத் தரிசித்தல்

கண்டமாத்திரத்திலேயே தமக்குண்டான மனக்களிப் பால் முன்னிலும் கடுகி நடந்து சென்றார். அவரைக்கண்ட கண்ணன் அணையை அடித்துக்கொண்டு பெருகியோடும் வெள்ளம்போல் தமது இருக்கையை விட்டெழுந்து, மனக் கிளர்ச்சியும் தேகத்தில் மயிர்ச்சிலிர்ப்பும் உண்டாக, தவ சிகாமணியாய் விளங்கும் குசேலரிடம் எதிர் சென்று, 'வருக வருக' என்று முகமன் கூறி, அவரது பாதங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். பின்பு குசேலரைத் தமது இருகரங்களாலும் தழுவிக்கொண்டு உவகை பூத்தார். இவ் வாறு கண்ணபிரான் குசேலரை வரவேற்றது, வேதங்களுக் குத் தலைவனென்றும், மெய்ந்நட்பனென்றும் கண்ணனைப் பற்றி உலகம் கூறும் உத்தம வாக்கை நிலைநாட்டியதுபோ லிருந்தது. கண்ணன் குசேலரைப் பார்த்து, 'உங்களுடைய நல்வருகையால் இந்த நாள் புனிதமடைந்தது; நான் இயற் றிய நல்லறமும் பயனடைந்தது; என்னுடைய இல்லமும் சிறப்படைந்தது' என்று இவ்வாறு பல உபசாரமொழிகளால் அவர் வரவைப் பாராட்டிக் களித்தார்.

பிறகு குசேலரை அந்தப்புரத்திலுள்ள ஒரு மாளிகைக் குள் எழுந்தருளச்செய்து, அங்கு ரத்ன பீடமொன்றில் அவ ரை உட்காருவித்து, பொற்குடத்திலிருந்த புண்ணிய தீர்த் தத்தால் அவருக்கு நீராட்டி, தேகத்தைத் துடைத்துக் கொள்ள ஒரு சிறந்த வஸ்திரத்தையும் கண்ணன் கொடுத்தார்.

நீராடியதும், செவப்புப் பட்டாடையைத் தரித்துக்கொள்ளக் கொடுத்தார். பச்சைக் கற்பூரம் கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்கள் சேர்ந்த மணமுள்ள சந்தனத்தைப் பூசி, நறுமண முள்ள பூமாலையையும் சாற்றினர். இவ்வாறு உபசரணை செய்தபின்னர், தேவாமிருதத்தையொத்த உருசியுள்ள அறு சுவையுண்டிகளோடு விருந்து செய்தார். போஜனமானபிறகு அவருக்கு இனிய தாம்பூலத்தைக் கொடுத்து, தேனினு மினிய உபசார மொழிகள் பல பேசி, அந்தப்புரத்தின் மாடியில் உள்ளதோர் சயனக்கிருகத்துக்கு அழைத்துச் சென்று, அங்கே தான் துயிலும் மஞ்சத்தில் இருக்கச்செய் தார். பிறகு அவருடைய முதுகைத் தமது கைகளால் தட விக்கொடுத்து, சாமரை வீசினர். குசேலர் சரீரத்தைத் தடவிக்கொடுத்துக்கொண்டே, 'மென்மையான இந்தப் பா தங்கள் நெடுநாட் பிரயாணத்தால் வாடினவோ' வென்று அவருடைய பாதங்களை மென்மையாக வருடி உபசரித்தார்.

இப்படி மற்ற எவராலும் பெறுதற்கரிய ராஜ போகங்களை யும் மரியாதைகளையும் பெற்ற காரணத்தாலும், நெடுநாள் வழி நடந்த களைப்பினுலும், கண்ணனைத் தரிசித்ததாலுண்டான மனப்பூரிப்பினுலும் வாய் திறந்து ஒன்றும் பேசாது, தன் னையும் மறந்து, ருக்மிணி நாதனைப் பார்த்தவண்ணம் அவரு டைய தரிசன ஸாம்பிராஜ்ஜியமாகிய ஆனந்தக் கடலில் ஆழ்ந்து பரமயோகியாக விளங்கினர். இவரோ, தனது மனைவி கொண்டுவரும்படி கூறிய அழியுந்தன்மையுள்ள பொருளையா பெற விரும்புவார்? ஆகையால் அதைப்பற்றிய ஞாபகமே அவருக்கில்லை. கண்களால் கண்ணனைக் கண்டு கண்கள் படைத் ததன் பயனைப் பெற்றார். அவர் அணிந்துள்ள துளசிமாலை யின் மணத்தை நாசி படைத்ததன் பயனாக அனுபவித்தார். அவர் கூறிய இனிய வந்தனோபசார வசனமிருதத்தைக்

காதுகுளிரக்கேட்டு சந்தோஷித்தார். மேலும் அவருடைய செந்தாமரைக் கைகளின் பரிச பாக்கியத்தாலும், அவருடைய திருநாமங்களை மனத்தில் உச்சரித்துக்கொண்டிருந்ததாலும், குசேலர் பஞ்சேந்திரியங்களின் ஒவ்வொன்றன் மூலமாகவும் பகவானை உள்ளபடி யறிந்து மனமுவந்தார். இப்படிப்பட்ட பேரானந்தத்தைப் பெறும்படி குசேலர் செய்த தவத்தின் பெருமையை எடுத்துச் சொல்லவும் முடியுமோ? தண்ணீரிலிட்ட உப்பைப் போலவும், நெருப்பிலிட்ட கற்பூரத்தைப் போலவும் குசேலர் மனம் கண்ணனிடம் ஒன்றுபட்டு லயித்திருந்தது. அதனால், இவ்வுலக வாழ்க்கையை முன்னிலும் மிக வெறுத்து, அதன் பந்தத்தை யொழித்து, மெய்ம்மறந்து ஒன்றும் பேசாமலிருந்து விட்டார்.

அந்தணருடைய மனோநிலை இவ்வாறிருக்க, அவரது வரலாறு முழுவதும் அவர் சொல்லாமலே முற்றுமுணர்ந்த முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீகண்ணன், அந்த பக்த சிகாமணியைப் பார்த்ததால் நிரம்ப ஆனந்தத்தை யடைந்து, குசேலரோடு இனிமையாக அளவளாவ ஆரம்பித்தார். "என்றும் அழிவில்லாத வேதங்களெல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்தவரே! உம்முடைய வரவால் என்னுடல் பூரித்தது. நான் இன்றடைந்த பாக்கியத்தை அரசர்களுள்ளேனும் தேவர்களுள்ளேனும் இதுவரையில் யார் பெற்றிருக்கிறார்கள்? அன்றேல், இனியாகிலும் எவர்தான் பெறக்கூடும்? நீர் இதுகாறும் என் மனத்தைவிட்டு அகன்றதில்லை. இனி எப்போதும் நான் உம்மை மறக்கவும் மாட்டேன். ஒருவனுக்குக் கிடைக்கும் அநேக பொருள்களுள்ளும் பாக்கியங்களுள்ளும் நெடுநாட் கேண்மையே மிகவும் சிறந்ததாகும். நன்காராயுங்கால், வேதங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் நன்குணர்ந்து, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் தன்மையுடையவர்களு

டைய நட்பையே மேலோர் கோருவார்கள். நல்லோரு டைய சொல்லை விரும்புவதும், அவர்களைக் காண்பதும், அவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதும், அவர்கள் நற் குணங்களைப் புகழ்வதும், அவரோடு இணங்கி யிருப்ப தும் ஆகிய நற்செய்கைகளுக் கெல்லாம் ஆதாரமாகிய நல்லோர் சிநேகிதத்தினும் சிறந்தது வேறொன்று மில்லை. ஒருவன் பொன், பூமி, அறிவு முதலிய யாவும் நிரம்பப் பெற் றிருப்பினும், தவச் சிரேஷ்டர்களுடைய நட்பு ஒன்றுமட்டும் அவனுக்கில்லை யாயின், அவனுக்கு அப்பொருள் பொருளா காது. ஆனால் மேற்கூறிய பொன், பூமி, அறிவு முதலியவற் றைப் பெறாதவனும் கூட தபோதனருடைய நட்பை மாத் திரம் அடைந்திருப்பானாயின், அவன் பொருள் முதலியவற் றைப் படைத்தவனுக்குச் சமானமாகவே கருதப்படுவான். கொடிய பேயுடன் பழகினாலும் அதனுடைய சிநேகத்தை விட்டுவிடுவது அரிதென்று பெரியோர் கூறுவர். சிநேகத் தின் தன்மை அவ்வாறிருக்கிறது. தூய்மையும் புகழும் பெற்ற பெரியோர்களுடைய சிநேகத்தைப் பெறுவதோ மிக வும் கடினம். முன்செய்த நற்றவப்பயனாகவே நற்குணம் நிரம்பியவர்களுடைய சிநேகத்தைப் பெறமுடியும். ஆத லின், அத்தகைய அருமையான நட்பினை ஒருவன் சுலபத்தில் அடைவானாயின், அவன் அந்நட்பை எப்போதேனும் மறப் பனோ? அன்றியும், பெரியோரது சிநேகம் ஒருவனுக்கு மிக்க பயனைத் தரவல்லது. நன்னெறியினின்று தவறியவனை உடனே திருத்தி நன்மார்க்கத்திற் சேர்ப்பிப்பது நல்லவர் சிநேகமேயாம். அவர் கேண்மையே அரிய பெரிய நூல்களைக் கற்பதற்கு ஊக்கத்தை உண்டுபண்ணும். நாடோறும் நன்மை யையே யுண்டாக்கும் நல்லோர் நட்பு. அது தேவர்கள் பெறு தற்கரிய செல்வத்தையும் தரும். பெரியோரது சிநேகம்

நாளுக்கு நாள் அதிக உருசியைத் தரவல்லதன்றோ? கரும்பை நுனியிலிருந்து அடி வரையில் தின்பானொருவன் எவ்வாறு வரவர சாற்றின் மிக்க இன்சுவையை அநுபவிப்பானோ, அதுபோல, நாளடைவில் பெரியோர் கேண்மையும் செல்லச் செல்ல மிக்க இனிமையைப் பயக்கும். ஆகவே அதனினுஞ் சிறந்ததொரு பொருள் வேறொன்று மில்லை.

"நிற்க, நாம் ஒருவரை யொருவர் பார்த்து வெகு காலமாயிற்றே. எனது ஆருயிர் நண்ப! நீ மணம் புரிந்தனையோ? உன் மனையாள் கற்புக்கரசியாய் உன்புகழோங்கி நிற்கும்படியான நற்குண நற்செய்கைகளிற் சோர்வின்றி நடந்தொழுகும் குணவதிதானா? உன்னுயிரைத் தன்னுயிராக நினைத்து இல்லறத்தை நடத்துகின்றனளா? உன்னுடைய வருவாய்க் கேற்றவாறு செலவு செய்பவளா? நீ சொல்வதை யெல்லாம் சொல்லியவாறே செய்பவளா? தனக்கு எவ்வளவுதான் வறுமை வரினும் அதனைப் பிறருக்குக் கூறுமலிருக்கும் நற்குண பூஷணிதானா? உன்னை ஒருபோதும் நிந்திக்காமல் உனக்கடங்கி நடப்பவளா? காதுக்கினிய மழலைச் சொற்களைக் கூறும் பிள்ளைகள் பிறந்தனவோ? எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள்? அவர்கள் கற்றவர் சபையில் சிறந்து விளங்குமாறு அவர்களுக்குக் கல்வி கற்பித்து, அவர்களுக்குச் செய்யவேண்டுவனவற்றை யெல்லாம் ஒழுங்காகச் செய்தனையோ? அவர்களுக்கு உபநயனம் செய்தனையோ? இம்மக்களை ஈன்ற தந்தை இவர்களைப் பெறுதற்கு என்ன தவமியற்றினரோ என்று அறிவுடையோர் சொல்லும்படி பிறக்கும் உன் பிள்ளைகள் கலைகளிற் பயின்றுள்ளார்களா? உலகோர் புகழும்படி விளங்கும் நற்குணம் நிரம்பி யுள்ளார்களா? குழந்தைகள் விரும்பிக் கேட்பவற்றை யெல்லாம் இல்லை யென்னாது கொடுத்து வருகின்றனையா? நடுப்பகலில் பசி

வருத்தத்தால் உன்னை வந்து இரப்பவர்களுக்கு அன்னம் கொடுத்து உபசரிக்கின்றாயோ?

"ஸ்நானம், சந்தி, ஜெபமாகிய நியதிகளையும், வேத மோதுதல் முதலிய காரியங்களையும் சரிவரச் செய்தற்கு உன் சரீரம் திடமுள்ளதாயிருக்கிறதா? வேதாத்தியானம் சிறிதுங் குன்றாது நடைபெறுகின்றதா?

"உன் ஊரிலிருந்து இங்கு வருவோரிடமிருந்து உன் யோக க்ஷேமங்களை யெல்லாம் இதுவரையில் அறிந்து கொண்டேயிருந்தேன். நாம் சந்தித்துப் பல நாட்கள் ஆயின வன்றோ? நாம் இருவரும் பிரிந்து இப்போதுதான் அன்பின் மிகுதியால் ஒருவரையொருவர் நேரில் பார்க்கலாயிற்று. எப்படி தாமரைப் புஷ்பம் சூரியன் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருக்குமோ, அதுபோலவே, உண்மையான சிநேகிதனாகிய உன்னைப் பார்க்கவேண்டும் என்ற அவா என் மனத்தில் வெகுகாலமாக இருந்தது.

"நிற்க, உன் ஊரிலே அதிக மழையாவது மழையின்மையாவது உண்டா? தினை முதலிய தானியங்களை அழிக்கும் கிளியாலும் பயிர்களுக்குத் தீங்கு புரியும் வெட்டுக்கிளிகளாலும் உபத்திரவ மில்லாமல் இருக்கிறதா? தவிர, கள்வர்களாலும் காட்டிலுள்ள கொடிய மிருகங்களாகிய புலி, கரடி முதலியவற்றாலும் உண்டாகும் துன்பங்கள் ஒன்றும் நேராது எல்லோரும் இன்புற்று ஜீவித்து வருகின்றனரா?

"நமது சிறு பிராயத்தில், புகழ்பெற்ற சாந்தீப முனிவரிடம் வேதங்களைக் கற்றகாலத்தில், நாமிருவரும் இன்பமாகப் பேசிவந்தவற்றை யெல்லாம் மறவாமலிருக்கிறாயா? நாம் குருவிடம் கல்வி கற்ற நாட்களில் ஓர் நாள், நம்மாசிரியர் மனைவி நம்மைப் பார்த்து, 'இன்று சமையல் செய்வ

தற்கு விறகில்லாததால், நீங்கள் போய் விறகு கொணர்மின்' என்றுரைக்க, நாம் ஒரு பெரிய காட்டுக்குள் சென்றோமே; அது ஞாபகத்தில் உள்ளதா? அப்போது ஆகாயத்திலுள்ள வெண்மேகங்கள் அன்னப்பக்ஷிகளைப்போலத் திரண்டு கடலின்மேல் போயிற்றே. கடல்நீரை முகந்து மேலே கிளம்பிய கருமேகங்கள் ஆகாயத்தில் திரண்டுதிரண்டு வந்தனவே. அவற்றின் இடையே, கோடைவெயிலின் கொடுமையைப் பளிச்சென்று வெட்டும் வாள்களைப்போல மின்னல்கள் தோன்றியனவே. கடல் நீரையும் வடியும்படி செய்யவல்ல கொடிய வெப்பத்தை இப்போதே தணித்துவிடுவோம் என்று உறுதியாகக் கூறுவது போல, பயங்கரமான இடிமுழக்கங்களும் உண்டாயினவே. ஊதா, அவுரி, கருநீலம், பச்சை, மஞ்சள், தங்கம், செவப்பு முதலிய ரமணீயமான வர்ணங்களோடு கூடியதாய், உலகமுழுவதையும் வளைப்பது போலத் தோற்றிய அழகிய வானவில்லும் உண்டானதைக் கண்டோமே; அது ஞாபகத்தில் இருக்கிறதா? திடீரென்று ஆகாயமெங்கும் கருமேகக்கூட்டங்கள் திரண்டு, மின்னலும், இடியும், பெருங்காற்றும் கூடி, மழை பொழிய ஆரம்பிக்கும் காலத்தில், காட்டு மிருகங்கள் மறைவிடம் தேடியவே. இடியின் பேரொலியைக் கேட்டு நடுங்கிய ஸர்ப்பங்கள் வெகு வேகமாக ஊர்ந்து சென்று புற்றுக்களுக்குள் ஓடியதைக் கண்டு நாம் சற்று நின்றோமே; அது ஞாபகத்தில் இருக்கிறதா? முதலில் மேகங்களினின்று மழை சிறு துளிகளாகக் கொஞ்சங் கொஞ்சநேரம் இடைவிட்டுவிட்டுப் பெய்துகொண்டிருந்தபோது நாம் வழிநடந்துகொண்டே வருகையில், கனத்த மழை சற்று நேரத்துக்கெல்லாம் பொழியவாரம்பித்தவுடனே சிறுகலியாணப் பூஷணிக்காயின் பரிமாணமுள்ள மழைக்கட்டிகளும் விழ ஆரம்பித்தனவே; அது

ஞாபகத்திலிருக்கிறதா? அப்போது நாமிருவரும் அங்கிருந்த மணமுள்ள குருந்தமரத்தினடியில் போய்த்தங்கி, சிறிய இலைகளுள்ள மரங்களினடியிலும் புஷ்பமரங்களினடியிலும் சென்று, வழி தெரியாமல் பிரமித்துப் போனேமே. நமதுடம்பு முழுவதும் மழையில் நனைந்து, நாம் கொண்டு வந்த விறகும் நனைந்ததே. அப்படியிருக்கையில் மழை பின்னும் பலமாகப் பெய்தபோது, தண்ணீர் நமது இடுப்புவரையில் வெள்ளமாக ஓடிற்றே. சிவபெருமான் கொன்றைமலர் மாலையை யணிந்துகொண்டு, தமது இடக்கரத்தில் மானையும் திருச்சடையில் கங்கையையும் வைத்துக்கொண்டிருப்பதுபோல, அக்காட்டில் பெருகியோடிவந்த ஆறுனது கொன்றைப் புஷ்பங்களையும் மானையும் நீரில் அடித்துக்கொண்டு வெகு ஓசையுடன் ஓடிக்கொண்டிருந்ததை நாம் கவனித்தோமே. மழையானது இன்னும் ஓயாதது கண்டு, இனி நாம் என் செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்குங்கால், பெரியதோர் குளிர்காற்றும் கிளம்பி அதிகப் பலமாக அடிக்க ஆரம்பித்ததே. அதனுல் மரக்கிளைகள் வேகமாக அசைந்து ஒன்றேடொன்று தாக்கி, மேகங்களை நோக்கி, இனி மழை வேண்டாமென்று சொல்வதுபோல ஓசையையும் உண்டாக்கியனவே. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வழி தெரியாமல் திகைத்து, நாம் நின்றவிடத்திலேயே ஒருவரோடொருவர் பிரியாமல் இருந்தபோது, மழையும் சற்று ஓய்ந்தது. ஒருவன் தன் பொருளைத் தருமத்தில் செலவிட்டு, அதனுலுண்டான கீர்த்தியாகிய வெண்மையான ஆடையைத் தரித்துக் கொண்டிருப்பதையொப்ப, கருமேகங்களெல்லாம் ஜீவகோடிகளுக்கு மழையைப் பொழிந்து வெளுத்தனவே. இனி மழை விட்டுவிட்டது. நாம் வீட்டுக்குப் போகலாம் என்று புறப்படுகையில், பகலவன் மேற்குத் திக்கில் மறைய, செவ்வானம்

எங்கும் தோன்றியதே. அதன்பிறகு சற்றுநேரத்துக்கெல்லாம் இருள் ஆகாயத்தை மூடிக்கொள்ளவே, வெளிச்ச மில்லாமையால் நாம் ஒருவரையொருவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருட்டில் மேடு பள்ளம் தெரியாமல், குளிர்ந்த காற்றால் தேகம் ஒடுங்கி, வழி தெரியாமல் மயங்கி, நமது கால்களாலேயே வழியைச் சிறிதுசிறிதாகத் தெரிந்து கொண்டு மெல்லமெல்லக் கொஞ்ச தூரம் சென்றும், மேற் கொண்டு போகமுடியாமல் இருள் நீங்கும்வரையில் அங்கேயே ஓரிடத்தில் இருந்துவிட்டுப் பிறகு செல்வோம் என்று தீர்மானித்து, ஓரிடத்தில் தங்கி யிருந்தோமே; அது ஞாபகத்தில் இருக்கிறதா? வைகறையில், முல்லைப்புஷ்பங்களும் நம்மைக் கண்டு நகைத்தனபோல வெண்மையாகப் புஷ்பித்தனவே. நம் நிலைமையைக் கண்டு பரிதாபப்படக்கூடியவர் அங்கொருவருமில்லை. நமக்கு ஆகாரமுமில்லை. ஆனதால் இச்சிறுவர்களிருவரும் இருளில் வருந்தாவண்ணம் வெளிச்சத்தைக் காட்டவேண்டும் என்று நினைத்தவன் போல, சந்திரனும் குளிர்ச்சி பொருந்திய பல கிரணங்களோடு தோன்றினனே. வெளிச்சம் தோன்றிய வுடனே நமக்கு எவ்வளவு தைரியம் பிறந்தது? இவ்வாறாக நாம் எவ்வளவு நேரம் இருந்தோம் என்பதே நமக்குத் தெரியாமல் இருந்தபோது, விடியற் காலம் வருவதற்கு முன்னுள்ள சின்னங்கள் தோன்றினவே. ஆகாயத்தில் கீழ்ப்பாகம் சிறிது சிறிதாக வெளுத்துக் கொண்டுவந்து நக்ஷத்திரங்களும் ஒளி குறைந்தன. இரவெல்லாம் குளிரால் வருந்திய சிறுவர்கள் இருக்கும் இடத்தைப் பார்க்கத் தோன்றினன் போலச் சூரியனும் உதித்தனனே. கல்வியறிவால் அரிய நூல்களின் நுணுக்கங்கள் யாவும் எவ்வாறு ஒருவனுக்குப் புலப்படுமோ, அவ்வாறு, சூரிய வெளிச்சத்தால், இருட்டில் காணமுடியாத அநேகம்

வஸ்துக்கள் நமது கண்ணுக்குப் புலப்பட்டனவே. இரவு முழுமையும் நாம் வரவில்லையே என்று வழிபார்த்துக் கொண்டிருந்த நமது ஆசிரியர், பொழுது புலர்ந்ததும், சிஷ்யர்கள் இன்னும் வந்திலரே, அவர்களுக்கு என்ன துன்பம் நேர்ந்ததோ, அவர்கள் எங்குற்றனரோ, எங்கு இரவில் தங்கியிருந்தார்களோவென்று பலவாறு மனம் வருந்தியவராய், தாமே நம்மைத் தேடிக்கொண்டு காட்டில் வந்தனரே. அப்பொழுது நாம் அவரை நமஸ்கரித்து எழுந்துநின்றபோது நம்மை, 'சிஷ்யர்களுட் சிறந்தவர்களே!' என்று விளித்து, 'நான் உங்களுக்கு வித்தை கற்பித்ததற்குப் பிரதியாக நீங்கள் எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டதே போதுமானது. உங்களுக்குச் சமானமானவர் ஒருவருமிலர். உங்களுக்கு நிறைந்த கல்வியும், குறையாத பொருளும், மனைவி மக்களும், நல்லுறவினரும், நீண்ட வாழ்நாளும் உண்டாகுக' என்று ஆசீர்வதித்து, அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றனரே. இவ்விஷயங்களை யெல்லாம் நீ மறவாமலிருக்கிறுயா?" என்று, ஒருவன் தன் சிநேகிதனைக் கேட்பது போலவே குசேலரை விசாரித்து, மாயனுகிய கண்ணன் மீண்டும் கூறுவாராயினர்.

அத்தியாயம்—10

கண்ணன் கடாக்ஷித்தல்

“ அநேகம் நாட்கள் கழிந்தபிறகு என்னைப் பார்க்க வந்தனையே. நீ எனக்குக் கொடுக்க என்ன பொருளைக் கொண்டு வந்தனை? அதனை இப்போதே கொடுப்பின் நல்லது. நீ கொணர்ந்துவந்திருக்கும் உருசியான தின்பண்டத்தில் எனது மனம் நாடியிருக்கின்றது. ஒன்றுமில்லாமல் நீ வந்திருக்க மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம். உன் மனத்தை இப்போதுதான் நான் அறியவேண்டும். உன் மனைவி உன்னை வெறுங்கையுடனே அனுப்பி யிருப்பாள்? ஏதாவதொன்றை எடுத்துப்போம்படிக் கொடுத்திருப்பாளே. அதனை உன் நண்பனாகிய எனக்கின்றி வேறு யாருக்குக் கொடுக்கப்போகிறாய்? நீ கொண்டுவந்திருப்பதை இப்போதே ஒளிக்காமல் தந்திடுதி ” என்று சொல்லிக் கண்ணன் தன் செங்கரத்தை நீட்ட, குசேலர் தான் கொண்டுவந்த தின்பண்டமானது மதுரமான பாலை யருந்துவோனுக்குக் கொடுத்த புளித்த காடிநீரை யொக்குமென்று நினைத்துச் சும்மாவிருந்துவிட்டார். அவர் எண்ணத்தை அறிந்த கண்ணன் குசேலர் உடுத்திருந்த ஆடையைப் பற்றி, அதனில் கற்பிற் சிறந்தாளாகிய சுசீலை கெட்டியாக முடித்து வைத்திருந்த அவல் முடிப்பைக் கண்டார். கண்டவுடனே அதனை அவிழ்த்துப் பார்க்க, அதில் பச்சை அவல் இருந்தது. வெகு அன்புடன் கொண்டுவந்த அந்த அவலில் ஒரு பிடி யெடுத்து கண்ணன் வாயிற் போட்டுக்கொண்டு, சுதாமருக்குச் சகலவித போகங்களும் உண்டாகுகவென்று மனத்தில் நினைத்தார். அந்த

அவல் மிக்க பக்குவமடைந்து உருசிகரமாயிருந்ததென்றும், தேவர்களுக்கும் கிடைக்காததென்றும், அவலிலுள்ள தானியங்களெல்லாம் முனைகூட ஒடியவில்லையென்றும், வீட்டில் புதியதாகச் செய்யப்பட்டதென்றும், என்ன விலை கொடுப்பினும் அதைப்போன்றது அகப்படாதென்றும், அது இயற்கையான மதுரமுள்ளதால் அதற்கு வெல்லமும் வேண்டாமென்றும், அதனைத் தொட்ட கையும் மணக்கும் என்றும், தின்றால் வாய் மணக்கும் என்றும் பலபடியாக அதனை மிகச் சிரேஷ்டமாகப் பாராட்டி, அவலின் உருசியை அநுபவித்துச் சந்தோஷத்தைத் தெரிவிக்க தலையைப் பன்முறை அசைத்தார். அவலில் தனக்கு விசேஷ பிரியம் உண்டென்று கண்ணன் இதற்குமுன் ஒருவரிடமும் தெரிவிக்காமலிருக்கவும், சுதாமர் மாத்திரம் அதனை எவ்வாறு அறிந்திருப்பாரென யோசித்தார். அன்பின் மிகுதியால் கொடுக்கப்படும் வஸ்து அற்பமேயாயினும், அதுவே சிறந்ததாகக் கொள்ளப்படுமன்றோ? அவ்வாறின்றி, அன்பின்றிக் கொடுக்கப்படும் வஸ்து மிக அரிதேயாயினும், அது இழிந்ததென்றே கருதப்படும். அதுபோல மிக்க புகழுள்ள குசேலர்பெருமான் மனமார்ந்த அன்புடன் கொணர்ந்த அவலைச் சிறுபொருளாக மதியாது அதனையே மேலானதாகக் கண்ணன் ஏற்றுக்கொண்டார்.

கண்ணனுக்கு அவலில் உருசி அதிகரித்து மீண்டும் ஒருமுறை அதனை உட்கொள்ள எடுத்தபோது, அயலிலிருந்த ருக்மிணி தேவி, காற்சிலம்பொலிக்க, பெண்யானையைப்போல ஓடிவந்து கண்ணனுடைய கரத்தினைப் பிடித்துக்கொண்டாள். அதனால் அவர் மேலும் அவல் எடுத்துக்கொள்ள முடியாமற் போயிற்று. ஆனால், கணவனுக்கு விருப்பமாகவுள்ள உண்டிகளைப் பக்குவமாகச் செய்து அளிக்கவேண்டியது நன்மனைவி

யர் குணமாயிருக்க, உலகமாதாவாகிய பிராட்டியார் இவ்வாறு ஸ்ரீகண்ணபிரானுக்கு அத்யந்தம் பிரியமாகவுள்ள தின்பண்டத்தை எடுத்துக்கொள்ளாதபடி தடை செய்ததற்கு நியாயம் உண்டு. உயர்ந்த குலத்தில் உதித்தவளும், கற்புக்கரசியும், நற்குணவதியும், திருமகள் அம்சமாகத் தோன்றியவளுமாகிய ருக்மிணிதேவி தன் கணவனுக்கு நன்மையல்லாத வேறொன்றைச் செய்வளோ? தான் நேசித்துவரும் நாயகனுக்கு விரோதமாக ஒன்றையும் மறந்தாயினும் செய்யாள்; வாயினும் சொல்லாள்; மனத்திலும் நினைக்கவுமாட்டாள். அப்படியிருக்க, இவ்விஷயத்தில், அநேகம் சாஸ்திரங்களையும் முற்றுமறிந்த தவச்சிரேஷ்டராகிய குசேலருக்கு, உலகோர் யாவரும் கண்டு பிரமிக்கும்படியாக இவ்வுலகில் இந்திரபோகங்களையும் குறைவற்ற செல்வத்தையும் தரவேண்டுமென்று மனத்தில் நினைத்துக்கொண்டு, கண்ணன் ஒரு பிடி யவலை உட்கொண்டதை ருக்மிணிதேவி நன்கு தெரிந்துகொண்டனள். ஒரு பிடி அவனுக்கே உலகம் அடங்காச் செல்வம் வரின் இன்னும் ஒரு பிடி அவலையும் உட்கொண்டாரானால், கண்ணனும் குசேலருக்கு உட்பட்டிருக்கும்படியாகிவிடுமென்று நினைத்தே ருக்மிணிதேவி கண்ணன் கரத்தை அந்தச் சமயத்தில் பிடித்துக்கொண்டாள். குசேலருக்கு வேண்டியதெல்லாம் தமதில்லறம் செவ்வனே நடத்துதற்கு வேண்டிய பொருளே தவிர, காக்குங் கடவுளாகிய கண்ணன் அவருக்குட்பட்டு நடக்கவேண்டுமென்பதில்லையே. ஆதலால்தான் ருக்மிணி அவ்வாறு கண்ணன் மீண்டும் அவல் எடுத்துக்கொள்ளாதபடி செய்தாள் என்று அறியவேண்டும். ஆயினும், ருக்மிணி அவ்வாறு கண்ணனைத் தடுத்திராவிடில், தேவி எண்ணியபடியே உலகத்திலுள்ள எல்லாவிதச் செல்வங்களையும் சம்பத்துக்களையும் கண்ணன் குசேலருக்குக்

கொடுத்துவிடுவாரோ வென்றால், கொடுத்து மிருப்பார். ஏனெனின், ஸ்ரீகண்ணபிரான் தன்னிடம் ஈடுபடுவோர்க்கு இதைக் கொடுக்கலாம், இதைக் கொடுக்கக்கூடாது என்று தனது கொடையில் ஒருவித வித்தியாசத்தை மனத்தினாலும் நினைக்குங் குணமில்லாதவர். இவ்வுலகில் ஒருவன் தான் செய்யும் அறம் சிறிதளவேயாயினும், அதனைத் தான் செய்வதாக நினைக்காமல் மனப்பூர்வமாக இயற்றுவானாயின், அவன் தேவலோகத்தில் பெரும்பேற்றை யடைவான். இதுவே செய்யாமற் செய்த அறமெனப்படும். இத்தகைய அறத்தைக் குசேலர் தன்னாலியன்றவளவு அநேகம் காலம் இயற்றியிருந்ததால், அவர் பொருளைப் பெற்றது கஷ்ட சாத்தியமன்று. மனைவி கூறியதற் கிணங்கியே அவர் கண்ணனைத் தரிசிக்கப் புறப்பட்டாரேயொழிய, பொருள் பெற வேண்டும் என்றெண்ணி அவரைப் பார்க்க வந்தவரல்லர் என்பதைக் கண்ணனே அறிந்துள்ளார்.

ருக்மிணி பற்றிய தன் கையிலுள்ள அவலைக் கண்ணபிரான் குசேலருடைய வஸ்திரத்திலேயே முடித்து, தானுண்ட அவலில் தனக்கிருந்த ஆனந்தத்தைப் பலவிதமாக வெளியிட்டு, குசேலருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். பிறகு அன்றிரவு குசேலர் தனக்காக நியமிக்கப்பெற்ற மென்மையான படுக்கையில் அன்று தான் கண்ட கண்ணனுடைய திவ்விய சேவையை மனத்தில் நினைத்து நினைத்து சந்தோஷித்துக்கொண்டே நித்திரைசெய்தார்.

அத்தியாயம்—11

குசேலர் தன்னூரை அடைதல்

நிறைந்த ஞானம் பெற்ற குசேல முனிவர் மறுநாள் சூரியோதய மானவுடன் நித்திரைவிட்டெழுந்து, காலைக் கடன்களை முறைப்படி இயற்றியபின்னர், தனக்கிது வேண் டும் என்று தன் வாயைத் திறந்து ஒன்றையும் கண்ணனிடம் கேளாமலே, தான் அவரைத் தரிசிக்கும்படி கிடைத்த பெரும் பாக்கியத்தையே எண்ணிச் சந்தோஷித்தவராய், இனி தன் னூருக்குப் போக ஆயத்தமானார். நிதியை மிகப்பெற்றவர் போலவே தன்னைப் பாவித்து ஊருக்குப் பிரயாணப்பட்ட அவ்வந்தண நண்பரைத் தொடர்ந்து, ஸ்ரீ கண்ணபிரானும் தமதரண்மனை வாயில் வரையும் சென்று அவரை நமஸ்கரிக்க, குசேலர் அவர்க்குத் தொகுதியான ஆசிர்வசனங்கள் பல கூறி, ஆசிர்வதித்து, பிறகு துவாரபாலகர்கள் காக்கும் வாயி லையும் தாண்டிச் சென்றார். கண்ணனும் மனமகிழ்ந்து தமது அரண்மனைக்குட் சென்றார்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரண் மனைப் பணிப்பெண்களுள் சிலர், உண்மையை அறியாமல், குசேலருக்குக் கண்ணன் ஒன்றுங் கொடுக்கவில்லையென்று கூறி, தம் முகத்தைச் சுளுக்கினர். சிலர் உதடுகளைப் பிதுக் கினர். 'குசேலரைக் கண்டமாத்திரத்தில் தாயை எதிர்ப் பட்ட குழந்தையைப்போல உள்ளங்களித்தார். பிறகு அவ ரை எதிர்கொண்டழைத்து, அவர் காலில் விழுந்து வணங் கினார். அவருக்கு நல்ல ஆடைகளைக் கொடுத்து அவரை அலங்கரித்தார். உபசாரங்களைப் பெரிதும் செய்து, அவர்

தம்முடைய பழைய நண்பரென்றும் தம்முடைய அன்புக்குப் பாத்திரரென்றும் உலகுக்குத் தெரிவித்தாரே யொழிய, அவர் ஊருக்குப் போகும்போது ஒன்றுங்கொடாமல் போய்வரும்படி சொன்னாரே. ஏதோ வேற்று மனிதரோடு பழகுவது போலவன்றோ பழகினார். இது நன்றாயிருக்கிறது!' என்று சிலர் ஆச்சரியப்பட்டார்கள். 'இவ்வேழை, இவ்வளவு தூரம் வழி நடந்து கண்ணனைப் பார்க்க ஏன் இங்கு வந்தனனோ? இவன் ஊழ்வினையே இவனை இங்கு வரும்படி செய்வித்தது. தேனும் பாலும் கலந்தாற் போல இனிய மொழிகளை இன்புறப் பேசினாரே யொழிய, ஒரு காசு கூடத் தராமல் போய் வாருங்கள் என்று கூறினார். பெரியோர்கள் இனி கண்ணன் பேச்சுக்கு என்ன மதிப்பு வைப்பார்கள்' என்றும் சிலர் பிதற்றினார். 'கோவர்த்தனமலையைக் குடையாகப்பிடித்து, பசுக்கூட்டங்கள் துன்புறுவண்ணம் மழையைத் தடுத்தருளிய கண்ணன், தனக்கு ஒப்பற்ற நண்பனாயிற்றே என்று நினைத்துக் குசேலர் இங்கே வந்தார். ஆனால் கண்ணனோ, குசேலரைத் தமது நண்பராகக் கருதாமல், அவர் கொண்டுவந்த அவலையும் அள்ளித்தின்றுவிட்டு, அவர்க்கு ஒன்றுங்கொடாமலிருந்தாரே' என்று வேறு சிலர் ஆராயாமற் பேசலானார். 'முன்செய்த தவப்பயனில்லையாயின் ஒருவனுக்கு எப்படிப்பட்டவருடைய சிநேகத்தாலும் ஒருவித பலனும் வராது. தமக்கு நேர்ந்த வறுமையையே தீர்த்துக்கொள்ள முடியாத நிலையிலிருப்பினும் இருப்பர். கணவன் என்ன சம்பத்துள்ளவனாயினும், மனைவி பாவம் செய்திருப்பளேல், அவள் ஏழையைப்போலவே துன்புறுவள். இது உண்மையே' என்றார் வேறு சில மாதர்கள். 'கண்ணன் தன் சிநேகிதன்பால் வைத்திருந்த அன்பு வெகு

அழகாயிருக்கிறது! ஒரு வேளை உணவு அளித்தலையே பெரியதோர் விஷயமாக வைத்துக்கொண்டாரே. இது ஒரு பெரிய மலையைப் பிளந்து சிறு எலி யொன்றைப் பிடித்ததை யொக்கும்' என்றார் மற்றுஞ்சில மாதர்கள். 'சுசீலை வெகு நாளைக்குமுன் சென்ற தன் கணவன் வேண்டிய பொருளைக் கண்ணன் அருளால் பெற்று வருவார் என்றெண்ணி, அவர் வருகையை ஆவலுடன் எதிர்பார்ப்பளே! பாவம்! குழந்தைகளும் அவ்வாறே தந்தையைக் காண விரும்புமே! இவர்கள் முன்னமிருந்த நிலையில் இன்னுமிருந்தால், குசேலர் அவர்களை எப்படி மனமாறக் காணுவார்? கண்ணன் குசேலரது ஆடையைக்கூட புதிப்பிக்கவில்லையே' என்றார் இன்னுஞ்சில மாதர்கள். 'செல்வம் மிகப்பெற்றிருப்பினும், அதனை இரப்போர்க்குக் கொடுத்து அதனால் இன்பம் அடையும் சிறந்த குணம் இக் கண்ணனிடம் காணப்பட வில்லையே. அவர் கூறிய நயமொழிகளால் உள்ளங் கவர்ந்த குசேலரும் அவற்றில் திகைத்துப் பித்தம் பிடித்தவர்போல, ஒன்றுங் கேளாது ஊர் சென்றனரே. கண்ணனும் அவருக்கு வழி விடுத்து வந்தனரே. இத்தகைய நட்பின் பயனென்ன? இந் நட்பில்லையாயின், அதனால் என்ன குறைதான் ஏற்படும்?' என்றார் வேறு சில மாதர்கள். 'அம் மகாமுனிவர் ஒன்றையும் விரும்பாது போயினர். கொடையுள்ளவரைத்தான் இரப்போரும் கேட்பர். எப்போது அவரைக் கேட்கவில்லையோ அப்போதே கண்ணனிடம் கொடையில்லை யல்லவா? பொருளைப் பெறவெண்ணுபவரே கண்ணனிடம் யாசிக்காமலிருந்தால், உலகப்பற்றை யொழித்துத் தத்துவ ஞானத்தைப்பெற்ற பெரியோரா இரப்பர்?' என்றார் சில மாதர்கள். 'எதை நினைத்துக்கொண்டு குசேலர் இவ்வளவு தூரம் வந்தனரோ? மாயக்கண்ணன் என்ன செய்வதாக நினைத்துளா

ஞே? விஷயம் ஒன்றும் தெரியாமலிருக்க, வாயில் வந்த வாறு பிதற்றுதல் அறிவீனமாகும்' என்று வேறு சில பெண்கள் கூறினர்.

மாதர்கள் அநேகர் இவ்வாறு பலவாருகப் பேசிக்கொண் டிருக்கும்போது, குசேலர் அந்தத் திவ்விய நகரத்தில் அநேகம் தெருக்களையும் கடந்து, வழியிலுள்ள பெருங்கடலையும் தாண்டி, தாமிருக்கும் ஊருக்குச் செல்லும் பாதையையறிந்து இன்பமாக நடந்து சென்ருர். ஸ்ரீ கண்ணபிரானது அருளாலும் அம்முனிவர் இயற்றிய விரதங்களின் பலன் முதிர்ந்ததாலும் அவ்வேதியருடைய இளைத்த சரீரம் இன்பத்தால் பூரித்தது; அவரணிந்திருந்த கந்தையானது பீதாம்பரமாக மாறியது; அவர் கழுத்திலிருந்த துளசிமணிமாலை முத்துமாலை யாயிற்று; காதில் ரத்ன குண்டலங்கள் தோன்றின; கைவிரலில் அணிந்திருந்த தருப்பைப் பவித்திரம் பொன் மோதிரமாயிற்று; மன்மதனும் விரும்பும் தேக அழகும் உண்டாயிற்று; சரீரத்தில் வன்மையும் வீரியமும் உண்டாயின; அவரது வறுமைப் பிணியும் சூரியன்முன் பனிபோல அவரை விட்டகன்றது; நெடுநாட் பிரயாணம் செய்ததனுலுண்டான தேகச் சோர்வு முதலிய யாவும் நீங்கின; நிரம்பக் கொடுமையாகத் தோன்றிய வெயிலும் குளிர்ச்சி தந்தது; உஷ்ணமான பாலைவனங்களிலும் நீர்நிலைகள் காணப்பட்டன. சரீர சௌக்கியத்துக்கு ஏற்றபடி குளிர்ந்த தென்றற் காற்றும் மெல்ல வீசியது. இவற்றையெல்லாம் அனுபவித்து, இவை யாவும் எம்பெருமான் செயல் என்று குசேலர் நினைந்து களிப்படைந்தார்.

வழியிலுள்ள நாடுகளின் அரசர்கள், ரத கஜ துரக பதாதிகளுடன் குசேலரை எதிர்கொண்டழைத்து, அவரது திரு

வடிகளில் வீழ்ந்து வணங்கித் துதித்தார்கள். சிலர் அவரை ஆடையாபரணங்களால் அலங்கரித்து, ஆரவாரம் செய்து இன்பக்கடலில் மூழ்கினர். பொன்மயமான தேரில் பல மரியாதைகளுடன் அவரை உட்காருவித்து, அரசர்கள் அவரைச் சுற்றி நடந்து சென்றார்கள். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வாத்தியங்கள் மிகுதியாக ஒலித்தன. குசேலர் பெருமானது பெருமையைக் கூறிப் புகழ்ந்து புகழ்ந்து தவத்திற் சிறந்த பெரியோர் எல்லாரும் கொண்டாடினர். இத்தகைய அருமையான நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ட குசேலர், இவையெல்லாம் கருணைக்கடலாகிய ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளே யாகும் என்று எண்ணியவராய், தனது மனத்தை அவ்விறைவனது சீர்ப்பாதகமலங்களிலேயே நிறுத்தி, மீண்டும் தான் செல்லவேண்டிய வழியிற் சென்றார். இவ்வாறு அரசர்களும் அடுத்துத் துதித்துப் பின்தொடர்ந்து குதிரை யானை முதலிய சேனைகளும் உடன் சூழ்ந்து வர, வெகு வைபவத்துடன் குசேலர் தன் ஊரைச் சமீபித்தார்.

முன்னம் சிறிய கிராமமாகவிருந்த அவ்வூரானது இப்பொழுது அநேகவித சௌகரியங்களையும் இன்பங்களையுந் தரவல்லதோர் பெரிய நகரம்போலிருந்தது. காட்டுப் பிரதேசமெல்லாம் ஆகாயத்தை அளாவிநிற்கும் உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்தவிடமாக மாறியிருந்தது. கீர்த்தி வாய்ந்த புலவர்களுக்கு உறைவிடமாயிற்று. அந்நகரம் பூலோக சுவர்க்கம் என்று சொல்லத்தகுந்த பலவகைச் சிறப்புகளால் பொலிவு பெற்று விளங்கியது. அமரர்களும் அந்நகர்ச்சிறப்பினைக் கண்டு ஒருவேளை அது தவபலமுள்ள விசுவாமித்திரமுனிவரால் புதியதாக நிர்மாணிக்கப்பெற்ற பொன்னகரமோவெனப் பிரமித்தனர். ஸ்ரீ கண்ணனுடைய திருவருளால் இங்ஙனம் விசேஷ பொலிவு பெற்ற அவ்வூரா

னது குபேர பட்டணத்தைப்போலச் சிறப்புற்றோங்கி யிருந்தது.

அவ்வூரிலுள்ளோர் ரத்னங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்துகொண்டு, பாற்கடலினடுவேயுள்ள பவளக் கொடிகள்போல வெண்மையான மாளிகைகளில் தரும சிந்தனையோடு கூடி வசித்திருந்தனர்.

யானை, குதிரை தேர் முதலியவற்றாலுண்டான ஓசையும் ஆரவாரமும் கடலோசையைப் போன்றதாக விருந்தது.

வேதங்கள் கற்கும் அந்தணச்சிறுவர்கள் கல்வி பயிலும் வேதபாடசாலைகளும், சாதாரண உலக நூல்களைக் கற்பதற்குரிய பள்ளிக்கூடங்களும், நடனங்கற்பிக்கும் நடன சாலைகளும், தர்மங்கள் நடைபெறும் தர்மசாலைகளும் ஏனைய இவற்றைப் போன்ற பிற நகர ஒழுங்குகளும் அவ்வூரில் சிறப்புறக் காணப்பட்டன.

வீதிகள் அகன்று தேரோடும் வீதி, வணிகர் வீதி முதலியவை வரிசையாகக் காணப்பட்டன. ஊர்ப்புறத்திலேயே இவ்வளங்களைக் கண்ணுற்ற குசேலர் இவ்வளவு வளமையும் ஸ்ரீ கண்ணபிரானுடைய அருட்பிரகாசத்தால் உண்டாயினவென்றெண்ணி, இன்னும் நகருக்குள் எத்தகைய சிறப்புக்களைக் காணுவோமோவென்று நினைத்து வருகையில், கடைசியாக மதிலின் வழியாக நகர்ப்பிரவேசமாக, அவ்வூரிலுள்ளோர் உள்ளம் பூரித்து, ஏற்ற கையுறைகளுடன், வாத்தியங்கள் கோஷிக்க, குசேலரை எதிர்கொண்டழைக்கலானார். அவர்கள், 'இன்று உய்ந்தனம், உய்ந்தனம்' என்று குசேலர் நல்வரவைக் கொண்டாடி அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, பிறகு, அதுகாறும் தேரில் வந்த குசேலரைப் பல்லக்கு மீதேற்றி, பொற்குடை நிழலில் ஊருக்கு

அழைத்துச் சென்றார்கள். அப்போது வாத்தியங்களை வாசித்தனர் சிலர்; சாமரை வீசினர் வேறு சிலர்; சேனையும் பின்தொடர்ந்து வந்தது. வேதியர்கள் ஆசீர்வதித்தனர். இவ்வாறு சிறிது தூரம் சென்று கடைசியில் ஊருக்குள் குசேலர் வந்தார்.

வீதியில் வீடுகள்தோறும் சாளரங்கள் மூலமாக மாதர்கள் குசேலர் வருவதை மனக்கிளர்ச்சியுடன் பார்த்து, எவ்வளவு புண்ணியம் செய்திருந்தால் இவ்வளவு இன்பங்களைக் குசேலர் பெறமுடியும் என்று தமக்குள் பேசிக்கொண்டிருந்தனர். 'தேகத்தில் சிறிதும் தசையில்லாமல் மிகவும் கிழிந்த வஸ்திரத்தை யணிந்திருந்த அந்தக் குசேலர் இப்போது மன்மதனைப்போல மிகுந்த அழகுடனிருக்கிறார்' என்றார் சிலர். 'உலகப்பற்றை நீக்கி, காட்டுக்குச் சென்று, கிழங்கு முதலியவற்றை யுண்டு தவஞ்செய்வதை விட்டுவிட்டுப் பெரிய செல்வத்தை விரும்பிப் பெற்றார்' என்றார் வேறு சிலர். 'தருமம் தலைகாக்கும்' என்ற வாக்கின்படி இவ்வந்தணர் எவ்வளவோ காலம் நல்ல மனமுடன் தருமம் இயற்றினர். அதன் பலனாகவே இப்போது இவ்வளவு செல்வத்தைப் பெற்றுளார். இன்னும் எவ்வளவு செல்வந்தான் பெறுவாரோ' என்றார்கள் மற்றுஞ் சிலர். 'ஜீவகாருண்யம் உள்ளவர்கள் தேவர்களைவிட மேலானவர்கள் என்று வேதங்கள் கூறுவதால், இக்குசேலருடைய அருளின் பயனாகவே இவ்வளவு செல்வத்தை இவர் இவ்வுலகிலே அடைந்தார். இன்னமும் அடையக்கூடிய செல்வம் உளது' என்றார் பின்னுஞ் சிலர். 'திரிகரணங்களாலும் பகவானைப் பணிந்தவர்களுக்கு எதுதான் கிடைக்காது? மனத்தால் அவர் திருவடிகளைத் தியானித்தும், வாக்கால் அவருடைய அருமைக் குணங்களைப் புகழ்ந்து தோத்திரித்தும், கைகளால் மலர்களைக்

கொண்டு அவரைப் பூஜித்தும், அடியார்கள் மீது மிக்க அன்பு பூண்டும், இவ்வாறாக வாழ்நாளைக் கடத்துவோர்களைக் கடவுள் காப்பாற்றுவார்' என்றார் வேறு சிலர். கற்புவாய்ந்த தன் மனைவி பலதரம் வேண்டிக்கொள்ள இக் குசேலர், அவலைக் கையுறையாகக் கொண்டு, ஸ்ரீ கண்ணனிடம் சென்று அவரைக்கண்டு பெருஞ் செல்வம் அடைந்தனர்' என்றார்கள் வேறு சிலர். 'அறிவுடையோர் நிரம்ப செல்வத்தைப் பெறினும், கர்வமடைந்து மயங்கார்: அன்றி வறுமையடையினும், தமது குணம் மாறார்' என்றும், இவ்வாறாகப் பலர் பலவேறு கூறி, குசேலர் பெருமையையும், அறிவையும், தவத்தையும் பாராட்டித் தமக்குள் பேசிக் கொண்டிருந்தனர்.

அத்தியாயம்—12

குசேலருடைய இல்லறமும் கண்ணன் திருவருளும்

அப்படி பேசிக்கொண்டு எல்லோரும் இன்புற்றிருக்கும் போது, பல்லக்கிலேறிவந்த குசேலரும் தமது இல்லத்தைச் சமீபித்தார். தாம் முன்னர் வசித்திருந்த கூரைவீடானது அநேக சிறப்புக்கள் பொருந்திய குபேரனுடைய மாளிகையாயிருந்ததைக் கண்டு, மயங்கி, இது நம் வீடல்லவென்றெண்ணி அப்பாற் செல்ல எண்ணுகையில், சுசீலை கூந்தலில் புஷ்பங்களை யணிந்து, நவரத்ன பூஷணங்களைப் பூண்டு, தோழிமார்களுடன் சுபங்களாகிய தீபம், கண்ணுடி முதலியவற்ருேடு குசேலர் முதன்முதல் பார்த்த வீட்டினின்று வெளிவர, அதைக்கண்டு இதுவே நமதில்லமென்று துணிந்தார். பிறகு சுசீலை அவரை எதிர்சென்றழைத்து வந்தனங்கள் செய்து, பொற்பீடத்தில் அவரை இருக்கச்செய்து, தோழிகள் தாங்கிக்கொண்டிருக்கும் குடத்தினின்று குளிர்ச்சி பொருந்திய நீரைப் பாதங்களில் விட்டு, தன் கரங்களால் அவருடைய அருமையான பாதங்களைக் கழுவி, ஈரத்தைப் பட்டால் துடைத்து, வாசனைகள் சேர்த்த புஷ்பங்களைச் சாற்றி, தீப ஆராதனை செய்து, ஹாரத்தி சுற்றி, களைப்பு நீங்க அவருக்கு விசிறி, அவரிடம் நிரம்ப பக்தி பூண்டவளாயொழுக, சங்கீத வாத்தியங்கள் இனிய ஓசை எழுப்ப, குசேலர் தமது மாளிகைக்குள் எழுந்தருளினுர்.

வீட்டில் வெள்ளி, பொன், மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், பவழம், கோமேதகம், ரத்னம் முதலியவை குவியல்களாக இருப்பதைக் குசேலர் கண்டார். இவற்ருல்

செய்யப்பட்ட நகைகளைத் தனித்தனியே வைத்துக்கொள்வதற்குப் பெட்டிகளும், தமது இருபத்தேழு புதல்வர்களும் அவரவர்களுடைய விலையுயர்ந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் வைத்தற்குரிய பிரத்தியேகமான அறைகளுள்ள பெட்டிகளும் கணக்கின்றி இருப்பதையுங் கண்டார். பொன் தட்டுகளில் பாலுடன் கலந்த இன்னடிசிலை வேண்டாமென்று சொல்லும் சில பிள்ளைகள்; கூப்பிட்டும் அதனைப் பாராமலே போகும்; சிறிதளவேனும் பசியில்லை என்று சொல்லும். பிள்ளைகளுக்கோ நெற்றியில் வயிரப்பொட்டும், கையில் பொற்கடகமும், காதில் கடுக்கன்களும், இடுப்பில் பொன் அரைநாணும், பாதங்களில் அழகிய சிறு சிலம்புகளும் விளங்கின. ஒருவரோடொருவர் இன்புற விளையாடிக்கொண்டு கூச்சலிடுவதையுங் கண்டார். சமையலறையில் வெண்மை நிறமுள்ளதும் அரும்புகள் போன்றதுமான அரிசியும், பொன்னிறமுள்ள பருப்பும், பலவகைக் கறிகாய்களும், இன்னும் சமைத்தற்குரிய வேறு சாதனங்களும், அநேகவித பாத்திரங்களும் இருக்கக்கண்டார். இவையெல்லாம் எனையாளும் திருமாலின் செயலன்றோவென்று அங்கங்கே நின்றுநின்று கண்ணன் கழலிணைகளையே மனக்கண்ணால் கண்டு களித்தார்.

இத்தகைய பல சிறப்புக்களையும் செல்வத்தையும் பார்த்துக்கொண்டிருக்கையில், குசேலருடைய மனைவி அவரை எண்ணெய் தேய்த்துக்கொண்டு நீராடியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, பணியாளர் ஒரு பீடத்தைக் கொண்டுவந்து வைத்தார்கள். குசேலரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அதன்மேல் உட்கார்ந்து, மணமுள்ள எண்ணெயை சிரசின்மேலும் உடம்புமேலும் அவர்கள் வார்த்துத் தேய்த்தபின் நீராடுமிடத்துக்குச் சென்றார். உஷ்ணமான

நீரில் நீராடியபின்னர் தம்முடைய நித்திய கர்மாநுஷ்டானங்களைச் சரிவர முடித்துக்கொண்டு, பிறகு போஜனம் செய்ய வந்த விருந்தினர்களோடு சமையலறையை அணுகினர். அணுகியதும், பரிசாரகர் போட்டுவைத்திருந்த ஆசனத்தில் கிழக்குமுகமாக உட்கார்ந்து, அறுவகைச் சுவையுடன் கூடிய அமுதை, 'இவை எம்மிறைவனும் கண்ணனுக்குரியவை' என்று தியானித்துப் புசித்தபின்னர் குசேலரும் ஏனையோரும் அவ்விடம் விட்டேகினர். கைகால் சுத்தம் செய்து, நித்தியானுஷ்டானங்களையும் செய்தனர். பிறகு, சந்தனம், புஷ்பம், மணமுள்ள தாம்பூலம் முதலியவை எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட பிறகு, அவரவர் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். குசேலர் தமக்குக் கடவுளருளால் கிடைத்த பொருளைத் தானதருமங்களில் விசேஷமாக வழங்கி வந்தார்.

இவ்வாறு சிறப்பாக இல்லறம் நடத்திவரும்போது, ஒருநாள் சுதாமர் தமது அந்தப்புரம் சென்று அங்கிருந்த சுசீலையையும் குழந்தைகளையும் வெளியே இருக்கும்படி சொல்லி, கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு, தனிமையில் பின் வருமாறு நினைக்கலாயினர். 'பொருளைச் சம்பாதித்தலினும், அதனைப் பாதுகாத்தலினும், அதனைப் பரிபாலித்தலினும், கடைசியாக அதனைப் போக்கடித்தலினும், எப்போதும் துன்பமேயன்றி இன்பமில்லை. அவ்வாறிருக்க, அறிவுடையோர் மறந்தும் பொருளைத் தேடுவரோ? தேடார். ஒருசமயம் ஊழின்வழியே செல்வம் அவர்களை வந்தடைந்தாலும், அதில் இச்சைகொள்ளாதவராய், யாதொரு பற்றும் வைக்கமாட்டார்கள். ஆகவே, பொருளீட்டும் நிமித்தம் இவ்வுலகில் படவேண்டிய கவலை அவர்களுக்கிராது. ஆனதால்

அவர்கள் சுகத்தையே அடைவார்களேயன்றி ஒருபோதும் துன்பப்படார்.

'ஒருவன் ஐம்புலன்களையும் தன்வசப்படுத்திக்கொள்ளுதலே மேன்மையாகும். இந்திரிய உணர்வுகளும், பிராணவாயுவும், மனமாகிய உட்சரீரமும், உருவசரீரமுமே பிறவித்துன்பத்தை நீக்கிக்கொள்வதற்கு இடையூறாகவிருக்கும்போது, அச்சரீரங்களுக்குப் பொருந்தி நிற்கும் வேறு வெளிவிஷயங்களாகிய பொருள் முதலியன தடையா யிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? ஆகவே புலன்கள் அநுபவித்தற்கு ஏற்படுத்தப்பட்ட பல விஷயங்களிலும் விருப்பமின்றி யிருத்தல்வேண்டும். அவ்வாறிருப்பின் பிறவித்துன்பமே அணுகாது. சரீரமே நான் என்றும், பொருள்கள் என்னுடையவையென்றும் கூறி, உலகப்பற்றை அதிகரிக்கும்படிச் செய்வதை ஒருவகை மயக்கம் அல்லது மதியீனம் என்றே சொல்லவேண்டும். அது துன்பத்தையே விளைவிக்கும். அம்மயக்கத்துக்கு எப்படியாகிலும் ஒருவன் உட்படாமலிருப்பானாயின், அவன் பெரும்பேறாகிய மோக்ஷத்தை அடைவானென்றும், அதற்குட்பட்டிருப்பவன் பிறப்பாகிய வலையில் சிக்குண்டு உழன்று வருந்துவானென்றும், மோக்ஷத்தை அடைந்தவனும் அவா தோன்றப் பெறுவானாயின், அது அவனுக்கு மறதியை உண்டுபண்ணி மீண்டும் பிறவித் துன்பத்துக்கு ஆளாக்கி விடுமென்றும் வேதநூல்கள் எடுத்தோதுகின்றன. ஆகவே பிறப்புக்கேதுவாகிய ஆசை முதலிய விஷயங்களை அறவே யொழித்தல் அவசியம்' என்று குசேலர் தமக்குள்ளே நன்றாக ஆலோசித்துத் தீர்மானம் செய்துகொண்டு, கண்ணபிரானைப் பலவாறு தோத்திரிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீ வைகுண்ட நிகேதனனுகிய திருமால் அடியார்கள் உய்யும்பொருட்டும், துஷ்டர்களைக் கண்டித்து தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டும், தமது இச்சையாலேயே உலகத்தில் அவதரித்துச் செய்தருளிய அருட்செயல்களை உன்னியுன்னிப் புகழ்ந்துபுகழ்ந்து தேகம் புளகாங்கிதம் கொள்ளவும், கண்களில் ஆனந்தபாஷ்பம் உண்டாகவும், கைகளைச் சிரசின்மேலுயர்த்தி நெடுநேரம் சுதாமர் தோத்திரித்தார். தோத்திரிக்கையில், யானையைக் காத்த வள்ளல், சூரிய சந்திராதிகள் வலது இடதுபக்கங்களில் முறையே விளங்க, சங்கு சக்கரங்களை ஏந்திய திருக்கரங்களுடனும், திருமகளையும் கௌஸ்துபமணியையும் திருமார்பிலணிந்த திருக்கோலத்தோடும், தருமம் தலையோங்கவும், உலகம் இன்புறவும் வெளிவந்து சுதாமருக்குத் தரிசனமளித்தார்.

அவரைப் பார்த்தவளவிலே அந்தப் பக்த சிகாமணி கரைபேர்த்த வெள்ளம்போல ஓடி எழுந்து, அவர் திருவடிகள்மேல் விழுந்து, பின் எழுந்துநின்று, சிரசின்மேல் கை கூப்பி, மும்முறை வலம்வந்து, கண்கள் ஆனந்தபாஷ்பம் சொரிய, இன்னொருதரம் நமஸ்கரித்து எழுந்து, ஆராதித்து வணங்கிப் பின்னர் சில இயம்பத்தொடங்கினுர். 'திவ்யக்ஷேத்திரங்களையும், வனங்களையும், பெரிய மலைகளையும் அடைந்து ஐம்பொறிகளை அடக்கிப் பெருந்தவம் இயற்றுவோருக்கே கிடைக்கத்தக்கதான இந்தத் திவ்விய தரிசனமானது அறிவில்லாதவனும் உலகமாயையில் விருதாவாக அலைந்துழலுபவனுமான அடியேனுக்குக் காணக்கிடைத்ததே! தேவரீர் கருணைக்கும் ஓர் அளவுண்டோ? கிருபாநிதியே! அடியேனுல் சுவாமிக்குச் செய்யக்கூடியது என்னவிருக்கிறது? கைம்மாறு கருதாமல் குளிர்ந்த மழையைப் பெய்

வித்து உலகத்தில் உள்ளார்க்குப் பெரும் பயனளிக்கும் மேகத்துக்கு அவ்வுலகோர் செய்யக்கூடிய பிரதிதான் ஏதேனுமுளதோ? கருணைசமுத்திரமே!' என்றிவ்வாறு மனம் நெக்குருக, பலவகைத் துதிகளைக் கூறி நிற்கும் பக்தரைப் பார்த்து திருமால், 'இனி நீ வேண்டுவது யாது?' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக் கேட்டதும், 'இனி நான் உய்ந்தேன்' என்று கூறி, சிரமேற் கைகூப்பியவராய், 'அறிவுடையோர் விரும்பாத இச் செல்வமே பிறவிகளுக்கேதுவாகும். நன்காராய்ந்து பார்த்தால், எள்ளளவும் இன்பந்தராத இந்தச் செல்வத்தை ஞானிகள் வெறுக்கிறார்கள். திரிகரணங்களாலும் நாள்தோறும் தேவரீர் அடியார்களுடைய பாதங்களையே தியானித்துக்கொண்டிருப்பதைத்தவிர எனக்குப் பிறிதொன்றிலும் மனம் செல்லாது. முதலில் செல்வத்தை இழிவாகக் கருதிப் பிறகு அதைக்கொள்ள விரும்பினேன். இவ்வாறு வைராக்கியத்தை விட்டுவிட்டேன். அறிவுடையோர் என்னை எள்ளனம் செய்யாரோ? ஆகவே நான் இச் செல்வத்தை வெறுக்கின்றேன். இதற்குமுன்னே எனக்கிருந்த வறுமையையே தந்தருளல் வேண்டும்' என்று குசேலர் பெருமான் பிரார்த்தித்தார்.

இவ்வசனங்களைக் கேட்ட கண்ணன் புன்முறுவல் செய்து, 'எவ்வித நன்மைக்கும் சாதனமாகவுள்ள பொருளை விட்டுவிட்டு நீ வறுமையை விரும்புவதன் காரணம் யாது?' என வினவினர்.

'அதன் காரணத்தை அடியேன் முன்னமேயே தெற்றென கூறியிருக்கவும், ஒன்றும் அறியாதவர்போல இப்போது வினவுதல் விளையாட்டோ? நினது திருவடிகளை இடை

விடாமல் தியானித்திருப்பதற்கு இப்பொருள் எனக்கு ஓர் இடையூறாக விருக்கிறது. நிலையற்ற இவ்வுலகவாழ்க்கையில் அடியேன் உழன்று வீணே காலங்கழித்து வருதல் தகுதியோ? என்னைக் காத்தருளவேண்டும்' என்று விடை கூறிய குசேலர் மீண்டும் அவரது திருவடிகளில் விழ, திருமால் அருள்பாலித்தார்.

'இனி நீ துன்புறவேண்டாம். தேவர்களுக்கும் கிடைக்கப்பெறாத பேரின்பத்தைப் பெறுவாய்' என்று அவரைத் தேற்றி, குசேலரைத் தடவிக்கொடுத்து, 'உனக்குச் செல்வமளித்தது உன்னுடைய குடும்பத்தை உத்தேசித்தேயன்றி உனக்கல்ல. உனது மனம்போல உன் மனைவிமக்களுடைய மனமும் துறவு பூணுமோ? உன்பொருட்டு அவர்கள் துன்புறுதல் தகுதியாமோ? என்னைத் தியானித்தலே செல்வம் என்று நினைத்திருக்கின்றனை. உலகத்தின் உண்மைப் பொருளை உள்ளபடியே அறிந்தவர் எங்கிருப்பினும் உண்மையல்லாதவற்றைத் தேடுவார்களோ? ஆகவே நீ நீதி மாறாது எப்போதும் ஒரே மனத்தனாய் இருப்பாய். மந்திரங்கள் கைவசமுள்ளவரிடம் பாம்பின் விஷம் பலிக்காததுபோல நீ அச்சமுறும் செல்வம் உன்னை ஒன்றும் செய்யாது. மெய்ப்பொருளறிந்தோர் தாமரை இலையின் மேலுள்ள நீர் எப்படி அந்த இலையுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறதோ, அப்படியே இவ்வுலகத்தில் பற்றற்று, உலகவாழ்க்கையில் இருந்தும் இல்லாதவர்போல ஒழுகுவர். என்னைப் போற்றும் உனக்குச் செல்வத்தால் யாதொரு குறையும் உண்டாக மாட்டாது. இவ்வுலகில் நீடூழி வாழ்ந்து கடைசியாக உலகத்தை நீத்து ஒப்பிலா நிலையுள்ள இன்பத்தைப் பெறுவாய் என்ற வரன் இப்போதே அளித்தேன். மீண்டும் பொருளை வெறுப்பையேல், நீ திருமகளின் கடாக்ஷத்தை இழந்து,

அதனால் உன்னிடமிருந்து அவள் நீங்க, நாமும் உன்னைவிட்டுப் பிரிவோம். இதனை யறியவும்' என்று திருவாக்களித்து திருமால் மறைந்தருளினார்.

மறையவே, குசேலர் மனம் வாடியிருந்த செடி நீர் ஊற்றத்தால் செழித்துத் தளிர்த்து எழுவதுபோல முன்னிருந்த சோர்வு நீங்கி, கடவுளது திருவுள்ளம் இப்படி யிருந்ததென்பதை உள்ளபடி அறிந்து, இன்புற்று, திருமாலைத் துதித்தலாகிய பெரிய சுவையையே அநுபவித்து நீடூழி வாழ்ந்தார்.

சுபம்

C. L. S. PRESS, MADRAS—1929

வியாசக் குறிப்புகள்

1. 'வறுமையிற் செம்மை' என்ற குணம் குசேலரிடம் இருந்ததை விளக்குக.

2. சுசீலையின் குணாதிசயங்களைத் தெளிவாக வரைக.

3. குசேலர் கண்ணனிடம் செல்லுதற்கு சுசீலை எடுத்துக் கூறிய நியாயங்களைச் சுருக்கமாக எழுதுக.

4. பொருளைப்பற்றிக் குசேலர் கூறுவதென்ன?

5. முயற்சியின் மேன்மையை சுசீலை எவ்வாறு எடுத்துக் கூறினாள்?

6. துவாரபாலகர்களைச் சுற்றிலுமிருந்த புல்லறிவாளர் குசேலரைப் பார்த்துக் கூறியவற்றிற்குத் துவாரபாலகர்கள் பகர்ந்தவை யாவை?

7. துவாரபாலகர்கள் குசேலரை என்ன வேண்டிக்கொண்டார்கள்? ஏன்?

8. கண்ணனது அரண்மனைச் சிறப்பை விவரமாக எழுதுக.

9. பெரியோர் நட்பைப்பற்றிக் கண்ணன் கூறுவதென்ன?

10. கண்ணன் அவல் தின்னுங்கால் நடந்த விருத்தாந்தமென்ன?

11. குசேலர் கண்ணனிடம் பொருள் கேட்டனரோ? ஏன்?

12. குசேலர் இல்லறம் நடத்திய வகையை எழுதுக.

13. விசேஷ பொருளைப்பெற்ற குசேலர் மீண்டும் வறுமையைப்பெற ஏன் விரும்பினார்?

14. வறுமையை விரும்பிய குசேலரை ஸ்ரீ கண்ணபிரான் எவ்வாறு தேற்றினார்?